# சட்டக்கதிர்


சட்ட மாத இதழ்
SATTAKADIR TAMIL MONTHLY


''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்''


நவம்பர் 2025 | கார்த்திகைத் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | November - 2025 | Issue - 1 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR



அக்டோபர் 2ஆம் தேதி காந்தி பிறந்த நாளில் அமெரிக்காவில் வாஷிங்டனில் நகரில் நடைபெற்ற 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் எதிரில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலை முன்னின்று உலக அமைதிக்கான உறுதிமொழியை மாநாட்டு தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் வாசிக்க அனைத்து மாநாட்டு பேராளர்கள் உறுதிமொழியினை எடுத்தார்கள்.

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

**தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்**

**நவம்பர் 2025** http://epaper.sattakadir.com **கார்த்திகைத் திங்கள் இதழ் 2025**


## பொருளடக்கம்


1. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவிற்குள் வரலாமா?
   – தலையங்கம் 5

2. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 498ஏ–ஐ தவறாக பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவது கவலையளிப்பதாக உள்ளது
   – இந்திய உச்சநீதிமன்றம் 7

3. பாதுகாக்கப்பட்ட உடைமைகள் பாதுகாக்கும் சட்டமும் செயற்பாடும்
   – இந்திய உச்சநீதிமன்றம் 14

4. ‘சமதரும’ மற்றும் ‘மதசார்பற்ற’ என்ற சொற்களை இந்திய அரசமைப்பு சாசனத்தில் சேர்த்தது நியாயமானதும் தேவையானதும் ஆகும்.
   – இந்திய உச்சநீதிமன்றம் 21

5. மூதாதையர் சொத்து என நிரூபணமாகி விட்டால், பிரதிவாதிதான் அதை தனது வருமான கணக்கில் வாங்கப்பட்டது என மெய்ப்பிக்க வேண்டும்
   – சென்னை உயர்நீதிமன்றம் 25

7. உடன்படிக்கையும் அது முறிக்கப்படும் முறையும்
   – சென்னை உயர்நீதிமன்றம் 34

8. தலையிடுவதற்கான அதிகார வரம்பு இல்லா நிலையில் இசைவுத் தீர்வு வழக்கில் இந்நீதிமன்றம் தலையிட்டது தவறு.
   – சென்னை உயர்நீதிமன்றம் 43

9. காற்றாலைகள் நிறுவலுக்கு ஊராட்சி ஒன்றிய அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்டு தேவையாகும்.
   – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) 50

10. பணியின்போது ஏற்படும் ஊனமும் பாதுகாப்பும்
    – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 57

11. சுதந்திரமா அல்லது படிநிலை அதிகாரமா: உயர்நீதிமன்றங்களில் நேரடியாக தாக்கலாகும் முன் பிணை மனுக்கள் மீதான விவாதம்
    – எம்.ஏ.ரஷீத் 60

12. 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம்
    – தநா மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 67

13. 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற சட்டம்
    – தநா மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 76

14. 12 ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு–2025, வாஷிங்டன் டி.சி, அமெரிக்கா 81

## சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்
திரு.மா.வெற்றிவேல்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு.வி.கதிரவன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை

| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.

**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


## சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''**சட்டக்கதிர்**'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

“முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு”

கார்த்திகைத் திங்கள் இதழ்

சட்டம் – 34 நவம்பர் 2025 கதிர் – 1

## வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவிற்குள் வரலாமா?

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தங்கள் கிளைகளை இந்தியாவிற்குள் கொண்டு வரலாம் என்று சமீபத்தில் மத்திய அமைச்சரவை கூடி முடிவெடுத்துள்ளது.

இந்தியாவில் 100 கோடிக்கு மேல் உள்ள மக்கள தொகையில் 25 வயது நிரம்பாத இளைஞர்கள் 55 கோடி உள்ளனர். அகில உலக அளவில் இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியாவாகவே விளங்கி வருகிறது. இவர்கள் அனைவருக்கும் முறையான பள்ளிக் கல்வியையும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும், பட்டப்படிப்பு, தொழிற்கல்வி, மருத்துவகல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றையும் தர வேண்டிய பொறுப்பு மத்திய மாநில அரசுகளுக்கு உள்ளது.

இதை கருத்தில் கொண்டு கடந்த 20 ஆண்டுகளாக இந்தியா முழுவதும் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் பொறியியல் பட்டதாரிகளையும், மருத்துவ பட்டதாரிகளாகவும் உருவாகியுள்ளது. இதில் வசதி படைத்தவர்களும், திறமையானவர்களும் வெளிநாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு போய் உயர்கல்வியும் ஆராய்ச்சிக் கல்வியும் படித்து விட்டு அங்கேயே வேலைக்கும் சேர்ந்து நிரந்தரமாக தங்கி விடுகிறார்கள் அல்லது இந்தியாவிற்கு திரும்பி வந்து அவர்கள் தகுதிக்குத் தக்க வேலையில் சேர்ந்துவிடுகிறார்கள். சுயமாகவும் தொழில் தொடங்குகிறார்கள்.

வளர்ந்த நாடுகளாக கருதப்படுகின்ற குறிப்பாக ஆங்கிலத்தை பயிற்று மொழியாக கொண்டிருக்கிற நாடுகளாகிய, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஈடு இணையாக மிக உயர்ந்த கல்வியை இந்தியாவும் அளித்து வருகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாணவர்கள் உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக் கல்விக்கும் வெளிநாடு செல்வதை தடுத்து இங்கேயே மாணவர்கள் கற்க அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களின் கிளைகளைத் தொடங்க அனுமதி அளிப்பதென்று முடிவெடுத்துள்ளது. இதனால் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்கள் எடுத்து செல்லும் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்த முடியும் என மத்திய அரசு நம்புகிறது. மேலும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இணையாக நம் பல்கலைக்கழகங்கள் உயரும் எனவும் நினைக்கின்றது.

55 கோடி இந்திய இளைஞர்களுக்கு இப்போது இங்குள்ள கல்வி நிலையங்கள் போதாது. வெளிநாடுகளுக்கு வந்து கிளையினை திறக்கட்டுமே எனவும், இந்த வழியாகவும் உயர்கல்வி வழங்கட்டுமே எனவும் மத்திய அரசு நினைக்கிறது. ஆனால் இந்தியாவில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் கிளைகளை அமைப்பது இந்திய சட்டத்திற்குட்பட்டே இருக்கவேண்டும் என்பதும், மாறாக அந்நாடுகளின் சட்டத்திட்டப்படி உருவாக்கப்படுவது இந்தியாவினுடைய தரத்தை உலக அளவில் குறைத்துவிடும் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வளர்ச்சி பெறாத நாடுகள் தான் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளைத் தொடங்க அனுமதிக்கின்றன அல்லது சிறிய நாடுகள் அனுமதிக்கின்றன. ஆனால் இந்தியாவில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு ஈடு இணையாக இந்தியப் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள், ஐஐடிகள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழக கிளைகளை அனுமதிப்பது நம்நாட்டின் கல்விமுறையை நாமே குறைத்து மதிப்பிடுவதாகவும், நாம் தரமான கல்வியைத் தரக்கூடிய நிலையில் இல்லை என்று உலகத்திற்கு காட்டிக்கொள்வதாகவும் இது ஆகிவிடும். இதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் இந்தியாவில் வருவது இந்தியாவின் சுயமரியாதைக்கு இழுக்கானது என்று கருதுகிறோம். இந்திய பல்கலைக்கழகங்கள் தரத்தை மேலும் மேலும் உயர்த்தி வசதிகளை மேலும் பெருக்கி அதன் மூலம் வெளிநாட்டிலுள்ள மாணவர்கள் இங்கே வந்து நம் பல்கலைக்கழகங்களில் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர இதைவிட்டு விட்டு வெளிநாட்டின் பல்கலைக்கழக கிளைகளை இந்தியாவில் தொடங்குவது இந்தியாவை மிகவும் தரம் தாழ்த்த கூடும். உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு மிகவும் குறையும்.

அப்படி வரும் பல்கலைக்கழகங்கள் இந்தியாவின் சமூக கொள்கையான இட ஒதுக்கீட்டை கடைப்பிடிக்குமா என்பதும் கேள்விக் குறியே, இந்தியாவிலுள்ள பணக்கார வீட்டு பிள்ளைகளுக்கும், தனவந்தர்களின் மகன்களுக்கும், தொழிலதிபர்கள் மகள்களுக்கும், அமைச்சர்கள், பெரிய பெரிய அதிகாரிகளின் பிள்ளைகளுக்கும் தான் அவை பயன்படுமே தவிர ஏழை இந்தியர்களுக்கு பயன்படுமா என்பது கேள்விக்குறியே. மற்றும் இதனால் இந்திய பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர் களுக்கும் வெளிநாட்டு கிளைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கும் இடையே பெரும் இடைவெளியும் ஏற்படும். இவற்றையெல்லாம் தீர ஆலோசிக்காமல் மத்திய அமைச்சரவை இந்த முடிவினை எடுத்திருப்பது துரதிருஷ்டவசமானது.

இந்திய அரசியல் சட்டப்படி கல்வி மாநில பட்டியலில் இருந்ததை 1981 ஆம் ஆண்டு பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதற்கு பிறகு கடந்த 25 ஆண்டு காலமாக மத்திய அரசு தினமும் ஓர் சட்டத்தினை நிறைவேற்றி மாநில அரசாங்கத்திற்கு எந்தவித அதிகாரமும் இல்லாமல் செய்து விட்டது. மாநில அரசு கைகட்டி நின்று இச்செயலை பார்த்து வருகிற நிலையினை உருவாக்கி உள்ளது.

பள்ளிகள் தொடங்க அனுமதி பெறவேண்டுமா, கல்லூரிகள் தொடங்க அனுமதி பெற வேண்டுமா, தொழில்நுட்பக் கல்விகள் தொடங்க அனுமதி பெறவேண்டுமா, மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதி பெறவேண்டுமா, நர்ஸ் பயிற்சிக் கல்லூரி தொடங்க அனுமதி பெறவேண்டுமா, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தொடங்க அனுமதி பெறவேண்டுமா – இப்படி எந்த கல்வி நிறுவனம் தொடங்க வேண்டுமென்றாலும் அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசு தன் கையில் எடுத்துக் கொண்டு மாநில அரசை வெறுமனே வேடிக்கை பார்க்க வைத்து விட்டது. இதன் உச்ச கட்டம் தான் இந்தியாவிற்குள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை அனுமதிப்பது. இவ்வாறு மாநில அரசின் உரிமையில் தலையிடுவது உள்ளூர் கல்விக்கும் சமூக அமைப்புக்கும் பண்பாட்டிற்கும் சவாலாக மாறிவிடும். மாணவர்களின் எதிர்காலமும் பாகுபாடு உள்ளதாக மாறிவிடும். ஆகவே மத்திய அரசு இந்த முடிவினை மறுபரிசீலனை செய்வதே சாலச் சிறந்ததாகும். வெளிநாட்டு கல்வி போல நம் நாட்டு கல்வி இருக்க வேண்டும் என்ற நிலை தேவையில்லை. நம்நாட்டு கல்வி போன்று வெளிநாடுகள் தனது கல்வி முறையை மாற்றும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதுவே காந்தி கண்ட இந்தியாகவும் நேரு உருவாக்கிய இந்தியாகவும் விளங்கும். மாநில சுயாட்சி கோரிவரும் மாநில கட்சிகளான தி.மு.க., தெலுங்குதேசம், கேரளா காங்கிரஸ், சிவசேனா அகாலிதளம், தேசியமாநாடு கட்சி என பல்வேறு கட்சிகளும் இப்பிரச்சினை தீர ஆராயவேண்டும. இதற்கென கல்வியாளர் குழுவினை ஒவ்வொரு மாநில கட்சியும் அமைக்க வேண்டும். அவர்களின் ஆலோசனைகளை அரசியல் கட்சிகள் கேட்கவேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழக கிளை வருவதால் ஏற்படும் ஏற்றத் தாழ்வை தடுக்க வேண்டும். அதனையே இன்றைய இந்தியா விரும்புகிறது.

– ஆசிரியர்

# இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 498ஏ-ஐ தவறாக பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவது கவலையளிப்பதாக உள்ளது

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திருமதி பி.வி.நாகரத்னா**
**நீதிபதி திரு ஆர்.மகாதேவன்**
SLP (Crl) No. 4069/2024
**தீர்ப்பு நாள்: 24, செப். 2025**
**(2025 INSC 1152)**

**ஷோபித் குமார் மிட்டல்** ...**மேல்முறையீட்டாளர்**
**–எதிர்–**
**உத்திரப் பிரதேச மாநில அரசு மற்றும் ஒருவர்** ...**எதிர்மனுதாரர்கள்**

## தீர்ப்பு

**நீதிபதி பி.வி.நாகரத்னா**

1. சிறப்பு அனுமதி கோரல் அனுமதிக்கப் பட்டது.

2. இந்த மேல்முறையீடு, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 27.02.2024 தேதியிட்ட குற்ற வியல் இதர ரிட் மனு எண் 2676/2024–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக எழுந்தது ஆகும். அந்த உத்தரவில், இந்திய அரசிய லமைப்பின் சரத்து 226–ன் கீழ் குற்றஞ்சாட்டப் பட்டவர்/மேல்முறையீட்டாளர் சோபித் குமார் மிட்டல் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதன் மூலம், மீரட், சிவில் லைன்ஸ் காவல் நிலையத்தில் 09.11.2023 தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.347/2023 தொடர்பாக எழுந்த நடவடிக்கைகளை ரத்து செய்ய நீதிமன்றம் மறுத்துவிட்டது. இந்த முதல் தகவல் அறிக்கை, புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2, திருமதி. ஜோதி கார்க் என்பவரால் அவரது கணவர் மோஹித் மிட்டல், மாமியார் சஷி மிட்டல் மற்றும் இங்குள்ள மேல்முறை யீட்டாளர் எண் 1 (அதாவது, அவரது கணவரின் சகோதரர்) ஆகியோருக்கு எதிராக, இந்திய தண்டனைச் சட்டம், 1860–ன் (சுருக்கமாக ‘இதச’) பிரிவுகள் 323 மற்றும் 498அ மற்றும் வரதட்சணைத் தடைச் சட்டம், 1961–ன் (சுருக்கமாக ‘வரதட்சணைச் சட்டம்’) பிரிவுகள் 3 மற்றும் 4–ன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

3. சுருக்கமாக வழக்கின் பொருண்மைகள் யாதெனில், புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2–க்கு குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறையீட்டாளரின் சகோதரரான மோஹித் மிட்டலுடன் 01.05.2014 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆகி சில மாதங்களுக்குப் பிறகு, திருமண உறவில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக, புகார் தாரர்/எதிர்மனுதாரர் எண் 2 தனது கணவர் வீட்டை விட்டு வெளியேறி, தனது பெற்றோர் வீட்டில் வசிக்கத் தொடங்கினார். அதன் பின்னர், இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் எதிராக பல திருமணச் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கினர். அவை தற்போதைய மேல்முறை யீட்டின் உண்மைகளுக்குத் தேவையற்றவை ஆகும்.

4. 09.11.2023 அன்று, புகார்தாரர்/எதிர் மனுதாரர் எண்.2 தனது கணவர், மாமியார் மற்றும் இங்குள்ள குற்றம் சாட்டப்பட்ட/மேல் முறையீட்டாளருக்கு எதிராக, இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவுகள் 323 மற்றும் 498அ மற்றும் வரதட்சணைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4–ன் கீழ், மீரட், சிவில் லைன்ஸ் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண் 347/2023 பதிவு செய்தார்.

5. 09.11.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கையை ஆராய்ந்ததில், அதில் உள்ள குற்றச்சாட்டுகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

i) புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2-ம் நபருக்கு மோஹித் மிட்டலுடன் திருமணம் நடந்த பத்து நாட்களுக்குள், அவர் வரதட்சணைக்காக துன்புறுத்தலை எதிர்கொள்ளத் தொடங்கினார்.

ii) மேல்முறையீட்டாளர், புகார்தாரர்/எதிர் மனுதாரர் எண் 2-ன் கணவர் மற்றும் மாமியாருடன் சேர்ந்து, அவரை ஒரு சம்மதக் கடிதத்தை எழுதச் செய்தார். அதில் அவரது மாமா மற்றும் நான்கு உறவினர்கள் கையெழுத்திட்ட பிறகு, அவர் தனது கணவர் வீட்டில் வசிக்க அனுமதிக்கப்பட்டார்.

iii) 10.12.2022 அன்று, வரதட்சணை தொடர்பான தொடர்ச்சியான துன்புறுத்தல் காரணமாக, புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண்.2-ன் மூளையில் ஒரு நரம்பு வெடித்ததன் விளைவாக அவரது வலது கையும் வலது காலும் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டன. இதனால், புகார் தாரர்/எதிர்மனுதாரர் எண் 2 (பிசியோதெரபி) உடலியக்க மருத்துவம் மேற்கொள்ள வேண்டி யிருந்தது.

6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டதால் பாதிக்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட/ மேல்முறையீட்டாளர், புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2-ன் மாமியார் மற்றும் கணவருடன் சேர்ந்து, இந்திய அரசியலமைப்பின் சரத்து 226-ன் கீழ் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 2676/2024-ஐ தாக்கல் செய்து, மு.த.அ.எண்.347/2023-ஐ ரத்து செய்யக் கோரினர்.

7. அலகாபாத் உயர்நீதிமன்றம், 27.02.2024 தேதியிட்ட ஆட்சேபனைக்குரிய உத்தரவின் மூலம், அந்த முதல் தகவல் அறிக்கையில் இருந்து எழும் நடவடிக்கைகளை ரத்து செய்ய மறுத்துவிட்டது. அந்த ரிட் மனுவில் விடுக்கப்பட்ட கோரிக்கை மு.த.அ-ஐ ரத்து செய்யக் கோருவ தாக இருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட/மேல் முறையீட்டாளர் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-ன் பிரிவு 41அ-ன் கீழ் பாதுகாப்பு வழங்குவதற்கான நிவாரணத்தை மட்டுமே நாடினார் என்றும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது; மேலும், அந்த மு.த.அ-ஐ ஆராய்ந்ததில், உடனடியாக கவனிக்கத்தக்க குற்றத்திற்கான முகநோக்கு நிலை வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது என்றும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது.

8. 27.02.2024 தேதியிட்ட ஆட்சேபனைக் குரிய உத்தரவால் பாதிக்கப்பட்ட குற்றம் சாட்டப் பட்ட/மேல்முறையீட்டாளர், 09.11.2023 தேதி யிட்ட மு.த.அ. எண் 347/2023-ஐ ரத்து செய்யக் கோரி தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

9. குற்றம் சாட்டப்பட்ட மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர், எதிர்மனுதாரர்-மாநில அரசு மற்றும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் ஆகியோரின் கற்றறிந்த வழக்கறிஞர் ஆகியோரின் வாதங் களை நாங்கள் கேட்டோம். ஆவணத்தில் உள்ள வற்றை நாங்கள் ஆய்வு செய்துள்ளோம்.

10. கற்றறிந்த வழக்கறிஞர்களால் முன் வைக்கப்பட்ட வாதங்களையும், ஆவணத்தில் உள்ள பொருட்களையும் நாங்கள் முழுமை யாகக் கவனத்தில் கொண்டுள்ளோம்.

11. இந்த வழக்கில், முதல் தகவல் அறிக்கை யில் உள்ள குற்றச்சாட்டுகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 323 மற்றும் 498Aமற்றும் வரதட்சணைத் தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 தொடர்பானவை ஆகும்.

12. இதச-ன் பிரிவு 323 சுயமாகக் காயம் ஏற்படுத்துவதற்கான தண்டனையைக் கையாள் கிறது.

13. இதச-ன் பிரிவு 498A கணவனாலோ அல்லது கணவரின் உறவினர்களாலோ மனைவிக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமை தொடர்பான குற்றங்களைக் கையாள்கிறது.

14. ஒரு நபர், மற்றொரு நபருக்கு உடல் ரீதியான வலி, நோய் அல்லது பலவீனம் ஆகிய வற்றை ஏற்படுத்தும் எண்ணத்துடன் அல்லது அத்தகைய செயல் அவற்றை ஏற்படுத்தக்கூடும் என்ற அறிவுடன் ஒரு செயலைச் செய்யும்போது, அது இதச-ன் பிரிவு 323-ன் கீழ் தண்டனைக் குரிய குற்றமாகும். அத்தகைய செயல் அல்லது செயலற்ற நிலை, காரணமாக ஒரு வருடம் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய

அபராதம் அல்லது இரண்டுடனும் தண்டிக்கப் படலாம்.

15. அதேபோல், ஒரு கணவன் அல்லது அவரது உறவினர் ஒரு பெண்ணை கொடுமைக் குள்ளாக்கும்போது, அது இதச–ன் பிரிவு 498அ–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்கு மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப் படக்கூடிய சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். இதச–ன் பிரிவு 498அ–ன் விளக்கத்தின் கீழ் உள்ள 'கொடுமை' என்பது, அதில் உள்ள உட்பிரிவுகள் (a) அல்லது (b)–ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் ஏதேனும் ஒன்றை குறிக்கிறது.

- இதச–ன் பிரிவு 498A–ன் விளக்கத்தின் உட்பிரிவு (a)–ன் முதல் பகுதி 'கொடுமை' என்பது, அந்தப் பெண்ணை தற்கொலைக்குத் தூண்டும் தன்மை கொண்ட ஏதேனும் வேண்டு மென்றே செய்யப்படும் நடத்தை என்று தெரிவிக்கிறது.

- உட்பிரிவு (a)–ன் இரண்டாவது பகுதி கொடுமை என்பது, அந்தப் பெண்ணின் உயிர், உடல் உறுப்பு அல்லது ஆரோக்கியத்திற்கு (மனரீதியானதாகவோ அல்லது உடல்ரீதியான தாகவோ இருக்கலாம்) கடுமையான காயம் அல்லது ஆபத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்ட ஏதேனும் வேண்டுமென்றே செய்யப் படும் நடத்தை என்று கூறுகிறது.

- மேலும், இதச–ன் பிரிவு 498அ–ன் விளக்கத்தின் உட்பிரிவு (b) கொடுமை என்பது, அந்தப் பெண்ணையோ அல்லது அவளுடன் தொடர்புடைய எந்தவொரு நபரையும் ஏதேனும் சொத்து அல்லது மதிப்புமிக்க பாதுகாப்புக்கான சட்டவிரோதக் கோரிக்கையை பூர்த்தி செய்யுமாறு வற்புறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் துன்பு றுத்தல் அல்லது அத்தகைய கோரிக்கையை அவரோ அல்லது அவளுடன் தொடர்புடைய யாரேனும் பூர்த்தி செய்யத் தவறியதால் ஏற்படும் துன்புறுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும் என்று கூறுகிறது.

16. மேலும், வரதட்சணைத் தடைச் சட்டத்தின் பிரிவு 3 வரதட்சணை கொடுப்பதற்கோ அல்லது பெறுவதற்கோ ஆன தண்டனையைக் கையாள் கிறது. வரதட்சணை கொடுப்பவர், பெறுபவர் அல்லது கொடுப்பதற்கோ பெறுவதற்கோ துணைபோகும் எந்தவொரு நபருக்கும் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் பதினைந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் அல்லது வரதட்சணையின் மதிப்பு (இதில் எது அதிகமோ அது) விதிக்கப் படும் என்று அது கூறுகிறது. வரதட்சணைத் தடைச் சட்டத்தின் பிரிவு 4 வரதட்சணை கோருவ தற்கான தண்டனையைப் பற்றி பேசுகிறது. மணமகள் அல்லது மணமகனின் பெற்றோர் அல்லது பிற உறவினர்கள் அல்லது பாதுகாவலர்களிடம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரதட்சணை கோரும் எந்தவொரு நபருக்கும் ஆறு மாதங்களுக்குக் குறையாததும், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடியதுமான சிறைத்தண்டனை யும், பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப் படக்கூடிய அபராதமும் விதிக்கப்படும் என்று அது கூறுகிறது.

17. தற்போதைய வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், முதல் தகவல் அறிக்கையை ஆய்வு செய்த பின்னரும், மேல்முறையீட்டாளருக்கு எதிராக 09.11.2023 தேதியிட்ட முதஅ எண்.347/2023–ல் இருந்து எழும் இதச–ன் பிரிவுகள் 323 மற்றும் 498A மற்றும் வரதட்சணைத் தடைச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவற்றின் கீழ் உள்ள குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய மறுத்தது என்பது உயர்நீதிமன்றம் எடுத்த சரியான முடிவா என்பதே பரிசீலிக்க வேண்டிய முக்கியப் பிரச்சினை ஆகும்.

18. முதல் தகவல் அறிக்கையை படிக்கிற போதே, புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண்.2–ன் குற்றச்சாட்டுகள் தெளிவற்றதாகவும் மற்றும் பொதுவானதாகவும் உள்ளன என்று தெரிகிறது. இங்குள்ள குற்றம் சாட்டப்பட்டவர்/மேல்முறை யீட்டாளருடன் சேர்ந்து கணவரும் அவரது குடும்பத்தினரும் வரதட்சணைக் கோரிக்கைக் காக தன்னை மனரீதியாகத் துன்புறுத்தினார்கள் என்று கூறுவதைத் தவிர, புகார்தாரர்/எதிர்மனு

தாரர் எண்.2 குறிப்பிட்ட விவரங்களையோ அல்லது துன்புறுத்தல் நடந்த குறிப்பிட்ட சம்பவங்களையோ விவரிக்கவில்லை. கூறப் படும் துன்புறுத்தல் எந்த நேரம், தேதி, இடம் அல்லது முறையில் நடந்தது என்பதையோ அல்லது கோரிக்கையின் தன்மை அல்லது அதன் விவரங்களையோ அவர் குறிப்பிட வில்லை. எனவே, முதல் தகவல் அறிக்கையில் திட்டவட்டமான மற்றும் துல்லியமான குற்றச் சாட்டுகள் இல்லை. மேலும், தான் அடைந்த காயம் மற்றும் நரம்பு சேதத்திற்கும், கூறப்படும் துன்புறுத்தலுக்கும் எப்படி ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை நீதிமன்றத்தில் நிரூபிக்க புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2 தவறிவிட்டார். இது, இதச–ன் பிரிவு 323–ன் கீழ் தனது மாமியாருக்குத் தண்டனை அளிக்கும் அளவிற்கு இருக்கவில்லை. இதச–ன் பிரிவு 319–ன் கீழ் வரையறுக்கப்பட்ட காயப்படுத்துதல் குற்றத்திற்காக, குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறை யீட்டாளருக்குக் குறிப்பிட்ட பங்கு எதையும் ஒதுக்கும் அல்லது அவரைக் குற்றம் சாட்டும் தொலைதூர அல்லது நெருங்கிய செயலோ அல்லது செயலற்ற நிலையோ முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

மேலும், வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறையீட்டாளர், புகார் தாரர்/எதிர்மனுதாரர் எண் 2–ஐ மனரீதியாகத் துன்புறுத்தினார் என்று வெறுமனே கூறுவது இதச–ன் பிரிவு 498A–ன் கூறுகளைப் பூர்த்தி செய்யாது, குறிப்பாக இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த சக்திவாய்ந்த அம்சம் அல்லது ஆதாரம் எதுவும் பதிவில் இல்லாதபோது. ‘கொடுமை’ என்ற சொல் குறிப்பிட்ட சம்பவங்கள் இல்லாமல் நிறுவப்பட முடியாது. எந்தவொரு குறிப்பிட்ட விவரத்தையும் குறிப்பிடாமல், மேற்கூறிய விதிகளைப் பயன்படுத்தும் இந்த போக்கு, வழக்குத் தொடுக்கும் தரப்பின் வழக்கை பலவீனப்படுத்துகிறது மற்றும் புகார் தாரரின் கூற்றின் நம்பகத்தன்மை குறித்து கடுமையான சந்தேகங்களை எழுப்புகிறது. எனவே, அரசின் குற்றவியல் இயந்திரத்தைத் தூண்டுவதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கும் முதல் தகவல் அறிக்கையில் விடுபட்ட விவரங்களை இந்த நீதிமன்றம் புறக்கணிக்க முடியாது. கொடுமை மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட இத்தகைய வழக்குகளில், பொதுவாகத் தொடர்ச்சியான குற்றச் செயல்கள் இருக்கும், அவற்றின் மீது குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்க, பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராகப் புகார்தாரர் குறிப்பிட்ட வார்த்தைகளில் சுட்டிக்காட்ட வேண்டும். எனவே, குறிப்பிட்ட விவரங்களைக் குறிப்பிடாமல் துன்புறுத்தல் பற்றிய வெறுமனே பொதுவான குற்றச்சாட்டுகள் எந்தவொரு நபருக்கும் எதிரான குற்றவியல் நடவடிக்கை களைத் தொடர போதுமானதாக இருக்காது.

19. நீதிமன்றங்கள் புகார்களைக் கையாளும் போது கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும், மேலும் நீதி தவறுவதையும் சட்ட செயல்முறையின் துஷ்பிரயோகத்தையும் தடுக்க, திருமணத் தகராறுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை மிகுந்த கவனத்துடனும் விவேகத்துடனும் பரிசீலிக்கும்போது நடைமுறை யதார்த்தங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

20. இது சம்பந்தமாக, இந்த நீதிமன்றத்தின் ஹரியானா மாநில அரசு –எதிர்– பஜன் லால் (1992 Suppl (1) SCC 335) (‘பஜன் லால்’) வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும். குறிப்பாக அதன் பத்தி 102–ல் இந்த நீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:

‘102. அத்தியாயம் XIV–ன் கீழ் உள்ள சட்டத்தின் பல்வேறு தொடர்புடைய விதிகளின் விளக்கம் மற்றும் சட்டத்தின் சரத்து 226–ன் கீழ் உள்ள அசாதாரண அதிகாரத்தை அல்லது சட்டத்தின் பிரிவு 482–ன் கீழ் உள்ள உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இந்த நீதிமன்றம் தொடர்ச்சியான தீர்ப்புகளில் வெளிப்படுத்திய சட்டக் கொள்கைகளின் பின்னணி யில், நாங்கள் மேலே பிரித்தெடுத்துள்ள மற்றும் மீண்டும் கொடுத்துள்ளபடி, அத்தகைய அதிகாரம் ஏதேனும் நீதிமன்றத்தின் செயல் முறையின் துஷ்பிரயோகத்தைத் தடுக்கவோ அல்லது நீதியின் முடிவுகளைப் பாதுகாப்ப தற்கோ பயன்படுத்தப்படக்கூடிய வழக்குகளின்

பின்வரும் வகைகளை உதாரணமாக நாங்கள் தருகிறோம். இருப்பினும், எந்தவொரு துல்லிய மான, தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் போதுமான அளவு வழிப்படுத்தப்பட்ட மற்றும் நெகிழ்வற்ற வழிகாட்டுதல்களை அல்லது கடின மான சூத்திரங்களை வகுப்பது சாத்தியமில்லை, மேலும் அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய பல வகையான வழக்குகளின் முழுமையான பட்டியலை வழங்குவதும் சாத்தியமில்லை.

(1) முதல் தகவல் அறிக்கை அல்லது புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அவை மேலோட்டமாகக் கருதப்பட்டு, முழுமையாக ஏற்கப்பட்டாலும் கூட, முதற்கட்ட முகநோக்கில் எந்தவொரு குற்றத்தையும் உருவாக்கவில்லை அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒரு வழக்கை நிறுவவில்லை.

(2) முதல் தகவல் அறிக்கையிலும் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பிறவற்றிலும், சட்டத்தின் பிரிவு 156(1)-ன் கீழ் போலீஸ் அதிகாரிகளால் விசாரணையை நியாயப்படுத்தக் கூடிய ஒரு கவனிக்கத்தக்க குற்றம் வெளிப்படுத்தப் படவில்லை என்றால், சட்டத்தின் பிரிவு 155(2)-ன் எல்லைக்குள் ஒரு நீதித்துறை நடுவர் உத்தரவின் கீழ் தவிர, விசாரணை அனுமதிக்கப்படாது.

(3) முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்ட மறுக்கப்படாத குற்றச்சாட்டுகளும், அதற்கு ஆதரவாகச் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களும் எந்தவொரு குற்றமும் இழைக்கப்பட்டதை வெளிப்படுத்த வில்லை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒரு வழக்கை நிறுவவில்லை என்றால்.

(4) முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் ஒரு கவனிக்கத்தக்க குற்றத்தை உருவாக்காமல், கணிக்க முடியாத குற்றத்தை மட்டுமே உருவாக்கினால், சட்டத்தின் பிரிவு 155(2)-ன் கீழ் கருதப்படும் ஒரு நீதிபதி உத்தரவு இல்லாமல் போலீஸ் அதிகாரி எந்த விசாரணையையும் மேற்கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை.

(5) முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது புகாரிலோ கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் மிகவும் அபத்தமானதாகவும் மற்றும் உள்ளார்ந்த நம்பகத்தன்மையற்றதாகவும் இருந்தால், அதன் அடிப்படையில் எந்தவொரு விவேகமான நபரும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போதுமான அடிப்படை உள்ளது என்று ஒரு நியாயமான முடிவுக்கு ஒருபோதும் வர முடியாது.

(6) சட்டத்தின் எந்தவொரு விதியிலோ அல்லது சம்பந்தப்பட்ட சட்டத்திலோ (எந்தச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை தொடங்கப்பட்டதோ) நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் தொடர்வதற்கும் வெளிப் படையான சட்டத் தடை விதிக்கப்பட்டிருந்தால் மற்றும்/அல்லது சட்டத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட சட்டத்திலோ பாதிக்கப்பட்ட தரப்பினரின் குறைதீர்க்க திறமையான தீர்வு வழங்கும் ஒரு குறிப்பிட்ட விதி இருந்தால்.

(7) ஒரு கிரிமினல் நடவடிக்கை வெளிப் படையாகத் துர்நோக்குடன் இருந்தால் மற்றும்/ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீது பழி வாங்கும் எண்ணத்துடனும், தனிப்பட்ட பகை காரணமாக அவரைப் பழிவாங்க வேண்டும் என்ற மறைமுக நோக்கத்துடனும் இந்த நடவடிக்கை தீங்கிழைக்கும் வகையில் தொடங்கப்பட்டிருந்தால்.

21. மேற்கூறிய நீதித்துறைச் சோதனை களை கவனமாகப் பரிசீலித்ததில், இங்குள்ள குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறையீட்டாளருக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றங்கள் எதுவும் நிரூபிக்கப் படவில்லை என்று நாங்கள் காண்கிறோம். உண்மையில், இங்குள்ள குற்றம் சாட்டப்பட்ட/ மேல்முறையீட்டாளருக்கு எதிரான கொடுமை, மனரீதியான துன்புறுத்தல் மற்றும் சுயமாகக் காயம் ஏற்படுத்துதல் தொடர்பான குற்றச் சாட்டுகள் தெளிவற்றதாகவும் பொதுவான தன்மையுடனும் உள்ளன என்று நாங்கள் காண்கிறோம். எனவே, பஜன் லால் வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இந்த வழக்கின் உண்மைகளுக்கு சரியாகப் பொருந்து கிறது. முதல் தகவல் அறிக்கையில் இருந்து

எழும் தற்போதைய குற்ற நடவடிக்கையைத் தொடர அனுமதிப்பது பொருத்தமானதும் இல்லை. நீதியின் நலனுக்கும் உரியது இல்லை.

22. மேலும், இந்தச் சூழலில், தாரா லக்ஷ்மி நாராயணா –எதிர்– பீகார் மாநில அரசு (2025) 3 SCC 735) என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் அவதானிப்புகளை மேற்கோள் காட்டுவது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். அதில் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது:

‘27. திருமணத் தகராறில் இருந்து எழும் ஒரு குற்றவியல் வழக்கில், குடும்ப உறுப்பினர் களின் பெயர்களை வெறுமனே குறிப்பிடுவது, அவர்களின் செயலில் உள்ள ஈடுபாட்டைக் குறிக்கும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இல்லாமல் இருந்தால், அத்தகைய வழக்குகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும். திருமண உறவில் பிணக்கு ஏற்படும்போது, கணவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரை யும் குற்றம் சாட்டும் போக்கு பெரும்பாலும் உள்ளது என்பது நீதித்துறை அனுபவத்தின் மூலம் நன்கு அங்கீகரிக்கப்பட்ட உண்மை. திட்டவட்டமான ஆதாரம் அல்லது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளால் ஆதரிக்கப்படாத இத்தகைய பொதுவான மற்றும் பரவலான குற்றச்சாட்டுகள் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக இருக்க முடியாது. சட்ட விதிகளின் துஷ் பிரயோகத்தைத் தடுக்கவும், சட்ட செயல் முறையைத் தடுக்கவும், அப்பாவி குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையற்ற தொந்தரவைத் தவிர்க்கவும் நீதிமன்றங்கள் இத்தகைய வழக்கு களில் கவனம் செலுத்த வேண்டும்.

புகார்தாரர்/எதிர்மனுதாரர் எண் 2 இங்குள்ள குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறையீட்டாளருக்கு எதிராக தெளிவற்ற மற்றும் பொதுவான குற்றச் சாட்டுகளை முன்வைத்தாலும், அவற்றை இந்த நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கத் தவறிவிட்டார் என்ற காரணத்தினாலேயே நாங்கள் இவ்வாறு கூறுகிறோம். இத்தகைய நடவடிக்கைகள் மக்களிடையே குறிப்பிடத்தக்க பிரிவினையை யும் நம்பிக்கையின்மையையும் உருவாக்கும், அதே நேரத்தில் நீதித்துறை அமைப்பின் மீதும், குறிப்பாக குற்றவியல் நீதிமன்றங்கள் மீதும் தேவையற்ற சுமையை சுமத்தும்.’

30. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498A திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது, ஒரு பெண்ணை அவளது கணவனும் அவனது குடும்பத்தினரும் இழைக்கும் கொடுமையைத் தடுக்கவும், அரசு விரைவாகத் தலையிடுவதை உறுதி செய்யவும் நோக்கப்பட்டது. இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில், நாடு முழுவதும் திருமணத் தகராறுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதால், திருமண அமைப்பிற்குள் வளர்ந்து வரும் பிணக்குகள் மற்றும் பதற்றத்துடன் சேர்ந்து, மனைவி தனது கணவனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக தனிப்பட்ட பழிவாங்கும் கருவியாக இதச–ன் பிரிவு 498A போன்ற விதிகளை துஷ்பிரயோகம் செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது. திருமணச் சச்சரவுகளின்போது தெளிவற்ற மற்றும் பொதுவான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும்போது, அவை உன்னிப்பாக ஆராயப்படாவிட்டால், அது சட்ட செயல்முறை களின் துஷ்பிரயோகத்திற்கும், மனைவி மற்றும் /அல்லது அவரது குடும்பத்தினர் மிரட்டல் தந்திரங்களைப் பயன்படுத்த ஊக்குவிப்பதாக வும் அமையும். சில நேரங்களில், ஒரு மனைவி யின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்வதற்காக, கணவனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக இதச–ன் பிரிவு 498A–ஐப் பயன்படுத்த வழிகோலப்படுகிறது. இதன் விளைவாக, அவர்களுக்கு எதிராக தெளிவான முதல்நிலை நோக்கு வழக்கு இல்லாத நிலையில், கணவரையும் அவரது குடும்பத்தினரையும் வழக்குத் தொடர்வதற்கு எதிராக இந்த நீதிமன்றம் காலத்திற்குக் காலம் எச்சரித்துள்ளது.

31. இதச–ன் பிரிவு 498அ–ன் கீழ் கருதப்படும் கொடுமையால் பாதிக்கப்பட்ட எந்தவொரு பெண்ணும் அமைதியாக இருக்க வேண்டும் என்றும், புகார் அளிப்பதையோ அல்லது எந்தவொரு கிரிமினல் நடவடிக்கையை

யும் தொடங்குவதையோ தவிர்க்க வேண்டும் என்றும் நாங்கள் ஒரு கணம் கூட கூறவில்லை. இது எங்கள் மேற்கூறிய அவதானிப்புகளின் நோக்கம் அல்ல. ஆனால், இந்த வழக்கில் உள்ளதைப் போல, இரண்டாவது எதிர்மனு தாரரின் முதல் மேல்முறையீட்டாளர்–கணவர் தாக்கல் செய்த விவாகரத்து மனுவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக பிரிவு 498A–ன் கீழ் புகார் அளிக்கப்பட்ட வழக்கை நாங்கள் ஊக்குவிக்கக் கூடாது. உண்மையில், அந்தக் குறிப்பிட்ட விதியைச் சேர்ப்பது, வரதட்சணை வடிவில் ஏதேனும் சொத்து அல்லது மதிப்புமிக்க பாதுகாப்புக்கான சட்டவிரோதக் கோரிக்கை காரணமாகத் திருமண வீட்டில் கொடுமைக்கு ஆளாக்கப்படும் ஒரு பெண்ணைப் பாதுகாப்ப தற்காகவே முக்கியமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், தற்போதைய வழக்கில் உள்ளதைப் போல, சில நேரங்களில் அது துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

23. வழக்கில் உள்ள மேற்கூறிய உண்மை களையும், இந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட நீதித்துறை ஆணைகளையும் மனதில் வைத்து, உயர் நீதிமன்றத்தின் 27.02.2024 தேதியிட்ட ஆட்சேபனைக்குரிய உத்தரவு தள்ளுபடி செய்யப் பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இதன் விளைவாக, மீரட், சிவில் லைன்ஸ் காவல் நிலையத்தில் பதிவு செய்யப் பட்ட 09.11.2023 தேதியிட்ட முதஅ எண்.347/2023 மற்றும் அதன் தொடர்ச்சியாகத் தொடங்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் இங்குள்ள குற்றம் சாட்டப்பட்ட/மேல்முறை யீட்டாளருக்கு எதிராக மட்டுமே ரத்து செய்யப்படுகின்றன.

24. இந்த மேல்முறையீட்டில் செய்யப்பட்ட அவதானிப்புகள், தரப்பினர்களிடையே நிலுவை யில் உள்ள வேறு எந்த நடவடிக்கைகளுக்கும் தடையாக இருக்காது என்றும், அவை அவற்றின் சொந்த தகுதிகளின் அடிப்படையிலும் சட்டத்திற்கு இணங்கவும் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் கவனிக்கத் தேவையில்லை.

மேற்கூறிய விதிமுறைகளின்படி, மேல் முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## நீதிமன்றங்களில் அசுத்தமான கழிப்பறை அடிப்படை உரிமையை மீறுவதாகும் உச்சநீதிமன்ற அறிக்கையில் தகவல்

புதுடெல்லி நாடு முழுவதும் நீதிமன்ற வளாகங்களில் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இருப்பது, நீதிபதிகள் வழக்கறிஞர்கள், வழக்கு தொடுப்பவர்கள் பணியாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் அடிப்படை உரிமை மற்றும் கண்ணியத்தை மீறும் செயல் என உயர் நீதிமன்றங்களின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டு உள்ளது.

நாடு முழுவதும் நீதிமன்றங்களில் சுகாதார மற்ற கழிப்பறைகள் இருப்பதாகவும், அவற்றை தூய்மைப்படுத்துக் கோரியும், வழக்கறிஞர் ராஜீப் கவிதா என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இதை விசாரித்த உச்சநீதிமன்றம் சுத்தமான பொது கழிப்பறை இருப்பது மாநில அரசுகளின் கடமை என்றும், அந்த வாதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், ஜன. 15ல் உத்தரவிட்டது.

மேலும் நாட்டில் உள்ள நீதிமன்ற வளாகங்களில் ஆண், பெண், மாற்றுத் திறனாளி மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கு தனித்தனி கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்ட உசசநீதிமன்றம், அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவும் நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தியது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக பல உயர்நீதிமன்றங்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

நாடு முழவதும் நீதிமன்ற வாளகங்களில் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இருப்பதும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் அடிப்படை உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மீறும் செயல்.

தலைநகரங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களில் கூட கழிப்பறைகளின் நிலை மிக மோசகமாக உள்ளது. நிதி ஒதுக்கீடு பராமரிப்பு ஒப்பந்தங்களை அமல்படுத்துதலில் உள்ள நிர்வாக தோல்வியையே இது காட்டுகிறது. மேலும் மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்கு தனி கழிப்பறை இல்லாதது அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கண்ணியத்தை புறக்கணிப்பதாகவே உள்ளது. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

**நன்றி: தினமலர் 22.10.2025**

# பாதுகாக்கப்பட்ட உடைமைகள் பாதுகாக்கும் சட்டமும் செயற்பாடும்

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி பம்மிடிகாந்தம் ஸ்ரீ நரசிம்மா மற்றும் நீதிபதி ஜாய்மால்யா பக்சி**
**உ.மே. எண் 9492/2025 S.L.P.(C) எண் 7288/2024 மற்றும்**
**2025 INSC 847**
**15.7.2025**
**2025 (4) CTC 553**

**பிஎன்பி வீட்டு வசதி நிதி நிறுவனம் வரையறுக்கப்பட்டது ...மேல்முறையீட்டாளர்**
**–எதிர்–**
**மனோஸ் சாஹா மற்றும் பிறர் ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

**சிக்கில் சூரி மூத்த வழக்கறிஞர், ஆர்.என் கேஷ்வாணி, ரமேஷ் என் கேஷ்வாணி, பிரணவ் சிங்கல், ரவி ரகுநாத் வாச்சர், அர்சுன் வாச்சர், வினாயக் சர்மா, அக்ஷத் வாச்சர், சௌரப் ஜா மற்றும் ராகுல்**
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

**ஜெய்தீப் குப்தா மூத்த வழக்கறிஞர், சித்தார்த் ரச்சிதா சாவ்லா, ரித்தி போஸ், செம்பிரித்தி பக்சி, ரிஷி அகர்வால், பிரத்தீக் கோயல் மற்றும் ஹர்ஷித் மன்வாணி**
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.மே. அனுமதிக்கப்பட்டது.

## தீர்ப்பு

**நீதிபதி ஜாய்மாலியா பக்ஷி**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் அந்த உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் தீர்ப்பினைத் தாக்கியுள்ளார். இதன் மூலம் பாதுகாக்கப்பட்ட உடைமைகள் (முதல் தளத்தின் 450 சதுர அடி 1, அல்லன்பி சாலை, கொல்கத்தா –700 020) இதன் உடைமை மேல்முறை யீட்டாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை 1ஆம் எதிர்வாதியிடம் திருப்பியளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

3. 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் ஒரு வாடகை தாரராக அந்த பாதுகாக்கப்பட்ட உடைமைகளைக் கோருகிறார். இவர் பதிவு செய்யப்படாத வாடகை உடன்படிக்கையை மெசர்ஸ் ஜனப்பிரியா நிதி மற்றும் தொழில் முதலீடு நிறுவனத்துடன் தனியார் வரம்பிடப்பட்டது. (முதன்மை நிலச் சொந்தக்காரருடன்) செய்து கொண்டுள்ளார். இது 5 ஆண்டுகளுக்கானது. 1992இல் வாடகைக் காலம் முடிவடைந்துள்ளது. ஆனால் 1ஆம் எதிர் வழக்கீட்டாளர் கூறியதாவது இவர் மாத வாடகை தாரராக முதன்மை நிலச் சொந்தக்காரரிடம் கூறியுள்ளார். 2007இல் முதன்மை சொந்தக் காரர் இந்த பாதுகாக்கப்பட்ட உடைமைகளை 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு விற்றுள்ளார். இதன் கடிதம் 4.3.2008 தேதியிடப்பட்டது. 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் அதாவது புதிய நிலச் சொந்தக்காரர் முதல் எதிர்வழக்கீட்டாளரை வாடகை செலுத்தக் கோரியுள்ளார். முதல் எதிர்வழக்கீட்டாளர் வாதமாவது அவர் 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு வாடகை செலுத்தி யுள்ளார் மற்றும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட உடைமையில் வாடகைதாரராக அதனை அனுபோகத்தில் கொண்டுள்ளார்.

4. 9.2.2017 அன்று 2ஆம் எதிர்வழக் கீட்டாளர் மேல்முறையீட்டாளரிடமிருந்து கடன் ஒன்றை வாங்கியுள்ளார். அதாவது அந்த இடத்தின்பேரில் பாதுகாப்பு வட்டியுடன் இரண்டாம் கடன் தொகையும் எடுக்கப்பட்டுள்ளது. கடன் கணக்கு செலுத்தப்படாது செயற்படாது. இது செயற்படாத உடைமையாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு நிதி உடைமைகளைப் பாதுகாத்தலும்

மறு அமைப்புச் செய்தலும் பாதுகாப்பான வட்டி செயற்படுத் தரப்படுவதற்கான சட்டத்தின் 13(2) பிரிவின்படி கோரிக்கை அறிக்கை பிறப்பிக்கப் பட்டது. 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு 13.7.2021 அன்று. பிந்தியவரை ரூ.3,09,65,636.97 செலுத்தக் கோரப்பட்டது. அத்துடனான எதிர்கால வட்டியுடன் சேர்த்து 60 நாட்களுக்குள் செலுத்தக் கோரப்பட்டது. அறிக்கையில் மேலும் கூறப்பட்ட தாவது. செலுத்தப்படாதிருக்கும் நேர்வில், பாதுகாக்கப்பட்ட கடன் பெற்றவர்கள் சர்பாசி (SARFAESI) சட்டத்தின் பிரிவு 13(4)இன்படி நடவடிக்கைகளை எடுப்பார் என்று கூறப்பட்டது. உடைமையைக் கைக் கொள்வது உள்ளடங்க லாக மற்றும் பாதுகாக்கப்பட்ட உடைமைகள் விற்கப்போவது போதிலும் 60 நாட்களுக்குள் எந்தச் செலுத்தமும் அறிக்கை பெறப்பட்டும் செய்யப்படவில்லை. இதற்கிடையில் 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு எதிராக வெளியேற்றுதல் வழக்கு பல்வேறு காரணங்களின்பேரில் முன்னிடப்பட்டது. வாடகை செலுத்தப்படாதது உள்ளடங்கலாக.

5. 2.12.2021 அன்று, பாதுகாக்கப்பட்ட உடைமையினை ஒரு அடையாக உடைமையாக சர்பாசி (SARFAESI) சட்டத்தின் 13(4)ஆம் பிரிவின்படி மேல்முறையீட்டாளரால் உடைமை எடுக்கப்பட்டது. 2002 (செயற்படுத்தும்) விதிகளின் விதி 8(1), (2)இன்படி அடையாள முறையில் உடைமை இரண்டு முக்கிய செய்தித்தாள்களில் அச்சிடப்பட்டது மற்றும் பாதுகாக்கப்பட உடைமையில் எடுப்பான பாகத்திலும் இது பற்றிய தகவல் ஒட்டப்பட்டது.

6. 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் பாதுகாப்பைப் பெற விண்ணப்பம் ஒன்றினை கடன் வசூலிப்பு தீர்ப்பாயத்தில் மூன்று முன்னிட்டுள்ளார். III கல்கத்தா இதில் சர்பாசி (SARFAESI) சட்டத்தின் பிரிவு 13(4)இன்படி வசூலிப்பு நடவடிக்கைகள் எதிர்க்கப்பட்டன.

7. 8.4.2022 அன்று மேல்முறையீட்டாளர் சர்பாசி (SARFAESI) சட்டத்தின் 14ஆம் பிரிவின் படி விண்ணப்பம் ஒன்றினை முன்னிட்டுள்ளார். இதில் பாதுகாக்கப்பட்ட உடைமைகளை உள்ள படியே உடைமையை எடுக்க மாவட்ட நீதித்துறை ஒருவரின் உதவியை நாடியுள்ளார். மாவட்ட நீதித் துறை நடுவர், விண்ணப்பத்தினை அனுமதித்து உள்ளார் மற்றும் இணை நிதித்துறை நடுவரை பாதுகாக்கப்பட்ட உடைமையினை எடுக்க கோரியுள்ளார். எனினும், DRT 9.11.2022 தேதி யிட்ட ஆணை மூலமாக, உள்ளபடியேயான உடைமையை எடுப்பதற்கு முன்னர் 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு முன் அறிக்கையினை சார்வு செய்யுமாறு மேல்முறையீட்டாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. 19.7.2023, 2ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு பாதுகாக்கப்பட்ட உடைமை மீதும் ஒட்டப்பட்டது. 2.8.2023 அன்று உடைமை இணை நீதித்துறை நடுவரால் எடுக்கப்பட்டு, மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைக்கப் பட்டது.

8. 23.8.2023 அன்று 1ஆம் எதிர் வழக்கீட்டாளர், மேல்முறையீட்டாளருக்குத் தெரிவித்தாவது இவர் பாதுகாக்கப்பட்ட உடைமை களின் வாடகைதாரர் மற்றும் அந்த அடிப்படை யில் பாதுகாக்கப்பட்ட உடைமைகளின் உடைமை எடுக்கப்பட்டது என்றும் இது தொடர்பான ஆவணங்களை அளிக்குமாறு கோரப்பட்டது. அதன் பின்னர், 1ஆம் எதிர்வழக்கீட்டாளர், ஒரு பாதுகாப்பிற்கான விண்ணப்பித்தினை (எண் 737/2023) இடைநிலையாக முன்னிட்டார். வெவ்வேறு உய்திகளை கோரியுள்ளார். பாதுகாக்கப் பட்ட உடைமை விண்ணப்பம் 2.8.2023 தேதி யிட்ட அறிக்கையை இருத்திலைத்தல், பிரிவு 13(4)×இன்படியான பிற உய்திகளுக்காகவும், விண்ணப்பம் முன்னிடப்பட்டது.

9. தரப்பினர்கள் கேட்டறியப்பட்ட பின்னர், DRT கூறியதாவது, வாடகைதாரர் கோரிக்கை யாவது, பதிவு செய்யப்பட்டாத முறையா வணத்தில் பேரிலானது. இதில் கடன் பெற்ற வரோ அல்லது வாடகைதாரரோ மேல்முறை யீட்டாளருக்கு வாடகை பற்றி அடைமானம் வைக்கப்பட்ட நேரத்தில் சொல்லவில்லை. இந்த பொருண்மைகளின்படி இந்த வழக்கின் தீர்ப்பின் படி ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகர் –எதிர்– பன்னாட்டு உடைமைகள் மறுகட்டுமானப்பணி நிறுமம் வரையறுக்கப்பட்டது மற்றும் பிறர் 2014 (5) த.த.வ. 546 (உச்.நீ.): 2014 (6) உச்.நீ.வ. 1, DRT இடைக்கால உய்தியை நிராகரித்துள்ளது மற்றும் இந்த பொருட்

பாட்டினை இறுதியாகக் கேட்கப்படுவதற்காக நிர்ணயித்துள்ளது.

10. 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் க.வ.தீ. ஆணையை எதிர்த்தார். அதாவது உயர் நீதிமன்றத்தின் முன்பு அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி, மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தினை எதிர்த்துள்ளார். அதாவது அதன் நற்குறிப்பின் அடிப்படையில் மாற்று தீருதவிகள் உள்ளதன் அடிப்படையிலும் ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகர் வழக்கின் தீர்ப்பின் 29ஆம் பத்தியைச் சுட்டுகை செய்து உயர்நீதிமன்றம் இந்த வாதத்தினை எதிர்த்தது. அதாவது மாற்று தீருதவி தொடர்பாக மற்றும் உடைமையை மீண்டும் ஒப்படைக்க பின் வருமாறு பணித்துள்ளது.

"17 எனவே வங்கியின் வாதமாவது இதில் மாற்று தீருதவி அதாவது மேல்முறையீடு உள்ளது என்பதை இந்த நீதிமன்றத்தில் ஏற்க முடியாது. இந்த வழக்கின் வேறுபட்ட பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் பேரில் எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட இந்த ஆணை மூலமாக, மனுதாரரின் உரிமை இந்த அவரது இ.மே.இல் கூறப்பட்டவாறு என்பது அறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இடத்தில் வசித்து வந்த ஒரு மருத்துவர், அவரது தொழில் நடத்தி வந்தது. எனது முதல்நிலைக் கருத்துப்படி, இதனை உரிய சட்ட நடவடிக்கையின்றி அகற்றி விட முடியாது என்பது. இதில் உள்ள பிரச்சினை யாவது, மருத்துவர் ஒரு செல்லத்தக்க வாடகை தாரராக ஏற்கப்பட்டவரா மற்றும் அல்லது அவருடைய அனுபோக சட்டப்படியான இல்லையா என்பது இவையே பொருட்பாடுகள் இவையே இ.மே.இல் தீர்மானிக்கப்படும். ஆனால், இவர் உடைமையில் கொண்டு இருப்பதில் ஐய மில்லை. இது பதிவேடுகள் மூலமும் கிடைக்கப் படுகிறது.

18.இத்தகைய சூழ்நிலைகளில், இடைநிலை கோரிக்கையாவது, இந்த இடத்தை பயன்படுத்துவது தொடர்பாக, அதாவது ஒரு அறையாக, இது மனுதாரருக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தீர்ப்பாயத்தினால், சட்டப்படியான அதன் அதிகார வரம்பினைச் செலுத்தி, இதில் சில நிபந்தனைகளும் உள்ளன. அவ்வாறே, சீராய்வு விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது."

11. திருசூரி, வாதிட்டதாவது, உயர்நீதிமன்ற மானது, கருத்தில் உள்ள பொருட்பாடு தொடர்பாக, நி.உ.பா.ச. சட்டத்தின், 18ஆம் பிரிவின்படி, இந்த பணிந்தனுப்புதல்களுடன், விண்ணப்பம் உடன்படிக்கை முழுமை யடைகிறது.

12. 2016இல் சர்பாசி (SARFAESI) சட்டம் திருத்தப்பட்டது. இந்த திருத்த சட்டப்படி பிரிவு 17(4)(A), 1.9.2016 முதல் செயற்பாட்டிற்கு வருமாறு. புகுத்தப்பட்டது. அதாவது குத்தகை தாரர்/வாடகைதாரராக, இயல்விக்கும் எவரது கோரிக்கையையும், அதுவும் பாதுகாக்கப்பட்ட உடைமை தொடர்பாக, DRTஇனை அணுகு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக. அதாவது இந்தச் சட்டத்தின் 13(4) பிரிவின்படியான நடவடிக்கைக்கு எதிராக பாதுகாக்கப்பட்ட உடைமையின் கையுடைமையை எடுப்பது உள்ளடங்கலாக. அத்தகைய நடவடிக்கை களை செல்லாது என்று விளம்புகை செய்து, மீண்டும் உடைமையை மீட்க அதிகாரம் பெற்றுள்ளது. DRTஇன் ஆணை மேல் முறையீடு செய்யத்தக்கது. அதாவது மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் இந்தச் சட்டத்தின் 18ஆம் பிரிவின்படி, மேற்சொல்லப்பட்ட சட்டப்படியான திட்டத்தின் கருத்தில் இந்த நீதிமன்றம் மீண்டும் மீண்டும் உயர்நீதிமன்றங்கள் உறுப்பு 226/227இன்படி இடையீடு செய்வதை வேண்டாம் என்று மேற்சொன்ன சட்டத்தின்படி தடுத்துள்ளது.

13. தற்போதைய வழக்கில், உயர் நீதிமன்றம், தவறாகவே, ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகர், தீர்ப்பில், கண்டறியப்பட்டவை களாவன குத்தகை தாரர்/வாடகைதாரருக்கு சட்டப்படியான தீர்வு கிடைக்கத்தக்கதாக இல்லாதது தொடர்பாக, DRTஇன் 141இன்படியான நடவடிக்கைகளை எதிர்ப்பது தொடர்பாக. இது திருத்தத்திற்கு முன்பான சட்டத்தின் அடிப்படையில் இதில் விண்ணப்ப முறை பற்றி பின்னர் கூறப்பட வில்லை. இது இவ்வாறு உள்ளபோது, உயர் நீதிமன்றமானது இந்த பொருட்பாட்டினை ஆராய்ந்துள்ளது. இதன் நற்குறிப்பின்

அடிப்படையில் 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்கு பாதுகாக்கப்பட்ட உடைமைகளின் உடைமையை அளித்துள்ளது. இந்த எதிர்க்கப்பட்ட பணிப்புரைகளின் சரியான தன்மை நம்மால், சோதிக்கப்பட்டது தொடர்பான வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்பேரில்,

14. இந்த ஆணையினை எதிர்த்து திரு.குப்தா பணிந்தனுப்பியதாவது, 1ஆம் எதிர்வழக்கீட்டாளர், 1987இல் ஒரு வாடகைதாரராக ஏற்கப்பட்டுள்ளார் என்பது. முதலில் பதிவு செய்யப்படாத குற்றகையின்படி 5 ஆண்டுகளுக்கான உடன்படிக்கையின்படி, அதன் பின்னர், அவர் மாத வாடகைதாரராகத் தொடர்ந்துள்ளார். அவரது வாடகை ஒப்பந்த முறை 1997 மேற்கு வங்காள இட வாடகைச் சட்டத்தின்படி பாதுகாக்கப்படுகிறது மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் 6ஆம் பிரிவின் கூறப்பட்டவாறே அந்தக் காரணங்களுக்காக மட்டுமே அவர் வெளியேற்றப்பட முடியும். பாதுகாக்கப்பட்ட உடைமைகளின் கையுடைமையினை மீளப் பெற மேல்முறையீட்டாளர் சட்ட விரோதமாக வாடகை ஒப்பந்தத்தை அளித்துள்ளார் மற்றும் அவரது அரசமைப்பின்படியான சொத்துரிமையை பறித்துள்ளார்.

15. குத்தகைதாரர்கள்/வாடகைதாரர்களின் உரிமைகள் சொத்து தொடர்பாக. இவை நிதி நிறுவனங்களால் பாதுகாக்கப்பட்ட உடைமைகளாக வைக்கப்பட்டிருக்கும்போது சர்பாசி (SARFAESI) சட்டத்தின்படி இது பற்றிய கருதுகை ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகர் வழக்கின் தீர்ப்பில் செய்யப்பட்டது. நீதியர் ஆயம் இந்தச் சட்டத்தின் விளைவு பற்றி பரிசீலனை செய்தது அதுவும் குறிப்பாக பிரிவு குத்தகைதாரர்/வாடகைதாரரின் உரிமைகள் பற்றி பாதுகாக்கப்பட்ட உடைமைகள் தொடர்பாக. நீதியர் ஆயம் கூறியதாவது பிரிவு 13(13) சொல்லப்பட்ட சட்டத்தில் அது 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 65(A)இனை மீதூர்ந்து இயங்குவதாக உள்ளது மற்றும் கடன் பெற்றவரால் ஏற்படுத்தப்பட்ட குத்தகை எதனையும் செல்லாததாக்குவதாக உள்ளது அதுவும், 13(2) பிரிவின்படி அறிக்கை பிறப்பிக்கப்பட்ட பின்னர், அதுவும் பாதுகாக்கப்பட்ட கடனளித்தவரின் எழுத்துமூலமான அனுமதியின்றி சொல்லப்பட்ட பிரிவு முந்திய குத்தகை பற்றி எதனையும் தீர்மானிக்கவில்லை. அதுவும் பதிவு செய்யப்பட்ட முறையாவணம் மூலம் செய்யப்பட்டதை எனினும், குத்தகைதாரர் வாடகைதாரராக அதுவும் வாய்மொழியான/பதிவு செய்யப்படாத உடன்படிக்கை மூலமாக இதில் குத்தகைக் காலம் ஓராண்டுக்கு மேற்படுதலாகாது மற்றும் குத்தகை என்பதில் உடைமைக்கான உரிமையில்லை அதுவும் பாதுகாக்கப்பட்ட உடைமையாக ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்திற்கானதாக.

16. விஷால் என்.கல்சாரியா –எதிர்– பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் பிறர், 2016 (2) த.த.வ. 319, (உச்.நீ.) : 2016 (3) உச்.நீ.வ. 762, ஒரு ஒருங்கிணைந்த வங்கி, இதில் ஒரு விதி விலக்கினை ஏற்படுத்தியது. அதாவது ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகரின் விகிதாச்சார முறையிலிருந்து அதாவது வாடகை சட்டங்களின்படி ஏற்படுத்தப்பட்ட வாடகைதாரர்கள் தொடர்பாக. நீதியர் ஆயம், கூறியதாவது, சர்பாசி (SARFAESI) சட்டத்தின் மற்றும் வாடகை சட்டங்கள் தனித்தனி களங்களில் செயற்படும் மற்றும் எதிர்ப்பற்ற கூறு பிந்தியதில் உள்ளது. முந்தியதை முன்னுற இயங்க முடியாது என்பது.

''35. இந்த நீதிமன்ற முடிவு ஹர்ஷத் கோவர்தன் சோண்டாகர் வழக்கில் கூறப்பட்டது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின் வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின் வகைமுறைகளை மீதூர்ந்து இயங்குவதாக பொருள் கொள்ளுதல் ஆகாது மற்றும் வங்கிகளுக்கு வாடகைதாரர்களை வெளியேற்ற சுதந்திரம் உள்ளது. அதாவது வாடகைதாரர்கள் பிணையாக அளிக்கப்பட்ட இடங்களை உடையாமல் கொண்டுள்ளபோது, அதாவது இவற்றில்பேரில் இடங்கள் வாங்கப்பட்டு கடன் பெற்றவர்/நிலச் சொந்தக்காரர் அவற்றை சரியாக செலுத்த தவறும்போது.

... ... ...

"37. இதில் ஏற்கப்பட்ட சட்டமாவது வாடகை ஒப்பந்தம் ஒரு முறை ஏற்படுத்தப்படும்போது வாடகைதாரர் சட்டப்படியான நடவடிக்கை மூலமாக மட்டுமே காலி செய்யப்பட விதிகள்

வகுத்துறைக்கப்பட்டுள்ளன அதாவது வாடகை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் வகைமுறைகளில். ஒரு வாடகைதாரரை தம் விருப்பப்படி மேற்சொல்லப் பட்ட சட்டத்தின் வகைமுறைகளை பயன்படுத்தி காலி செய்ய முடியாது. இதன் மூலம் வாடகை தாரருக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உரிமைகள் சட்டப்படியானவை. ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும். இதில் எதிர்க்கப்படாத கூறு (பிரிவு 35 மேற்சொல்லப்பட்டுள்ள பாதுகாப்பு உரிமைகள் சட்டப்படியானவை ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும். இதில் எதிர்க்கப்படாத கூறு (பிரிவு 35 மேற்சொல்லப்பட்ட சட்டம்) இது ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு சட்டப்படியான உரிமைகள் வாடகைதாரருக்குரியவை கட்டுப் படுத்தப்பட முடியாது. வேறு சட்டம் அப்போதைக்கு செயற்பட்டுள்ளவை எதுவும் என்பது 35ஆம் பிரிவில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தில் காணப் படுவது ஒவ்வொரு சட்டத்திற்கும் நீட்டிக்கப்படுவ தாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது. அதாவது மைய மற்றும் மாநிலச் சட்டங்களுக்கு இவை அதே களத்தில் செயற்படும் சட்டங்களுக்கு மட்டுமே நீட்டிக்கப்படும்.

17. பின்னர் ஒரு மூன்று நீதிபதிகள் ஆயம் பஜ்ஜரங்க் ஷ்யாம் சுந்தர் அகர்வால் –எதிர்– சென்ட்ரல் வங்கி ஆஃப் இந்தியா மற்றும் பிறர் வழக்கில் 2020 (1) த.த.வ. 224 (உச்.நீ.): 2019 (9) உச்.நீ.வ. 94, விஷால் என். கல்சாரியா வழக்கின் தீர்ப்பிலிருந்து மாறு பட்டுள்ளது. அதாவது எதிர்க்கப்படாத மேற் சொல்லப்பட்ட பிரிவு 35இன் கூறில் இருந்து

“23. விஷால் என். கல்சாரியா வழக்கில் கூறப்பட்ட நெறிமுறைகளுக்கு நாம் உடன்படும் போது வாடகை உரிமைகள் வாடகைச் சட்டத்தின் படியானவை உரிய வழக்குகளில் இடம் பெற்றவரை ஏற்கப்பட வேண்டியவை. எனினும், நாம் நம்புவது, சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 35 எதிர்க்கப்படாத கூறு பொருந்துவதிலான கட்டுப்பாடுகள் தொடர்பாக. அவை அதே களத்தில் செயற்படும் சட்டங் களுக்கு மட்டுமே பொருந்தும். அதே களம் என்பது மிகவும் குறுகலானதே மற்றும் இந்த சொற்றொடர், இந்த நீதிமன்றத்தால் அளிக்கப் பட்டஹர்ஷத் வழக்கில் தீர்ப்பை பின்பற்றுவதாக இல்லை.

18. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் சொ.உ.மா. சட்டம் மற்றும் வாடகைச் சட்டங்கள் பஜ்ஜரங்க் சியாமா சுந்தர் அகர்வால் வழக்கில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. மெய்ப்பிப்பு வாடகைதாரர்கள் தொடர்பாக வாய்மொழி/பதிவு செய்யப்படாத உடன்படிக்கை மூலமான கோரிக்கை வாடகை ரசீதுகளை முன்னிடுதல் சொத்து/தண்ணீர் வரிகள் சீட்டுகள் மின் கட்டண முதலானவை. ஒரு செல்லத்தக்க வாடகை ஒப்பந்தத்தை ஏற்படுத்துபவை ஆகும். அப்போதும் கூட அத்தகைய வாடகைதாரர்கள் வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத உடன் படிக்கை ஓராண்டுக்கு மேலாக நீட்டிக்கப்படாது அதுவும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(2)இன்படி அறிக்கை பிறப்பிக்கப்பட்டதி லிருந்து ஓராண்டுக்கு மேலாக மற்றும் சொல்லப் பட்ட காலம் முடிவடைவதன்பேரில், அந்தக் காலம் வாடகைதாரர் துன்பக்காலம் என்று கொள்ளப்படும்.

19. திரு. குப்தா வலிமையாக வாதிட்டதாவது பஜ்ஜரங்க் ஷியாமா சுந்தர் அகர்வால் வழக்கின் விகிதாச்சாரம் பற்றி வாடகை சட்டத்தின்படி வாடகைதாரர் அரசமைப்பு ஆயத்திற்கு எதிராக செயற்படும் காலம் பற்றியது தனபால் செட்டியார் –எதிர்– யசோதை அம்மாள் 1979 (4) உச்.நீ.வ. 214(பத்தி 6) இது நல்ல சட்டமாகாது என்பது.

20. வி.தனபால் செட்டியார் வழக்கில் கருதுகைக்காக எழுப்பப்பட்ட கேள்வியால் அரசமைப்பு ஆயத்தின் முன்பானது சொ.உ.மா. சட்டத்தின் 106ஆம் பிரிவின்படி வாடகை பற்றி தீர்மானிப்பதற்கு அறிக்கை ஒன்று தேவை யானதா அதுவும் வாடகைச் சட்டங்களின்படி வாடகைதாரரை காலி செய்வதற்கு இதற்கு எதிர்மறையான மறுமொழியுடன் ஆயமானது இடைநிலையாகக் கூறியதாவது வாடகைதாரர் என்னும் சொல்லின் பொருள்வரையின் நீட்டிப்பின்படி அதாவது மாநிலச் சட்டங்களின் பல்வேறு சட்டங்களின்படி அதிகாரம் எல்லை

யிலான உறவுமுறை அதாவது நிலச்சொந்தக்காரர் மற்றும் வாடகைதாரர் என்பது ஒப்பந்த அடிப்படையிலானதால் மட்டுமே தீர்மானிக்கப் படுவதாக மட்டுமே அமைவதல்ல. அதுவும் காலி செய்வதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் வரையில் தொடர்வதாகும்.

21. அந்தோணி –எதிர் கே.சி. இட்டோப் அண்ட் சன்ஸ் மற்றும் பிறர் 1999 (3) த.த.வ. 498 (உச்.நீ.) : 2000 (6) உச்.நீ.வ. 394. இந்த நீதிமன்றம் மீண்டும் கூறியுள்ளதாவது அதிகார வரம்பிலான நீதிமுறை உறவு குத்தகைதாரர்/ குத்தகை எடுத்தவருக்குமிடையே ஏற்படுத்தப் பட்டுள்ளது ஒரு பதிவு செய்யப்படாத முறை யாவணத்தின் மூலமாக இது வாடகைச் சட்டங்களின்படி பாதுகாக்கப்பட வேண்டியது.

22. இதில் வாதிடப்பட்டதாவது மேல்முறை யீட்டாளர் சார்பாக எதிர்க்கப்படாத சர்பாசி சட்டத்தின் கூறு வாடகைச் சட்டத்தின் வகை முறைகள் கருதுகைக்காக வரப்படவில்லை. மேற்சொல்லப்பட்ட அதிகார அமைப்புகளில்

மறுவகையில் இத்தகைய பிரச்சினை வாடகைதாரர்கள் /குத்தகைதாரர்கள் உரிமைகள் என்பது பற்றி எழுப்பப்பட்டு மறுமொழியளிக்கப் பட்டுள்ளது. இவை வாய்மொழி பதிவு செய்யப் படாத உடன்படிக்கையின்படி பஜ்ஜரங்க் ஷயாம் சுந்தர் அகர்வால் (மேற்படி).

23. மேற்சொல்லப்பப்பட்ட பிரச்சினையை வகை செய்ய நாம் முன் வரவில்லை மேலும், 1ஆம் எதிர்வழக்கீட்டாளரால் அளிக்கப்பட்ட சான்று பற்றி நாங்கள் மனநிறைவு பெற வில்லை. அதுவும், DRTஇன் முன்பானதில் முந்தைய வாடகைதாரர் தொடர்பாக. இதில் 1ஆம் எதிர்வழக்கீட்டாளரின் கோரிக்கையானது அவர் பாதுகாக்கப்பட்ட உடைமைகளை 1987 முதல் கொண்டிருப்பதாக கோருகிறார்கள். அவர் எந்த வாடகை ரசீதையும், வரி ரசீதை அல்லது மின் கட்டண பில்லினை பதிவில் கொண்டு முன்னிட இயலவில்லை. இந்த இடத்தின் தொடர் உடைமை அனுபோகத்தை கொண்டுள்ளார். அதாவது சர்பாசி (SARFAESI) சட்டத்தின் 13(2) பிரிவின்படியான கோரிக்கை அறிக்கை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு வரை 1ஆம் எதிர் வழக்கீட்டாளர், ஆவணங்களையே ஆதார மாகக் கொண்டுள்ளார். அதாவது வாடகை வைப்பீடு செய்யப்பட்டதை காட்டுவதற்காகவும், அதாவது வாடகை கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரை வைப்பீடு செய்யப்பட்டது தொடர்பாக. அதாவது கோரிக்கை அறிக்கை பெற்றதன் பின்னர், மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்டது தொடர்பாக. முன்பிருந்த வாடகை தொடர்பாக சுட்டுகை மட்டும் அந்த விற்பனை ஆவணத்தில் அல்லது 2ஆம் எதிர்வழக்கீட்டாளரின் (அவர் கடன் பெற்றவரும் கூட) மாற்று நில மேலாண்மை ஏற்பு பற்றிய கடிதம் அளிக்கப்பட்ட 2ஆம் எதிர்வழக்கீட்டாளரால், இவை தனிப்பட்ட மற்றும் நம்பக் கூடிய உடைமை பற்றிய சான்று எதுவும் அளிக்கப்பட்டு ஆதாரமாகக் காட்டப்படாத நிலை இதனால் ஒரு உறுதியான வழக்கை நிரூபிக்க இயலாமை அதாவது 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக முன்பே இருந்த வாடகை தொடர்பாக. இத்தகைய சூழ்நிலையில், காலி செய்தல் வழக்கு தொடுக்கப்படுதல் உச்சம் எதிர்வழக்கீட்டாளரால் என்பது இது ஒரு காரணியைத் தீர்மானிக்க முடியாது ஒரு முறையற்ற கூட்டு சதியான வழக்கை மேல் முறையீட்டாளரின் வழக்கை தோற்கடிக்கும் விதமாக இதனால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை விட்டுவிடப்பட முடியாது.

24. உயர்நீதிமன்றம் இத்தகைய தொடர்புற்ற நிலைகளை கருதுகை செய்யத் தவறியுள்ளது மற்றும் சட்டவிரோதமாக முன்பிருந்த நிலையே தொடர பணித்துள்ளது. உயர்நீதிமன்றம் 1ஆம் எதிர்வழக்கீட்டாளரின் நடத்தை பற்றி அறியாது உள்ளது. அதாவது பாதுகாக்கப்பட்ட உடைமை களில் அவரது உரித்தத்தினை பாதுகாக்க தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்க தவறியுள்ளது. மேல்முறையீட்டாளர் 2.12.2021 அன்று பாதுகாக்கப்பட்ட உடைமைகளின் எடுப்பான இடங்களில் அந்த அறிக்கையினை ஒட்டி யுள்ளார். இத்தகைய வெளியீடுகள் செய்தி ருப்பினும், 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் இது பற்றி எதனையும் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்க முயற்சிக்கவில்லை. அதாவது முந்தி இருந்து வந்த வாடகைதாரர் தொடர்பாக அல்லது

சு.வ.தீ.இனை அணுகுவது வாடகைதாரர் தொடர்பாக அல்லது DRTஇனை அணுகுவது தொடர்பாக.

25. அதன் பின்னர், 19.7.2023 அன்று தெரிவிப்பு அறிக்கை இதனை உள்ளவாறு உடைமையை எடுப்பது தொடர்பாக. பாதுகாக்கப் பட்ட உடைமையின் மீது ஒட்டப்பட்டது. அப்போதும் 1ஆம் எதிர்வழக்கீட்டாளர் அலட்சிய மாகவே இருந்துள்ளார். மேல்முறையீட்டாள ரால், உள்ளபடியேயான உடைமை எடுக்கப் பின்னர் மட்டுமே அவர். DRTஇனை அணுகி யுள்ளார். அதாவது உடைமையை திரும்பப் பெறுவதற்காக, ஒரு கட்டாய ஆணை பழைய நிலையை ஏற்படுத்த தேவைப்படுகிறது என்பது. கட்டாயமாக இரும்பு தொடர்பான வழக்கு. 1ஆம் எதிர்வழக்கீட்டாளர், இதனை நிரூபிக்கத் தவறியுள்ளார். அவரது அலட்சியப் போக்கு மற்றும் வாடகை ரசீதுகளை முன்னிடத் தவறியது மற்றும்/அல்லது சான்றுகள். அதாவது தொடர் கையுடைமை தொடர்பான வற்றை அதாவது கோரிக்கை அறிக்கை பிறப்பிக்கப் படுவதற்கு முன்னர் மேற்சொல்லப்பட்ட பிரிவு 13(2)இன் படி இதில் கட்டாய ஆணை என்பதை அது நியாயப்படுத்தவில்லை.

26. மேற்சொல்லப்பட்ட கலந்தாய்வுகளின் அடிப்படையில், நாம் இந்த மேல்முறையீட்டை அனுமதிக்கிறோம் மற்றும் உயர்நீதிமன்ற எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்கிறோம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விண்ணப்பத்தினை (எண் 737/2023) வகை செய்யப்படும் வரையில் பாதுகாக்கப்பட்ட உடைமைகள் தொடர்பாக. முந்திய நிலையே தொடர பணிப்புரை வழங்கப்படுகிறது. இந்த விண்ணப்பம் இந்த ஆணை பெறப்பட்ட தேதி யிலிருந்து 2 மாதங்களுக்குள் வகை செய்யப் பட வேண்டும். மேலும் இது இரு தரப்பினர் களுக்கும் தேவையற்ற தள்ளி வைப்பு தேதி களை அனுமதிக்காது. வகை செய்ய கோரப் படுகிறது.

27. விண்ணப்பங்கள் நடப்பில் எவையேனு மிருப்பின் அவை வகை செய்யப்பட வேண்டும்.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## இந்தியாவின் 'இ-நீதிமன்றங்கள்' திட்டம்: பிரிட்டன் ஆர்வம்; செயல்பாடுகளை அறிய வருகை

இந்தியாவின் அனைத்து நீதிமன்ற ஆவணங்களையும் எண்மமயமாக்குவதை இலக்காகக் கொண்ட மத்திய அரசின் தொலை நோக்குத் திட்டமான 'இ-நீதிமன்றங்கள்' திட்டத்தின் பிரிட்டன் அரசு ஆர்வம் காட்டியுள்ளது.

இத்திட்டத்தின் செயல்பாடுகளை நேரடியாக அறிந்து கொள்வதற்காக, பிரிட்டன் தூதுக் குழுவினர் வரும் நவம்பர் 6ஆம் தேதி இந்தியாவுக்கு வரவுள்ளனர். அவர்கள் மத்திய சட்ட அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் உச்சநீதிமன்றத்தின் இ-குழு உறுப்பினர்களைச் சந்தித்து விவரங்களைப் பெற இருக்கின்றனர்.

இந்திய நீதித் துறையில் தகவல் தொழில் நுட்பத்தை செயல்படுத்துவதற்கான 2005ஆம் ஆண்டு தேசியக் கொள்கை மற்றும் செயல் திட்டத்தின் கீழ் 'இ-நீதிமன்றங்கள்' திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் மத்திய அமைச்சரவையால் கடந்த 2023, செப்டம்பரில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்போது நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மூன்றாம் கட்டத்தின் இலக்கு:** நாடு முழுவதும் உள்ள விசாரணை நீதிமன்றங்களின் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதே 3-ஆம் கட்ட திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். அந்த வகையில், மொத்தம் 3,108 கோடி நீதிமன்ற ஆவணங்களை எண்ம மயமாக்கப்பட உள்ளன. நீதிமன்ற ஆவணங்கள் எண்மமயமாக்கப் படுவதால், காகித ஆவணங்களின் பயன்பாடு வெகுவாகக் குறைந்து, சுற்றுச் சூழல் பாதிப்பும் குறையும். மேலும், வழக்கு தொடர்பான செலவு களும் கணிசமாகக் குறையும்.

நீதிமன்றங்கள், சிறைகள், காவல் நிலையங்கள் மற்றும் தடவியல் ஆய்வகங்கள் போன்ற அனைத்து முக்கியமான அமைப்புகளை யும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் ஒருங்கிணைப்பது திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கமாகும். மேலும், நாட்டின் நீதித் துறையில் வலுவான எண்ம உள்கட்டமைப்பை உருவாக்கு வதன் மூலம், வழக்குகளை விசாரிப்பதற்கான மெய்நிகர் நீதிமன்றங்களை கூடுதலாக அமைப்ப தற்கும் இத்திட்டம் முயற்சி செய்கிறது. மொத்தம் 1,150 மெய்நிகர் நீதிமன்றங்களை அமைக்க ரூ.413.08 கோடி செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

**நன்றி: தினமணி 27.10.2025**

# ‘சமதரும’ மற்றும் ‘மதசார்பற்ற’ என்ற சொற்களை இந்திய அரசமைப்பு சாசனத்தில் சேர்த்தது நியாயமானதும் தேவையானதும் ஆகும்

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை: தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா**
**நீதிபதி சஞ்சை குமார்**
**நீபேம(உ) எண்கள் 645 /2020 மற்றும் 1467/2020**
**2025(1)CTC 444**

**டாக்டர் பல்ராம் சிங் மற்றும் பிறர் …மனுதாரர்கள்**

–எதிர்–

**இந்திய ஒன்றியம் மற்றும் வேறொருவர் …எதிர்மனுதாரர்**

**டாக்டர் சுப்ரமணியன் சுவாமி: நேர்வரு மனுதாரர்; அஸ்வினி குமா உபாத்யாய், அஸ்வினி குமார் துவர், ஹரி சங்கர் ஜெயின், விஷ்பு சங்கர் ஜெயின், பாத் யாதவ், மனு முஞ்சால் – மர்பியங்க் கோங்க்வீர்,**

மனுதாரது வழக்குரைஞர்

**டாக்டர் ஜிவி ராவ். முதுநிலை வழக்குரைஞர், ருச்சி ரஞ்சான் ராய், பிரஹீக் கும்மார், சந்த் குரேஷி, சாந்தி ரஞ்சான் டாச், அனிந்தோ மகர்ஜீ, விஜய் குமார், ராஹுல் மோட்த், சம்ஞ்சே கியான், கேஷவ் தேவ், மோகிட் யாதவ், ஆர்தி பால், அபிட் அலி பீரன், சீராம் பி., விஷ்னு சங்கர். ஆதிய சந்தோஷ், இஷா சின்க், அஞ்சலி சின்க், நாலுகெட்டில் ஏ.எஸ். நாயர், மனீஷா சுனில், நேஹா குமாரி. எச்.அன்புகிருஷ்னன், அலக் அலோக் ஸ்ரீவஸ்தப்வா, பிஜன் குமார் கோஷ்–ஊஜ்வல் பேனர்ஜி,**

எதிர்மனுதாரர்களது வழக்குரைஞர்கள்

நீபேகள் தள்ளுபடியாகின, மவி ஏற்கப்பட்டது.

## ஆணை

‘சமதரும’ மற்றும் ‘மதச்சார்பற்ற’ எனும் சொற்களை 1976இல் அரசமைப்பு சட்ட (நாற்பத்தியிரண்டாவது) திருத்தல் சட்டம் மூலம் இந்திய அரசமைப்பு சட்டத்தின் முகவுரையில் சேர்த்தலுக்கு சவாலிட இந்த நீதிப்பேராணை மனுக்கள் விழைகின்றன. அதாவது 26.11.1949 அன்று அரசமைப்பு சட்டம் ஏற்கப்பட்டதால் பொய்மையை உருவாக்கி 1976இல் பின் தேதியிடப்பட்டது என்பதும் அரசமைப்பு சட்டப் பேரவையால் மதசார்பற்ற என்ற சொல் வேண்டு மென்றே தவிர்க்கப்பட்டது என்பதும் மக்களின் விருப்பத்தை சார்பாற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை விருப்பத் தேர்வுக்கு விலங்கிட்டு தடுத்து நிறுத்துகிறது என்பதும் ஆன பல்வேறு முகாந்திரங்களில் சவால் உள்ளது. அத்துடன், 18.3.1976 அன்று முடிவடைந்திருந்த மக்களவையின் சாதாரண உரிமைகாலத்துக்கு பின்பு அவசரநிலை காலக்கட்டத்தில் 2.11.1976 அன்று அது இயற்றப்பட்டதால் நாற்பத்தி யிரண்டாவது திருத்தம் விழலாகவும் அரசமைப்பு சட்ட விரோதமாகவும் உள்ளதாகும் என பணிந்து ரைக்கப்படுகிறது. ஆகையால் திருத்தங்களுக்கு ஒப்பேற்பு அளித்தலுக்கு மக்களது விருப்பம் கிடையாது எனவும் பணிதுரைக்கப்படுகிறது.

2.வாதங்களில் உள்ள பிழைகளும் பலவீனங் களும் வெளிப்படையாக உள்ளதால் விளாவாரி யான தீர்வுறுதியை நீதிப்பேராணை மனுக்கள் அவசியப்படுத்தவில்லை. 1976இன் அரச மைப்பு சட்ட [நாற்பத்தியிரண்டாவது] திருத்தம் கீழ் மதச்சார்பற்ற மற்றும் சமதரும என்ற பதங்களும் நாணயம் என்ற சொல்லும் சேர்க்கப் பட்டன. இந்த திருத்தங்கள் 1976இல் செய்யப் பட்டன. அரசமைப்பு சட்டத்தை திருத்தலை

அரசமைப்பு சாசன உறுப்பு 368 அனுமதிக் கிறது. திருத்தலுக்கான அதிகாரம் சந்தேகமின்றி நாடாளுமன்றத்துக்கு உள்ளது. இந்த திருத்தல் அதிகாரம் முகவுரைக்கும் நீட்சியாகும். அரச மைப்பு சட்டத்தின் அடிப்படை அமைப்பு மீறுகை உட்பட பல்வேறு முகாந்திரங்களில் அரசமைப்பு சட்டத்தில் திருத்தங்கள் எதிர்க்கப்படவியலும். 26.11.1649 அன்று அரசமைப்பு சட்டம் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கே இந்திய மக்களால் வழங்கப்பட்டது என்ற பொருண்மை எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்த வில்லை. ஏற்பு தேதி அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு 368 கீழான அதிகாரத்தை தடுக்காது அல்லது தடுத்து நிறுத்தாது. பிந்தேதியிடப்பட்டது பற்றிய வாதம் ஏற்கப்படுமானால் இவ்வாறு செய்தலுக்கு உறுப்பு 368 கீழான நாடாளு மன்ற அதிகாரம் மாற்றப்படவியலாததாகவும் சவாலின்றியும் உள்ளபோதிலும் அரசமைப்பு சட்டத்தின் பகுதி எதனுக்கும் செய்யப்பட்ட திருத்தம் எதனுக்கும் அது பொருந்துறுவாகும்.

3. முகவுரையில் மதசார்பற்ற, சமதரும எனும் சொற்களை சேர்த்திட அரசமைப்பு சட்ட பேரவை இணங்கியிருந்ததில்லை என்பது உண்மையாக இருக்கையில் உறுப்பு 368இன் விதிமுறைகளுக்கு இணங்கவும் கீழாகவும் திருத்தலுக்கு நாடாளுமன்றத்துக்கு அளிப்பான மேல்சொன்ன அதிகாரத்தில் கவனிக்கப்பட்ட வாறு அரசமைப்பு சட்டம் ஒரு ஜீவிக்கும் ஆவண மாக விளங்குகிறது. அது மதத்துக்கு எதிரான தென சில கல்விமான்களும் சட்டவியலாளர் களும் பொருள்விளக்கியிருந்ததால் மதசார்பற்ற என்ற சொல் துல்லியமற்றதாக பாவிக்கப்பட்டது. காலக்கிரமத்தில் மதச்சர்ர்பின்மை பற்றி அதன் சொந்த பொருள் விளக்கத்தை இந்தியா மேம்படுத்தியிருக்கிறது. அதில் அரசு மதம் எதனையும் ஆதரிக்கவில்லை அல்லது மதம் எதனது பின்பற்றுகைக்கும் நடைமுறைக்கும் தண்டனை விதிக்கவில்லை. அரசு பணிய மர்வில் சம வாயப்புக்கும் சட்டநெறிகளின் சமமான பாதுகாப்புக்கும் அது உத்தரவாதம் அளிக்கையில் மத மனுகாந்திரங்களில் குடிமகன்களுக்கு எதிராக பாபசஸ்த்தை தடுக்கும் அரசமைப்பு சாசன உறுப்பு 14,15 மற்றும் 16 இல் இந்த கோட்பாடுக்கு உருவளிக்கப் படுகிறது. இந்த மதசார்பில்லா விழுமியங்களை, சமூக பொருளீய அரசியல் சுதந்திர நீதிப்பரிபாலனத்துடன் கருத்து வெளிப்பாடு, நம்பிக்கை, மதம் மற்றும் வழிபாடு ஆகியவற்றுக்கான தனித்த கண்ணியத்தை உறுதியாக்கும் சம அந்தஸ்து மற்றும் வாயப்பு மற்றும் சகோதரத்துவம் எனும் முகவுரையின் மூன்று கோட்பாடுகள் பிரதிபலிக்கின்றன. பொது ஒழுங்குக்கும் நீதிநெறிக்கும் ஆரோக்யத்துக்கும் இதர அடிப்படை உரிமைகளுக்கு மத நடைமுறை களுடன் இணைந்த மதசார்பற்ற செயல்பாடு களை ஒழுங்காடிட அரசுக்குள்ள அதிகாரத் துக்கும் உட்பட்டு அனைத்து நபர்களுக்கும் உறுப்பு 25 சமமான மனசாட்சி உரிமைக்கும் நடத்தை சுதந்திரமாக பிரகடனப்படுத்தவும் பின்பற்றவும் பிரசங்கிக்கவும் உத்தவாதம் அளிக்கிறது. ஒவ்வொரு மதப்பிரிவுக்கும் பொருந்தும் உறுப்பு 26 மதரீதியான மற்றும் அற்க்கட்டளை நிலையங்களை ஸ்தாபித்து பராமரிக்கவும் மத விவகாரங்களை நிர்வகிக்கவும் சொத்தில் சொந்தம் கொண்டாடவும் பெற்ற டைதலுக்கும் அத்தகைய சொத்தில் சட்ட நெறிக்கு இசைவாக நிர்வகிக்கவும் உரிமை யளிக்கிறது. மேலதிகமாக பிரஜைகளில் ஒவ்வொரு பிரிவினரது தனித்த பண்பாட்டை உறுப்பு 28 பாதுகாக்குகிறது. அப்படியிருக்கையில் அவர் களது சொந்த கல்வி நிறுவனங்களை ஸ்தாபித்தி நிர்வகிக்க உரிமையை மதரீதியான மற்றும் மொழிரீதியான சிறுபான்மையினருக்கு உறுப்பு 30 வழங்குகிறது. இந்த வகையங்கள் உள்ள போதிலும் அதன் குடிமகன்களுக்கு சரியான குடிமை தொகுப்புச் சட்டத்துக்காக அரசு முயலு வதை அரசு கொள்கை பற்றிய அறிவுறுத்துகள் அளிக்கின்றன.

4 மதசார்பின்மை அரசமைப்பு சாசனத்தின் அடிப்படை கூறாகும் என்பதை கேசவனந்தா பாரதி –எதிர்– கேரள மாநிலம் 1973 4 SCC 225 [3 Judges] மற்றும் எஸ்.ஆர்.பொம்மை எதிர் இந்திய ஒன்றியம் 1994 3 SCC 1 [9 judges] வழக்குகளில் அரசமைப்பு சட்ட அமர்வு தீர்ப்புரைகள் உட்பட இந்த நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புரைகள் கருத்துரைத்திருக் கின்றன. 1976இன் அரசமைப்பு சட்டம் (நாற்பத்தியிரண்டாவது) திருத்தல் வழியாக புகுத்தப்படுமுன் மதச்சார்பற்ற என்ற பதம் அரசமைப்பு சட்டத்தில் இல்லாதிருந்தாலும்

அனைத்து மத நம்பிக்கைக் கொண்டவர்களை யும் சமமாகவும் பாரபட்சமின்றி பாவித்தலிலும் தேசத்து அர்ப்பணிப்பை மதசார்பின்மை முக்கிய மாக சார்பாற்றம் செய்கிறது என ஆர்.சி. பவுதி யால் –எதிர்– இந்திய ஒன்றியம் 1994 Supp 1 SCC 324 வழக்கில் நீதிமன்றம் தெளிவுபடுத்தி யுள்ளது. இந்திய தருவாயிலில் இயன்றமட்டும் பரவலான குறியெல்லையுள்ண் பதமாக மதச்சர்பின்மை உள்ளது என இந்த நீதிமன்றம் எம்.இஸ்மாயில் (Dr) பரூக்கி –எதிர்– இந்தியா ஒன்றியம் 1994 6 SCC 360 வழக்கில் நீதிமன்றம் விரிவாக்கியுரைத்தது. அரசு சொந்த மதம் எதனையும் வைத்துக் கொள்ளவில்லை. அவர் களது தெரிந்தெடுக்கப்பட்ட மதத்தை சுதந்திரமாக பிரஸ்தாபிக்கவும் பின்பற்றவும் பிரசங்கம் செய்யவும் உள்ள உரிமையுடன் மனசாட்சி சுதந்திரத்துக்கு அனைவருக்கு சமமாக பாத்தியதை யுண்டு. அவர்கள் மத நம்பிக்கைகளை கருதாது அனைத்து குடிமகன்களுக்கும் சமமான சுதந்திரங்களையும் உரிமைளையும் துய்க்கிறார்கள். எனினும் அவை விரிவான பொதுநலனில் அபிவிருத்திக்கும் சம உரிமையையும் தடுக்கும் போது மதத்திலிருது அடையப்பட்ட அல்லது தொடர்புற்ற மனபான்மையையும் நடைமுறை களையும் சமமான மதசார்பற்ற நிலைமை தடுக்கவில்லை. சாரத்தில் மதச்சர்ப்பின்மை பற்றிய பொதுகருத்து அரசமைப்பு சட்டத்தின் மாதிரிகளையும் காட்டிடும் அடிப்படை ஆதாரத்தில் மென்மையாக நெய்யப்பட்ட சமத்துவ உரிமையின் கூறுகளில் ஒன்றை சார்பாற்றம் செய்கிறது.

5. அதுபோலவே இந்திய தருவாயிலில், தரப்பட்ட சந்தர்ப்பத்தில் மக்களின் விருப்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளை தடுத்து நிறுத்துவதாக மதச் சார்பின்மை என்ற சொல் பொருள்விளக்கப்பட கூடாது. குறித்த பொருளீய கொள்கையை அல்லது கட்டமைப்பை அது இடதோ வலதோ அதை அரசமைப்பு சாசனமோ அல்லது முகவு ரையோ வலியுறுத்தாக்கவில்லை. சமதரும நன்னல அரசாக அரசின் அர்ப்பணிப்பையும் வாய்ப்பு சமத்துவத்தையும் உறுதியாக்கும் சமதரும என்ற சொல். வேறான வழிகளில் இரண்டையும் குறித்துணர்த்துக்கிறது. வேறான வழிகளில் ஒரங்கட்டப்பட்ட பிரிவுகளையும் ஒதுக்கப்பட்ட பிரிவினர்களையும் உயர்த்தி பிடித்தலுக்கு முக்கியமாக பங்களித்துக் கொண்டு, காலகிரமத்தில் தனியார் துறை வேரூன்றி யிருந்து விரிவடைந்திருக்கும் கலப்பு பொருளாதார மாதிரியை இந்தியா நிலையாக அரவணைத்து ள்ளது. இந்திய வடிவமைப்பில், பொருளாதார அல்லது சமூக சூழல்களால் குடிமகன் எவரும் பாதகமடையவில்லை என்பதை அர்சு உறுதி படுத்திக் கொண்டிருக்கும் பொருளீய மற்றும் சமூக நீதி கோட்பாடுக்கு சமதருமம் உருவ ளிக்கிறது. சமதருமம என்ற சொல் பொருளாதார சமூக உயர்த்திப் பிடிப்பதன் குறியெல்லை பிரதிபலிக்கிறது. தனியார் தொழில்முனைவை யும் 19(1)ஜி கீழ் அடிப்படை உரிமையாகும் வியாபார மற்றும் வர்த்தக உரிமைக்கு வரம்பிடவில்லை.

6. அவசர நிலையின் போதும் மக்களவை யின் நீடிக்கப்பட்ட காலவரையில் அதன் நிறைவேற்றுகை காரணத்தால் அது ரத்தாக்கப் பட வேண்டும் என்ற வாதம் 1978இன் அரசமைப்பு சாசன (45வது) திருத்தச் சட்டம் பற்றிய பரிசீலிப்பின்போது நாடாளுமன்றத்தில் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. இந்த கலந்தாய்தல் களில் மதச்சர்பற்ற மற்றும் சமதரும என்ற சொற்கள் சேர்க்கப்படுதல் பகுப்பாய்வில் வந்தது. தொடர்ச்சியாக இந்த மசோதா மறுயெண்ணிடப்பட்டு 1978இன் அரசமைப்பு சாசன 44வது திருத்தல் சட்டம் என அழைக்கப் பட்டது. அனைத்து மதங்களுக்கும் சம மரியாதை அளிக்கும் குடியரசை குறைப்பதாக மதசார்பற்ற என்ற சொல்லுக்கு விளக்கம் தரப்பட்டது. அப்படியிருக்கையில் அரசியல் மற்றும் பொருளீய எதுவகையிலான் சுரண்டலை யும் அகற்றலுக்கு அர்ப்பணிப்பானகுடியரசை சார்பாற்றம் செய்வதாக சமதரும் எனும் சொல் குணங்கமானது. எனினும் உறுப்பு 366இக்கு முன்மொழிவா சொன்ன திருத்தம் மாநிலங்கள் அவையால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தேசியமயமாக்கலுக்கும் தொழிலகங்களை அரசுக்கு சொந்தமாக்கலுக்கும் சாதகமாக நீதிமன்றங்கள் சாய்வாதலை முகவுரையில் சமதரும என்ற சொல் ஏதுவாக்கக் கூடியதாகும் என எக்சல் வேர் –எதிர்– இந்திய ஒன்றியம் 1978 4 SCC 224 வழக்கில் இந்த நீதிமன்றம் தீர்ப்பிட்டி ருந்ததில் சந்தேகமில்லை எனவாகினும்

பொருளீய கட்டமைப்பின் பேரளவு பகுதியை அகண்ட சொல்லமைப்புகளில் உருவமைக்கப் பட்டவாறு, கொள்கைகளுக்காக வாக்களித்தவர் களுக்கு பொறுப்பாகக் கூடிய கொள்கைக்கு கைகொடுக்கும் பொருளீய ஆளுகைக்கான கட்டமைப்பை தேர்ந்தெடுப்பான அரசாங்கம் பின்பற்றுவதை அரசமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது என தீர்ப்புரைக்கப்படுவதால் தொழிலகங்களில் தனியார் சொத்துடைமையை இந்த நீதிமன்றம் அங்கீகரித்தது. சொத்துரிமையாளர்கள் கூட்ட மைப்பு மற்றும் பிறர் –எதிர்– மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பிறர், 2024 1 NSC 835 வழக்கில் இந்த நீதிமன்றத்து 9 நீதியர் அரசமைப்பு சட்ட அமர்வின் இந்த நீதிமன்றத்தின் பெரும்பான்மை தீர்ப்புரை சந்தேகத்தையும் பல்பொருளர்த்தத்தையும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

7.முகவுரையில் ஒன்றிணைந்த சமதரும மற்றும் மதச்சார்பற்ற என்ற சொற்கள் சேர்க்கப் பட்டு நாற்பத்தி நான்கு வருடங்கள் கழித்து 2020இன் இந்த நீதிப்பேராணை தாக்கலாகின என்ற பொருண்மை கோருகைகளை குறிப்பாக கேள்வியாக்குகின்றன. மக்களாகிய நாம் என்ற சந்தமில்லாது அவற்றின் அர்த்தத்துடன் பரிந் தொய்யறியப்பட்டவாறு பரவலான இணக்கத்தை இந்த சொற்கள் அடர்ந்திருப்பதிலிருந்து இது ஏற்படுகிறது. அரசமைப்பு சார்ந்த உரிமைகளை அல்லது அரசமைப்பு சாசனத்தின் அடிப்படை கட்டமைப்பை இந்த செய்கைகள் மீறவில்லை எனும் வரம்புரைக்குட்பட்டு தேவையான அரசாங் களால் செய்யப்படும் சட்டங்களை அல்லது கொள்கைகளை முகவுரையில் இந்த சேர்மானங்கள் தடுத்து நிறுத்தியாகவில்லை அல்லது இடை யூறாக்கியதில்லை. கிட்டத்தட்ட 44 ஆண்டு களுக்குப் பின் இந்த அரசமைப்பு சட்ட திருத்தத்துக்கு சவாலிடலுக்கு சட்டப்படியான காரணத்தை அல்லது நியாயத்தை நாங்கள் காணவில்லை. அரசின் சாசன நிலைமை தெளிவாக இருப்பதால் விரிவான ஏட்டளவு தீர்ப்புரைக்கான தேவையை மறுத்துக் கொண்டு, முழுமையான ஆராய்வை இந்த நீதிமன்றம் விவேகாள்வை செலுத்துகையை சந்தர்ப்பங்கள் தேவையாக்கவில்லை. தெளிவாக நிலைமை யாக இது உள்ள நிலையில் இப்போதைய நீதிப் பேராணை மனுவில் அறிவிப்பில் இயற்றலுக் கான நியாயம் அல்லது தேவை எதனையும் நாங்கள் காணவில்லை. அதற்கேற்ப அவை தள்ளுபடியாகின்றன.

இடஒதுக்கீடுக்கான விண்ணப்பங்கள் உட்பட நிலுவையாகும் விண்ணப்பங்களும் தள்ளுபடி யாக வேண்டும்.

பல்வகை மனு எண் 835/2024.பல்வகை மனு ஏற்கப்படுகிறது. நீதிப் பேராணை மனு (F) நாட்குறிப்பு எண் 14904/2024ஐ பதியுமாறு பதிவகம் பணிக்கப்படுகிறது.

நீதிப்பேராணை மனுக்கள் (F) எண் 645 மற்றும் 1467/2020இல் இயற்றப்பட்ட ஆணைகள் காரணத்தில் நீதிப்பேராணை மனு தள்ளுபடியானதாக பாவிக்கப்பட வேண்டும்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

## வழக்குரைஞர்களுக்கு விபத்துக் காப்பீடு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக பார் கவுன்சில் அறிவித்துள்ளது

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் வழக்குரைஞர்களுக்கு 999 என்ற புதிய விபத்து காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய திட்டத்தை உச்சநீதிமன்றம் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், ஆர். மகாதேவன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இது குறித்து பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ் கூறும்போது, பார் கவுன்சிலும், காப்பீட்டு நிறுவனமும் இணைந்து இந்த புதிய விபத்து காப்பீட்டு திட்டத்தை அறிமுகம் செய்து உள்ளோம். வழக்குரைஞர்கள் ஆண்டுக்கு ரூ.999 செலுத்தினால் மட்டும் போதும்.

விபத்து மருத்துவ செலவுக்கு ரூ.3 லட்சமும், விபத்தில் பலியானால் ரூ.25 லட்சம், விபத்தில் உடல் உறுப்பு இழந்தால் ரூ.25 லட்சம் என்று பல்வேறு இழப்பீடு தொகை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்தக் காப்பீட்டில் சேர பார் கவுன்சில் இணையதளம் மூலம் வழக்குரைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று கூறினார்.

**நன்றி: தினத்தந்தி 22.10.2025**

# மூதாதையர் சொத்து என நிரூபணமாகி விட்டால், பிரதிவாதிதான் அதை தனது வருமான கணக்கில் வாங்கப்பட்டது என மெய்ப்பிக்க வேண்டும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி கே.கோவிந்தராஜன் திலகவதி**
**இ.மே.மு. 663/2020 மற்றும்**
**உஇவ மனுக்கள் 13799, 14067/2020**
**தீர்ப்பு ஒத்தி வைப்பு 02/07/2025**
**தீர்ப்பு பகிரப்பட்டது 18/07/2025**
**(2025 (4) CTC 701)**

**டி.ஜோதி ...மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**என்.ராக்கியண்ணன் (இறப்பு)**
**1. ஆர்.பாலுசாமி**
**2. ஆர்.சின்னசாமி ..எதிர்மனுதாரர்கள்**

**வேண்டுகை:** உரிமையியல் நடவடிக்கை சட்டத் தொகுப்பு, 1908ன் பிரிவு 100ன் கீழ் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, கற்றறிந்த முதன்மை மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் அசல் வ.எண் 113/2011ன் மீது 25/08/2014ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை மாற்றியமைத்த மு.மே.மு எண் 84/2015ன் மீது 12/11/2019 நாளிட்டு கற்றறிந்த கூடுதல் சார்நிலை நீதிபதி வழங்கிய தீர்ப்பினை ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளருக்கு – திரு சி.இ.பிரதாப், வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்களுக்கு–திரு.ஐ.சி.வாசு தேவன், வழக்கறிஞர்

## தீர்ப்பு

கற்றறிந்த முதன்மை மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் அசல் வ.எண் 113/2011ன் மீது 25/08/2014ல் பிறப்பிக்கப் பட்ட தீர்ப்பை மாற்றியமைத்த மு.மே.மு எண் 84/2015ன் மீது 12/11/2019 நாளிட்டு கற்றறிந்த கூடுதல் சார்நிலை நீதிபதி வழங்கிய தீர்ப்பினை ரத்து செய்ய வேண்டி இந்த இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த இரண்டாவது மேல்முறையீடு பின் வரும் முக்கிய சட்டக் கேள்வியின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது:

''சா.ஆ.ஆ1–ன் கீழ் வாங்கப்பட்ட சொத்து, சா.ஆ.அ6–ன் கீழ் குறிப்பிட்டுள்ளபடி பிரதிவாதி யின் பாட்டியால் முதல் பிரதிவாதியின் சார்பாக விற்கப்பட்ட கூட்டுக்குடும்பச் சொத்திலிருந்து கிடைத்த விற்பனைத் தொகையைக் கொண்டு வாங்கப்பட்டதால், அது மூதாதையர் சொத்தின் தன்மையைப் பெறும் என்பதை மேல்முறை யீட்டு நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டதா?''

3. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விஷயங் களின் நோக்கம் குறுகியதாக இருப்பதால், வழக்குகளின் உண்மைகளை விரிவாக ஆராய்வது தேவையற்றது.

4. வசதிக்காக, தரப்பினர்கள் விபரம் விசாரணை நீதிமன்றத்தில் அவர்களின் பெயர்கள் குறிப்பிட்ட தரவரிசைப்படி குறிப்பிடப்படுகின்றன.

5. வாதி–ஆனவர் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்துக்களில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். சுருக்கமாக, வாதி மற்றும் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர் அக்கா–தம்பிகள். முதல் பிரதிவாதி இவர்களின் தந்தை. முதல் பிரதிவாதியின் மனைவி நாகம்மாள்,

20.05.2005 அன்று காலமானார். வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலானவை முதல் பிரதிவாதியின் மூதாதையர் சொத்துக்கள். 4 மற்றும் 5ஆம் இனங்கள் பின்னர் 25.01.1978 அன்று மூதாதையர் சொத்துக்களின் வருவாயில் இருந்து முதல் பிரதிவாதியால் வாங்கப்பட்டன. முதல் பிரதிவாதி குடும்பத்தின் கர்த்தா என்பதால், விற்பனை பத்திரம் அவர் பெயரில் பெறப்பட்டது. எவ்வாறாயினும், 4 மற்றும் 5–ஆம் இனங்கள் பொதுவான சொத்தில் சேர்க்கப்பட்டு, ஏற்கனவே உள்ள சொத்துக்களுடன் கலக்கப்பட்டன. எனவே, அனைத்து வழக்கு சொத்துக்களும் மூதாதையர் சொத்து என்ற தன்மையுடையவை ஆகிறது.

5.1. வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யாமல் அனுபவித்து வருகின்றனர். வாதியால் சொத்துக்களின் கூட்டு உடைமையில் இருக்க முடியாததால், அவர் பாகப்பிரிவினை கோரினார். ஆனால், பிரதி வாதிகள் தவிர்க்கும் வகையில் பதில்களை தெரிவித்தனர். 06.02.2011 அன்று, வாதி ஒரு இறுதி கோரிக்கை விடுத்தார். ஆனால், பிரதி வாதிகள் வழக்கு சொத்துக்களின் சில பகுதி களுக்கான வருவாய் ஆவணங்கள் தங்கள் பெயரில் இருப்பதாகக் கூறி அதனை மறுத்தனர். வருவாய் ஆவணங்களின் மாற்றம் சட்டத்திற்கு இணங்க இல்லை. அது செல்லாதது. இந்து வாரிசுரிமை (திருத்த) சட்டம் 39, 2005–இன் படி, வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒவ்வொரு வருக்கும் வழக்கு சொத்துக்களில் 1/4 பங்குக்கு உரிமை உண்டு என வாதி தரப்பில் கோரப்பட்டது. எனவே, வாதி பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டி யிருந்தது.

5.2. பிரதிவாதிகள், வாதியின் கோரிக்கையை எதிர்த்து, 19.06.1930 அன்று, முதல் பிரதிவாதியின் பாட்டி கருப்பம்மாள் மற்றும் முதல் பிரதிவாதியின் தாய் இளைய கருப்பாள் ஆகியோர் இணைந்து S.F. எண். 1059/இ–இல் 1.78 ஏக்கர் நிலத்தை வாங்கினர். அந்த சொத்து வழக்கில் 1 முதல் 3 வரையிலான இனங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 1 முதல் 3 வரை யிலான இனங்கள் கருப்பாள் மற்றும் இளைய கருப்பாள் ஆகியோரின் சுய–சம்பாத்திய சொத்துக்கள். முதல் பிரதிவாதியின் தந்தை, நாச்சி நாவிதன், தனது தாய் மூத்த கருப்பாளுக்கு முன், முதல் பிரதிவாதிக்கு 3 வயதாக இருந்தபோது இறந்துவிட்டார். அந்த மூத்த கருப்பாள், முதல் பிரதிவாதி மற்றும் அவரது தாய் இளைய கருப்பாள் ஆகியோரை தனது சட்டப்பூர்வ வாரிசுகளாக விட்டுவிட்டு, 1950–ஆம் ஆண்டு காலமானார். பின்னர், முதல் பிரதிவாதியின் தாய் இளைய கருப்பாள், 1954–ஆம் ஆண்டு முதல் பிரதிவாதியை மட்டுமே தனது ஒரே சட்டப்பூர்வ வாரிசாக விட்டுவிட்டு காலமானார். அதன் பிறகு, முதல் பிரதிவாதி தனது சொந்த வருவாயில் இருந்து முதல் குறிப்பிட்டுள்ள ஒரு ஓட்டு வீடும், இரண்டாவது குறிப்பிட்டுள்ள ஒரு அடுக்கு மாடி வீடும் கட்டினார். எனவே, முதல் பிரதிவாதி 1 முதல் 3 வரையிலான இனங்களாக குறிப்பிட்டவை களுக்கு தனிப்பட்ட சொத்தாக உரிமை பெற்றுள்ளார். மேலும் அவற்றை அவர் உடைமையில் அனுபவித்து வருகிறார். அனைத்து வருவாய் ஆவணங்களும் முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ளன. பின்னர், முதல் பிரதிவாதி தனது சொந்த வருவாயில் இருந்து 25.01.1978 தேதியிட்ட விற்பனை பத்திரத்தின் கீழ் 4 மற்றும் 5–வதாக குறிப்பிட்ட சொத்துக்களை வாங்கினார். எனவே, அனைத்து வழக்கு சொத்துக்களும் முதல் பிரதிவாதியின் சுய–சம்பாத்திய சொத்துக்கள், அதனால் அவற்றை அவர் கையாள உரிமை பெற்றுள்ளார். வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலான இனங்கள் மூதாதையர் சொத்துக்கள் மற்றும் 4 மற்றும் 5–ஆம் இனங்கள் பொதுவான சொத்தில் சேர்க்கப்பட்டன என்பது தவறு. அங்கு கூட்டுக்குடும்பச் சொத்து இல்லை. எனவே பொதுவான சொத்து மற்றும் கலப்பின் கேள்விக்கே இடமில்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்துக்களின் கூட்டு உடைமை யில் இருந்து அனுபவித்து வருவதாகவும், வாதி பாகப்பிரிவினை கோரியதாகவும் கூறுவது தவறு என்றும் மேலும் வாதிடப்பட்டது. வாதி, முதல் பிரதிவாதியின் ஒரே மகள் என்பதால், அவரது

திருமணம் சமூகத்தின் பழக்கவழக்கத்தின்படி, சீர் வரிசையுடன் கோலாகலமாக நடத்தப்பட்டது. முதல் பிரதிவாதி 09.11.2010 அன்று பிரதிவாதிகள் 2 மற்றும் 3-இன் பெயருக்கு ஒரு அறுதியாவண பத்திரம் எழுதிக் கொடுத்தார். எனவே, பிரதிவாதிகள் 2 மற்றும் 3 வழக்கு சொத்துக்களை உடைமையில் அனுபவித்து வருகின்றனர். வாதி, இந்த முக்கியமான உண்மைகளை மறைத்து, இந்த வழக்கை தீய நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளார். எனவே இது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5.3. வாதி தாக்கல் செய்த மறுப்பு அறிக்கையில், வழக்கு சொத்துக்கள் முதல் பிரதிவாதியின் சுய-சம்பாத்திய சொத்துக்கள் என்று கூறுவது தவறு என்றும், வாதியின் திருமணத்தை முதல் பிரதிவாதி சீர் வரிசையுடன் கோலாகலமாக நடத்தினார் என்பதும் பொய் என்றும் கூறப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களில் முதல் பிரதிவாதிக்கு 1/4 பங்கு மட்டுமே இருப்பதால், பிரதிவாதிகள் 2 மற்றும் 3-இன் பெயரில் ஒரு அறுதியாவண (செட்டில்மெண்ட்) பத்திரம் எழுதிக் கொடுக்க அவருக்கு உரிமை இல்லை. 09.11.2010 தேதியிட்ட அந்த ஒப்பந்தப் பத்திரம் ஒரு போலியான ஆவணம். ஏனெனில் முதல் பிரதிவாதிக்கு அவரது வயோதிகம் காரணமாக அவரைச் சுற்றி நடக்கும் விஷயங்களைப் புரிந்துகொள்ளும் திறன் இல்லை. எனவே, அந்த அறுதியாவணப் பத்திரம் வாதியைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கப்பட்டது.

5.4. மேற்கண்ட வாதங்களைக் கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் பின்வரும் பிரச்சனைகளை வனைந்து கொண்டது:

1. ‘‘கோரப்பட்டபடி வாதிக்கு வழக்கு சொத்துக்களில் 1/4 பங்குக்கு உரிமை உள்ளதா மற்றும் பாகப்பிரிவினை மற்றும் தனி உடைமைக்கான நிவாரணத்திற்கு உரிமை உள்ளதா?

2. வாதியால் வாதிடப்பட்டபடி வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலான இனங்கள் முதல் பிரதிவாதியின் கையில் மூதாதையர் சொத்துக்களாக உள்ளதா?

3. வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு உடைமை மற்றும் அனுபவத்தில் உள்ளதா?

4. என்ன நிவாரணம்?

5. வழக்கு சொத்துக்களில் 4 மற்றும் 5-ஆம் இனங்கள் முதல் பிரதிவாதியால் மூதாதையர் சொத்துக்களின் வருவாயில் இருந்து வாங்கப்பட்டதா?

6. 09.11.2010 தேதியிட்ட அறுதியாவண ஒப்பந்தப் பத்திரம், முதல் பிரதிவாதியால் பிரதிவாதிகள் 2 மற்றும் 3-இன் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது செல்லுபடியாகுமா இல்லையா?’’

5.5. விசாரணை நீதிமன்றத்தில், வாதி தன்னை வாதி தரப்பு சாட்சி P.W.1 ஆக விசாரித்து, உது.அ1 முதல் உது.அ6 வரை ஆவணங்களை சான்றாவணங்களாக சமர்ப்பித்தார். 2வது பிரதிவாதி தன்னை பிரதிவாதி தரப்பு சாட்சி D.W.1 ஆகவும், மேலும் இரண்டு சாட்சிகளை D.W.2 மற்றும் D.W.3 ஆகவும் விசாரித்து, Ex.B1 முதல் ஆ6 வரை சான்றாவணங்களை சமர்ப்பித்தார்.

5.6. விசாரணை நீதிமன்றம், வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்கள் மற்றும் தரப்பினர்களின் வழக்கறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கருத்தில் கொண்டு, பின்வருமாறு வழக்கில் தீர்ப்பளித்தது:

1. வழக்கு சொத்துக்களில் கட்சிகளின் பங்குகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றன:

a) வாதியின் பங்கு - 2/8

b) 2வது பிரதிவாதியின் பங்கு - 3/8

c) 3வது பிரதிவாதியின் பங்கு - 3/8

2. பிரதிவாதிகள், வழக்கு சொத்துக்களை நல்லது மற்றும் கெட்டது என சரிசமமாக 8 பங்குகளாகப் பிரிக்கவும், வாதிக்கு அத்தகைய இரண்டு பங்குகளை ஒதுக்கீடு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. அவ்வாறு செய்யத் தவறினால், வாதி ஒரு ஆணையரை நியமிப்பதன் மூலம் மற்றும் இறுதி பாகப்பிரிவினை ஆணை பெறுவதற்காக நீதிமன்றம் மூலம் சொத்துக்களைப் பிரிப்பதற்கு விண்ணப்பிக்க சுதந்திரம் உடையவர்.

4. செலவுகள் இல்லை.

5.7. இதனால் பாதிக்கப்பட்ட பிரதிவாதிகள், ஈரோடு, I கூடுதல் துணை நீதிமன்றத்தில் அ.கு. எண். 84/2015–இல், ஈரோடு, மாவட்ட முன்சீப் அவர்களால் வழக்கு எண். 113/2011–இல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீடு செய்தனர்.

5.8. 12.11.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையின்படி, ஈரோடு, I கூடுதல் துணை நீதிபதி, ஈரோடு, மாவட்ட முன்சீப் அவர்களால் 25.08.2014 அன்று வழங்கப்பட்ட வழக்கு எண். 113/2011–இன் தீர்ப்பு மற்றும் ஆணையை ரத்து செய்து, மேல்முறையீட்டை அனுமதித்து, வழக்கை தள்ளுபடி செய்தார்.

6. இதனால் பாதிக்கப்பட்ட வாதி, இந்த இரண்டாவது மேல்முறையீட்டோடு இந்த நீதிமன்றத்தினை அணுகியுள்ளார்.

7. மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பு கற்ற றிந்த வழக்கறிஞர், சா.ஆ.அ6 விற்பனை பத்திரம் 19.06.1930 மற்றும் அதன் கீழ் உள்ள குறிப்பிட்ட வாசகங்களை முழுமையாக நம்பி, 1 முதல் 3 வரையிலான இனங்கள் மூதாதையர் தன்மையுடையவை என்பதை நிரூபிக்காமல், விசாரணை நீதிமன்றம் ஒரு அப்பட்டமான தவறை இழைத்ததாக தவறாகக் கருதி, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலை களுக்கு சட்டம் சார்ந்து ஒரு பிழையை இழைத்துள்ளது என்று சமர்ப்பிக்கிறார்.

7.1. அவரது அடுத்த வாதம் என்ன வென்றால், சா.ஆ.A6–இல் உள்ள குறிப்பிட்ட வாசகம் சா.ஆ.ஆ1–இல் உள்ள ஒரு வார்த்தை ஆகும், இது வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலான இனங்கள் மூத்த மற்றும் இளைய கருப்பாள் ஆகியோரால், சா.ஆ.A6–இன் கீழ் சொத்தை விற்பதன் மூலம் கிடைத்த விற்பனை தொகையில் இருந்து முழுமையாக வாங்கப் பட்டன என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. எனவே, இது சட்டத்தில் மூதாதையர் சொத்துக் களாக கண்டிப்பாகக் கருதப்பட வேண்டும். அதில் மேல்முறையீட்டாளர்/வாதி–க்கு வழக்கில் கோரப்பட்ட 1/4 பங்குக்கு உரிமை உண்டு. அவரது அடுத்த வாதம் என்னவென்றால், முதல் பிரதிவாதியால் 25.01.1978 அன்று சா.ஆ.ஆ1 விற்பனை பத்திரத்தின் மூலம் வாங்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கு சொத்துக்களின் 4 மற்றும் 5–ஆம் இனங்கள் மூதாதையர் சொத்துக்களின் வருவாயில் இருந்து வாங்கப்பட்டன. மேலும் அந்த ஆவணங்கள் முதல் பிரதிவாதியின் பெயரில் மட்டுமே உள்ளன, இது குறுக்கு விசாரணையில் பிரதிவாதி தரப்பு சாட்சி.1–ஆல் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. எனவே, அவை மூதாதையர் சொத்துக்களாகக் கருதப்பட வேண்டும். மேலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், 1956–ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டத்தின் பிரிவு 14(2)–ஐ இந்த வழக்கில் பயன்படுத்தாதன் காரணமாக, வழக்கு சொத்துக்களின் மூதாதையர் தன்மையை கருத்தில் கொள்ளாமல் தவறிழைத்துள்ளது என்று சமர்ப்பிக்கப்படுகிறது. ஏனெனில் மூத்த மற்றும் இளைய கருப்பாள் முறையே 1950 மற்றும் 1954–ஆம் ஆண்டுகளில், அதாவது சட்டம் தொடங்குவதற்கு முன்பே காலமானனர். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சா.ஆ.B3 அறுதியாவண ஒப்பந்தப் பத்திரம் 09.11.2010–ஐ கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. அதில் சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்களாக விவரிக்கப்பட்டுள்ளன. இதுவே முதல் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை மூதாதையர் சொத்துக் களாகவே கருதினார் என்ற உண்மையை நிலைநிறுத்த போதுமானது. எனவே, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய கண்டுபிடிப்புகள் தவறானவை, மேலும் இந்த நீதிமன்றத்தின் தலையீடு கோரப்படுகிறது.

8. இருதரப்பினரின் வாதங்களும் கேட்கப் பட்டன. ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

9. இந்த மேல்முறையீட்டில் பரிசீலிக்க வேண்டிய முக்கிய குறிப்பு யாதெனில், முதல் பிரதிவாதிக்கு வாரிசாகக் கிடைத்த வழக்கு சொத்துக்கள் 1 முதல் 3 வரை, அவரது கையில் மூதாதையர் சொத்துக்களாகக் கருதப்படுமா அல்லது சுய–சம்பாத்திய சொத்துக்களாகக் கருதப்படுமா என்பதுதான். இந்த சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்று வாதிடும் வாதி

யின் மீதுதான் ஆரம்ப சான்றின் சுமை உள்ளது. வாதியின் கூற்றுப்படி, 1 முதல் 3 வரையிலான இனங்கள் இரண்டு பெண்களின் பெயரில் வாங்கப்பட்டாலும், அவை அவரது தாத்தாவின் மூதாதையர் சொத்தை சா.ஆ.A6-இன் கீழ் விற்ற பிறகு வாங்கப்பட்டதால், அவை மூதாதையர் சொத்துக்களாகவே உள்ளன. சா.ஆ.A.6-ஐ ஆய்வு செய்தபோது, வாதியின் பாட்டி மூத்த கருப்பாள் மற்றும் அவரது தாய் இளைய கருப்பாள் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்ட முதல் பிரதிவாதி, துய்யம்பூந்துறை கிராமத்தின் பழைய S.F. எண். 1036 மற்றும் 1037-இல் 1.14 ஏக்கர் நிலத்தை முத்து கவுண்டன் என்பவருக்கு விற்றது தெரியவந்தது. விசாரணை நீதிமன்றம் சரியாகக் கூறியது போல, சா.ஆ.A.6 விற்பனை பத்திரத்திற்கும் சா.ஆ.ஆ.1 விற்பனை பத்திரத்திற்கும் சில தொடர்பு உள்ளது. இது தொடர்பான விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் இருந்து தொடர்புடைய பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

● 'முதலாவதாக, சா.ஆ.A6 மற்றும் சா.ஆ.B1 இரண்டும் ஒரே நாளில், அதாவது 19.6.1930 அன்று எழுதப்பட்டன. சா.ஆ.A6 ஈரோடு துணைப் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண் 1473/1930 ஆகவும், சா.ஆ.B1 அடுத்த ஆவணமாக ஆவணம் எண் 1474/1930 ஆகவும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

● இரண்டாவதாக, முத்து கவுண்டனின் மகன் முத்து கவுண்டன், சா.ஆ.A6-இல் வாங்குபவ ராகவும், சா.ஆ.B1-இல் விற்பவராகவும் இருந்தார்.

● மூன்றாவதாக, சா.ஆ.அ6-இன் சொத்து S.F. எண். 1036 மற்றும் 1057-இல் 1.14 ஏக்கர் ஆகும், மற்றும் சா.ஆ.B1-இன் சொத்து கு.ஊ. எண். 1059C-இல் 1.78 ஏக்கர் ஆகும். இந்த இரண்டு நிலங்களும் ஒரே துய்யம் பூந்துறை கிராமத்தில் அமைந்துள்ளன. மேலும் அவை ஒரே இடத்திலேயே அமைந்துள்ளதாகத் தெரிகிறது.

● நான்காவதாக, சா.ஆ.A6 மற்றும் சா.ஆ.B1-இன் விற்பனைத் தொகை ஒரே மாதிரியாக, அதாவது ரூ.100/- ஆக உள்ளது.

● ஐந்தாவதாக மற்றும் மிக முக்கியமாக, இரண்டு விற்பனை பத்திரங்களின் விற்பனை நோக்கம் ஒரே மாதிரியாக உள்ளது. சா.ஆ.A6-இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''இந்த ஆவணத்தில் கண்ட பூமிகளை ரூ.100-00-க்கு கிரையம் செய்து கொடுத்து வேறு பூமி கிரையத்திற்கு வாங்குவதற்காக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ.100-00''

சா.ஆ.B1-லும் இதேபோன்ற ஒரு வாசகம் உள்ளது, அது பின்வருமாறு:

''இந்த ஆவணத்தில் கண்ட பூமியை ரூ.100-00-க்கு கிரையம் செய்து கொடுத்து வேறு பூமி கிரையத்திற்கு வாங்குவதற்காக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ.100-00''

சா.ஆ.A6-இல் உள்ள வாசகத்திலிருந்து, மூத்த கருப்பாள் மற்றும் முதல் பிரதிவாதி ஆகியோர் தங்கள் சொத்தை ரூ.100/-க்கு முத்துசாமி என்பவருக்கு விற்றுவிட்டு, அதே நாளில் சா.ஆ.B1-இன் கீழ் அதே முத்துசாமி யிடம் இருந்து அதே விற்பனைத் தொகைக்கு வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலான இனங்களை வாங்கியது தெரியவருகிறது. எனவே, மூத்த மற்றும் இளைய கருப்பாள் ஆகியோரால் வாங்கப்பட்ட வழக்கு சொத்துக்கள் 1 முதல் 3 வரை, சா.ஆ.A6-இன் கீழ் சொத்தை விற்றதன் மூலம் கிடைத்த விற்பனை தொகை யில் இருந்து முழுமையாக வாங்கப்பட்டன. மேலும் அவை வாங்குவதற்கு வேறு எந்த பணத்தையும் செலவிடவில்லை என்று உறுதி யாகக் கூறலாம். இப்போது, சா.ஆ.அ.6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூதாதையர் தன்மை யுடையதா என்பதைப் பார்க்க வேண்டும். விசாரணை நீதிமன்றம் சா.ஆ.A.6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து முதல் பிரதிவாதியின் மூதாதையர் சொத்து என்ற முடிவுக்கு வந்துள்ளது. தீர்ப்பின் தொடர்புடைய பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

'11. வாதியின் வழக்கறிஞர், சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூதாதையர் சொத்து என்றும், எனவே, மூதாதையர் சொத்தின்

விற்பனை தொகையில் இருந்து வாங்கப்பட்ட தால், சா.ஆ.B1–இன் கீழ் வாங்கப்பட்ட சொத்தும் ஒரு மூதாதையர் சொத்து என்றும் சமர்ப்பித்தார். அத்தகைய ஒப்புமையை குறிப்பிட, சா.ஆ.A6–இன் கீழ் விற்கப்பட்ட சொத்து ஒரு மூதாதையர் சொத்து என்பதை நிரூபிக்க வேண்டும். அதை கண்டறிய, சா.ஆ.A6 தவிர வேறு எந்த ஆவணங்களோ அல்லது ஆதாரங்களோ கிடைக்கவில்லை. எனவே, இந்த நீதிமன்றம் சா.ஆ.அ6–இன் வாசகங்கள் மற்றும் சூழ்நிலை களிலிருந்து முடிவெடுக்க வேண்டும். சா.ஆ.A6–இல், அந்த சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்றோ அல்லது அவை ஒரு ஆண் உறுப்பினரிடம் இருந்து வாரிசுரிமையாக பெறப்பட்டவை என்றோ குறிப்பிடப்படவில்லை. வாதியின் வழக்கறிஞர், முதல் பிரதிவாதி சா.ஆ.A6–இல் விற்பவர்களில் ஒருவர் என்றும், அவரது தாயால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார் என்றும் சமர்ப்பித்தார். எனவே, சா.ஆ.A6–இன் கீழ் விற்கப்பட்ட சொத்து, முதல் பிரதிவாதியால் அவரது தந்தை அல்லது அவரது தாத்தாவிடம் இருந்து வாரிசுரிமையாக பெறப்பட்ட சொத்து என்று அவர் வாதிட்டார். மறுபுறம், பிரதிவாதி களின் வழக்கறிஞர், முதல் பிரதிவாதி அந்த நேரத்தில் ஒரு சிறுவன் என்றும், முன்னெச்சரிக்கை யாக அவரது பெயர் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் சமர்ப்பித்தார். சா.ஆ.அ6–இல் அவர் சொத்தை மூதாதையர் வழியில் பெற்றார் என்று எந்த வாசகமும் இல்லை. ஆனால் அது அவர் களின் சொந்த சொத்து என்ற ஒரு உறுதிப்பாடு உள்ளது என்று அவர் சமர்ப்பித்தார். இந்த வகையில், பிரதிவாதிகளின் வழக்கறிஞர் சா.ஆ.A6–இல் சொத்தின் விளக்கத்தில் உள்ள வாசகங்களை குறிப்பிட்டார். அது பின்வருமாறு:

''துய்யம்பூந்துறை கிராமத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிற க.ச.1036 நெ.பு.எ.12.8–க்கு 9.13.0 க.ச.1037 நெ.பு.எ.2.21–க்கு 1.13.0 ஆக ஏக்கர் 14.29–க்கு 11.10 இதில் எங்கள் பங்காசாரம் தோட்டம் புஞ்சை உட்பட பொதுவில் ஏக்கர் 1.14 இந்த பூமியும்''

பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர், சா.ஆ.A6–இல் அந்த சொத்து அவர்களுக்கு சொந்தமானது என்றும், அவர்கள் அதை அனுபவித்து வருகின்றனர் என்றும் ஒரு குறிப்பிட்ட வாசகம் உள்ளது என்று சமர்ப்பித்தார். அந்த சொத்து எந்த ஒரு ஆண் உறுப்பினரிடம் இருந்தும் வாரிசுரிமையாக பெறப்பட்டது என்று எந்த வாசகமும் இல்லை என்றும், எனவே, அது ஒரு பெண்ணின் சொத்து என்றும் அவர் மேலும் சமர்ப்பித்தார்.

12. பிரதிவாதிகளின் கூற்றுப்படி, சா.ஆ.A6–இல் முதல் பிரதிவாதியின் பெயர் ஒரு விற்பவராகக் குறிப்பிடப்பட்டது முன்னெச்சரிக்கை யாக இருக்கலாம். 'எங்களுக்கு பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிற' என்ற வாக்கியம், சா.ஆ.அ6–இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூத்த கருப்பாள் மற்றும் அவரது பேரன் ஆகியோருக்கு சொந்தமானது என்பதை குறிக்கிறது. எனவே, இந்த நீதிமன்றம் இந்த அம்சத்தை கவனிக்காமல், முதல் பிரதிவாதியின் பெயரை புறக்கணிக்க முடியாது. சொத்து மூதாதையர் சொத்து என்று குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்று பிரதி வாதிகள் வாதிடும்போது, அதேபோல், அந்த சொத்து மூத்த கருப்பாளின் சுயாதீனமான, சுய–சம்பாத்திய அல்லது ஸ்திரீதன சொத்து என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை. அத்தகைய குறிப்பிட்ட வாசகங்கள் இல்லாத நிலையில், இந்த நீதிமன்றம் அந்த வாக்கியத்தை அதன் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வாசகங்களின்படி, சா.ஆ.A6–இன் கீழ் விற்கப்பட்ட சொத்து, மூத்த கருப்பாள் மற்றும் அவரது பேரனின் கூட்டுச் சொத்தாக இருந்திருக்கிறது.

13. சா.ஆ.A6 தொடர்பாக, பிரதிவாதிகள் ம.த.சாட்சி1–ஐ குறுக்கு விசாரணை செய்தனர், அது பின்வருமாறு:

'வா.சா.A6–இல் கிரயம் செய்யப்பட்ட சொத்து என் தந்தைக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். வா.சா.A6–இல் கண்டுள்ள சொத்து என் தந்தையின் பூர்வீக சொத்தே அல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்காக அந்த சொத்து பூர்வீக சொத்து என்று தவறாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும் என்

தந்தையின் பாட்டிக்கும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் வா.சா.A6-இல் சம்பந்தப்பட்ட சொத்து என்றால் சரியல்ல'.

பிரதிவாதிகள், சா.ஆ.A6-இன் கீழ் விற்கப் பட்ட சொத்து, மூத்த கருப்பாள் மற்றும் முதல் பிரதிவாதியின் கூட்டுச் சொத்து என்று ம.த. சாட்சி1-க்கு ஒரு ஆலோசனையை கூட முன்வைத்தனர். இந்த ஆலோசனையை முன் வைப்பதன் மூலம், சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்தில் முதல் பிரதிவாதிக்கு பாதி பங்கு உள்ளது என்பதை பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டனர். ஆனால் அத்தகைய ஆலோசனை, அது முதல் பிரதிவாதி மற்றும் மூத்த கருப்பாளின் தனிப்பட்ட சொத்து என்ற சாக்கில் முன்வைக்கப்பட்டது. இப்போது, ஒரு பாட்டியும் அவரது பேரனும் எந்த சூழ்நிலையில் சொத்துக்களை கூட்டாக வைத்திருக்க முடியும் என்பதை நாம் பார்ப்போம்.

14. பழைய இந்து சட்டத்தின்படியும், பெண்கள் ஸ்திரீதனத்தின் மூலம் தங்கள் சொந்த சொத்துக்களை வைத்திருக்க உரிமை பெற்றி ருந்தனர். பொதுவாக, பெண்கள் தங்கள் பெற்றோரிடமிருந்தோ அல்லது பிற உறவினர் களிடமிருந்தோ அல்லது தங்கள் கணவரிட மிருந்தோ பரிசுகளின் மூலம் சொத்துக்களை பெறலாம். சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூத்த கருப்பாளுக்கு மட்டுமே சொந்த மானது என்றால், அவர் அதை பரிசாகவோ அல்லது தனது பெற்றோரிடமிருந்து வாரிசு ரிமையாகவோ பெற்றார் அல்லது தனது சொந்த வழிகளில் வாங்கினார் என்று கருதலாம். சொத்தின் இணை உரிமையாளராக முதல் பிரதிவாதியின் இருப்பானது, சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து அவரது ஸ்திரீதன சொத்தாக இருப்பதற்கான எந்த சாத்தியத்தையும் நிராகரித்துள்ளது. ஏனெனில் ஒரு பெண்ணின் ஸ்திரீதன சொத்தில் ஒரு பேரன் இணை உரிமை யாளராக இருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

15. முதல் பிரதிவாதியின் தாய் இளைய கருப்பாள் குடும்பத்திற்கு ஒரு மருமகளாக வருகிறார். மேலும் அவர் தனது சொந்த சொத்தை குடும்பத்திற்குள் கொண்டு வரவில்லை என்று தெரிகிறது. அதனால்தான், அவர் ஒரு விற்பவராகக் காட்டப்படாமல், இளவரின் பாதுகாவலராக மட்டுமே காட்டப்பட்டார். முதல் பிரதிவாதி ஒரு இளவர் மற்றும் சா.ஆ.அ6 மற்றும் சா.ஆ.ஆ1-பதிந்த நேரத்தில் அவருக்கு பெரும்பாலும் 5 வயதாக இருக்கலாம். எனவே, அவர் சொத்தை வாரிசுரிமையாக பெறாத வரை, அவர் தானாகவே எந்த சொத்தையும் வாங்கு வதற்கோ அல்லது சொந்தமாக வைத்தி ருப்பதற்கோ வாய்ப்பு இல்லை. முதல் பிரதிவாதி தனது தாத்தா அல்லது தனது தந்தையிடம் இருந்து வாரிசுரிமை மூலம் சொத்தில் உரிமை பெற்றிருக்க அதிக வாய்ப்பு உள்ளது. முதல் பிரதிவாதி தனது தந்தை அல்லது தாத்தாவிடம் இருந்து வாரிசுரிமை மூலம் ஒரு சொத்தை பெற்றால் அது அவரது மூதாதையர் சொத்தாக இருக்கும். ஒரு இளவர் சிறுவனின் சொத்தில் பாதி மூதாதையர் சொத்தாக இருந்தால், மீதி பாதியும் மூதாதையர் சொத்தாக இருப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

16. சொத்தின் தன்மையை தெளிவுபடுத்த, சா.ஆ.A6-ஐ அடையாளமிட்ட பிறகு, வாதி பி.வா.தரப்பு சாட்சி 1ஐ மீண்டும் அழைத்து அவரை குறுக்கு விசாரணை செய்தார். பி.வா.சா1-இன் குறுக்கு விசாரணையின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு:

'என் தந்தைக்கு பாதுகாவலராக அவரின் தாய் கருப்பாள் மற்றும் அவர் சார்பாக சேர்ந்து ஒரு முத்துக் கவுண்டன் மகன் முத்துக் கவுண்டனுக்கு ரூ.100/- ஒரு சொத்தை கிரயம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் புல எண் 1036, 1037-இல் அமைந்துள்ள பொதுவில் 14.29 ஏக்கரில் 1.14 ஏக்கர் கிரயம் செய்யப் பட்டுள்ளதால், அது பாகப் பிரிக்கப்படாத பூர்வீக சொத்து என்றால் சரி அல்ல'.

வாதி சுட்டிக்காட்டியபடி, சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து, மொத்தம் 14.29 ஏக்கர் பரப்பளவில் 1.14 ஏக்கர் மட்டுமே கொண்ட ஒரு பிரிக்கப்படாத பங்கு ஆகும். இது குடும்பத்திற்கு ஒரு பெரிய சொத்தில் ஒரு பிரிக்கப்படாத உரிமை இருந்தது என்பதைக் காட்டும். இந்த அம்சத்தில் சில பொருத்தமான கேள்விகள்

எழுகின்றன. அந்த கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடிய ஒரே நபர் முதல் பிரதிவாதிதான். அவர் அந்த நேரத்தில் ஒரு இளவராக இருந்த போதிலும், அவர் வளர்ந்தபோது சொத்தின் தன்மை குறித்து தனிப்பட்ட அறிவைப் பெற்றி ருக்கலாம். இன்றுவரை, முதல் பிரதிவாதிக்கு சுமார் 90 வயது ஆகிறது. முதல் பிரதிவாதி நல்ல மனநிலையில் இல்லை என்றும், அவர் 2வது மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு ஆதர வாக ஒரு அறுதியாவண ஒப்பந்தப் பத்திரத்தை நிறைவேற்றிய செல்லுபடியாகும் தன்மையை எதிர்ப்பதற்காக அவர் அத்தகைய வாதத்தை முன்வைத்துள்ளார் என்றும் வாதி கூறுகிறார். மறுபுறம், 2வது மற்றும் 3வது பிரதிவாதிகள், முதல் பிரதிவாதி ஆரோக்கியமாக, நடக்கக் கூடியவராக உள்ளார் என்றும், ஆனால் அவரால் தனது வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை என்றும் கூறுகிறார்கள். முதல் பிரதிவாதி ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டி ருந்தால், இந்த சிக்கலான பிரச்சனையை இந்த நீதிமன்றம் முடிவு செய்ய உதவியாக இருந்திருக்கும்.

17. முதல் பிரதிவாதியின் தாய் சொத்தின் உரிமையாளராக ஆவணத்தை நிறைவேற்ற வில்லை. ஆனால் அவர் இளவரின் பாதுகாவல ராக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளார் என்ற உண்மையிலிருந்து, அந்த சொத்து முதல் பிரதி வாதியால் அவரது தந்தையார் பக்கத்திலிருந்து வாரிசுரிமையாக பெறப்பட்டது என்று இது காட்டும். சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூத்த கருப்பாளின் ஸ்திரீதன சொத்தாக இருந்திருந்தால், அவர் தனது பேரனை ஆவணத்தை நிறைவேற்றுபவர்களில் ஒருவராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த அனைத்து காரணிகளும், சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து மூத்த அல்லது இளைய கருப்பால் அவர்களின் பெற்றோரிடமிருந்தோ அல்லது அவர்களின் தனிப்பட்ட கொள்முதல் மூலமாகவோ கொண்டுவரப்பட்ட ஸ்திரீதன சொத்து அல்ல என்பதைக் காட்டும். மூத்த கருப்பாள் மற்றும் அவரது பேரன் முதல் பிரதிவாதி ஆகியோர் ஒரு ஆண் உறுப்பினரிடம் இருந்து சொத்தை கூட்டாக வாரிசுரிமையாக பெற்றிருக்க மட்டுமே வாய்ப்பு உள்ளது. எனவே, சா.ஆ.A6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து, முதல் பிரதிவாதி மைனராக இருந்தபோது அவரது கையில் மூதாதையர் சொத்தாக இருந்தது என்றும், அது மூத்த கருப்பாள் தனது கணவரிடமிருந்து வாரிசுரிமையாக பெற்ற சொத்து என்றும் இதன்மூலம் தீர்மானிக்கப் படுகிறது.''

10. எனவே, சா.ஆ.A6-இன் கீழ் விற்கப் பட்ட சொத்து ஒரு மூதாதையர் சொத்து என்றும், எனவே, மூதாதையர் சொத்தின் விற்பனை தொகையிலிருந்து வாங்கப்பட்டதால், சா.ஆ.B.1-இன் கீழ் வாங்கப்பட்ட சொத்தும் ஒரு மூதாதையர் சொத்து என்றும் விசாரணை நீதிமன்றம் சரியாகக் கூறியுள்ளது. பொதுவாக, ஒரு சொத்து மூதாதையர் சொத்திலிருந்து கிடைத்த விற்பனைத் தொகையைக் கொண்டு வாங்கப்பட்டால், அது மூதாதையர் சொத்தாகவே கருதப்படும். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சா.ஆ.A6-ஐ சரியான கண்ணோட்டத்தில் கவனிக்கத் தவறி விட்டது. மேலும் வாதி தனது புகாரில் சா.ஆ.A6 பற்றி வாதிடத் தவறிவிட்டார் என்று கூறி சா.ஆ.A6-ஐ வெறுமனே புறக்கணித்தது. எந்த ஒரு பேரனும் ஒரு பெண்ணின் ஸ்திரீதன சொத்தில் இணை-உரிமையாளராக இருக்க மாட்டார் என்ற சாக்கில் சா.ஆ.A.6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்து ஸ்திரீதன சொத்தாக இருப்பதற்கான சாத்தியக்கூறை நீக்கியதில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானது. மேலும், பிரதிவாதிகளே, அவர்களின் தந்தை, அதாவது முதல் பிரதிவாதிக்கு சா.ஆ.A.6-இன் கீழ் விற்கப்பட்ட சொத்தில் பாதி பங்கு உள்ளது என்று ஒப்புக்கொண்டனர். முதல் மேல்முறை யீட்டு நீதிமன்றம் மேற்கண்ட உண்மைகளை கவனிக்கத் தவறி, வழக்கு சொத்துக்களில் 1 முதல் 3 வரையிலான இனங்கள் முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று தவறாகக் கூறியது. சொத்துக்கள் இரண்டு பெண்களின் பெயரில் வாங்கப்பட்டிருந்தாலும், அவர்கள் 1956 இந்து வாரிசு சட்டம் வருவதற்கு முன்பு இறந்ததால், முதல் பிரதிவாதிக்கு மகன்கள் பிறந்தவுடன், அந்த சொத்து மூதாதையர் சொத்தாகவே அதன் தன்மையை தக்க வைத்துக்

கொள்கிறது என்று விசாரணை நீதிமன்றம் சரியாகக் கூறியுள்ளது. மேலும், 4 மற்றும் 5–ஆம் இனங்கள் வாங்குவதற்கு செலவழிக்கப் பட்ட பணத்தின் மூலத்தை பிரதிவாதிகள் நிறுவத் தவறிவிட்டனர், மேலும் அந்த சொத்துக்களை வாங்குவதற்கான தனது தனிப்பட்ட வருமானம் பற்றி விளக்க முதல் பிரதிவாதி சாட்சி கூண்டில் ஏறத் தவறி விட்டார். எனவே, வழக்கு சொத்துக்களின் 4வது மற்றும் 5வது இனங்களும் மூதாதையர் சொத்துக்களின் வருவாயிலிருந்து வாங்கப்பட்ட மூதாதையர் சொத்துக்கள் என்று விசாரணை நீதிமன்றம் சரியாகக் கூறியுள்ளது.

11. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தின் நன்கு நியாயப் படுத்தப்பட்ட தீர்ப்பில் தலையிட்டது தவறு. மேலும், சா.ஆ.A.6–இல் உள்ள வாசகங்கள் சா.ஆ.B.1–இல் உள்ள வாசகங்களுக்கு ஒத்தவை என்பதையும், இது சா.ஆ.B.1 சொத்துக்கள் சா.ஆ.A.6–இன் கீழ் சொத்தை விற்பதன் மூலம் கிடைத்த விற்பனை தொகை யில் இருந்து முழுமையாக வாங்கப்பட்டன என்ற உண்மையை நிறுவும் என்பதையும் கருத்தில் கொள்ளாமல், விசாரணை நீதிமன்றம் சா.ஆ.A.6–ஐ ஆதாரமாக ஏற்றுக்கொண்டது ஒரு அப்பட்டமான பிழை என்று கூறியது தவறு. மேலும், ஒரு சொத்துக்கு பதிலாக மற்றொரு சொத்து பெறப்படும்போது, பெறப்பட்ட சொத்து, அதற்கு பதிலாக வைக்கப்பட்ட சொத்தின் தன்மையைப் பெறுகிறது [பார்வை: டோட் சிங் மற்றும் சிலர் –எ– பேகம் பாய், (AIR 1960 MP 64). மேலும், மூதாதையர் சொத்துக்களின் இருப்பு நிரூபிக்கப்பட்டவுடன், 4 மற்றும் 5–ஆம் இனங்களில் உள்ள சொத்துக்கள் முதல் பிரதிவாதியின் சுய–சம்பாத்தியங்கள் என்பதை நிறுவ வேண்டிய சுமை பிரதிவாதிகள் மீது மாறுகிறது என்பதை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது. முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை பிரதிவாதிகள் நிரூபிக்கத் தவறியதால், வழக்கு சொத்துக்களின் 4வது மற்றும் 5வது இனங்களும் மூதாதையர் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து வாங்கப்பட்ட மூதாதையர் சொத்துக்களாக கருதப்பட வேண்டும்.

12. எனவே, மேல்முறையீட்டாளர்/வாதி யால் திட்டமிடப்பட்டபடி, உண்மை மற்றும் சட்ட அம்சங்களைப் பாராட்டாமல், விசாரணை நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புகளில் தலையிட்டு வழக்கை தள்ளுபடி செய்ததில் முதல் மேல் முறையீட்டு நீதிமன்றம் தவறு செய்தது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட காரணங்கள், இந்த வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு பொருத்தமற்றவை, சரியானவை அல்ல, மேலும் வக்கிரமானவை என்று கண்டறியப்படுகிறது.

13. இதன் விளைவாக, இரண்டாவது மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஈரோடு, I கூடுதல் துணை நீதிபதி அவர்களால் A.S. எண் 84/2015–இல் 12.11.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் ஆணை ரத்து செய்யப்படுகிறது. மேலும், ஈரோடு, முதன்மை மாவட்ட முன்சீப் அவர்களால் O.S. எண் 113/ 2011–இல் 25.08.2014 அன்று வழங்கப் பட்ட தீர்ப்பு உறுதி செய்யப்படுகிறது. இந்த சூழ்நிலைகளில், இந்த மேல்முறையீட்டில் தரப்பினர்கள் தங்கள் சொந்த செலவுகளை ஏற்க வேண்டும். இதன் விளைவாக, தொடர்புடைய பிற மனுக்கள் முடித்துவைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## தோழி விடுதிக்கு எதிரான வழக்கு மாணவனுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

**படிப்பில் கவனம் செலுத்த உயர்நீதிமன்றம் அறிவுரை**

சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் தோழி விடுதியை கட்ட எதிர்ப்பு தெரிவித்து அங்கு எம்.ஏ. படித்து வரும் நவீன் என்ற மாணவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் ‘‘இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் வகையில் தொடரப்பட்டுள்ளது. அதனால் தள்ளுபடி செய்கிறோம். மனுதாரருக்கு ரூ.10 ஆயிரம் வழக்கு செலவு (அபராதம்) விதிக்கிறோம்’’ என்று உத்தரவிட்டனர். மேலும் மனுதாரர் இதுபோல தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்வதை தவிர்த்து விட்டு, படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினர்.

**நன்றி: தினத்தந்தி 24.10.2025**

# உடன்படிக்கையும் அது முறிக்கப்படும் முறையும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி ஜெ. நிஷாபானு**
**நீதிபதி ஆர்.சக்திவேல்**
**நீ.ப.வ.வி. எண் 38/2022 மற்றும்**
**நீ.ப.ம. எண்கள் 8563, 2022**
**8.4.2025**
**2025 (4) CTC 516**

**அல்லையன்ஸ் புராஜக்ட்ஸ் (திட்டங்கள்) சார்பாற்றம்**
**அதன் கணி ரவீந்திரநாத் சிங்**
**2. அல்லையன்ஸ் ஆர்கிட் டெக் பார்க் தனியார் வரம்பிடப்பட்டது.**
**சார்பாற்று அதன் கணி ரவீந்திரநாத் சிங் ...மேல்முறையீட்டாளரின்**
**–எதிர்–**
**உமாமகேஷ்வரி ...எதிர்வழக்கீட்டாளர்**

**பி.எச். மனோஜ் பாண்டியன்,**
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

**என்.அழகி நாராயணன்**
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.ப.வமே பணிப்புரைகளுடன் வகை செய்யப்பட்டது.

**கோரிக்கை:** உரிமையியல் பல்வகை இரண்டாம் மேல்முறையீடு 2016 ரியல் எஸ்டேட் முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் சட்டத்தின் 58ஆம் பிரிவின்படி முன்னிடப் பட்டதுடன் உ.வி.தொ.ச. இன் 100ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகிறவாறு மேல்முறையீட்டு எண் 71/2021இல் அளிக்கப்பட்ட 28.1.2022 தேதியிடப்பட்ட ஆணையைத் தள்ளுபடி செய்யக் கோரப்படுகிறது. இது (T.N.R.E.A.T.) தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாணை யின் கோப்பில் உள்ளது மற்றும் C.C.P.எண் 263/2021-23.2.2021 தேதியிட்ட ஆணையை உறுதி செய்ய கோருவது. இது (T.N.R.E.A.T.) தமிழ்நாடு ரியல் எஸ்டேட் முறைப்படுத்துதல் அதிகாரியின் கோப்பில் உள்ளது. இதனை அனுமதி C.M.S. பிற உய்திகளை வழங்க கோரப்படுகிறது.

தீர்ப்பு 13.11.2024க்கு ஒதுக்கீடு செய்யப் பட்டு 8.4.2025 அன்று பிறப்பிக்கப்பட்டது.

## தீர்ப்பு

**நீதிபதி டி. நிஷாபானு**

1. இந்த உரிமையியல் பல்வகை இரண்டாம் மேல்முறையீடு 28.1.2022 தேதியிடப்பட்ட ஆணைக்கு எதிராக செய்யப்பட்டது. இது மேல் முறையீட்டு எண் 30/2021க்கு எதிரானது (TNREAT) தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் கோப்பில் உள்ளது. இதன் மூலம், இதில் 23.2.2021 தேதியிடப்பட்ட ஆணை C.C.P.எண் 263/ 2021இல் பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் முறைப்படுத்தும் அதிகார அமைப்பின் கோப்பில் உள்ளது. இதுவே உறுதி செய்யப் பட்டுள்ளது.

2. இந்த மேல்முறையீட்டில், மேல்முறை யீட்டாளர்கள்/மேம்பாட்டாளர்கள் பின்வரும் பொருட்டான சட்ட கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

“(அ) TNRERA-இன் விசாரணை செய்யும் அலுவலர் மற்றும் மேதகு தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் இந்த திட்ட தொகுப்புகள் (Project blocks) தொடர்பாக அதிகார வரம்பைச் செலுத்த முடியுமா அவை 1.5.2017க்கு முன்னர் முடிக்கப்பட்டவை.

(ஆ) “தோட்ட ஊற்றுகள்” திட்டம் தொடர்பாக. இது திட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்ட/பதிவு செய்யப்படத்தக்க திட்டமல்ல. RERAஇன்படி

மற்றும் இதன் விளைவாக, இந்தச் சட்ட நடவடிக்கைகள் எதற்கும் அது உட்படுத்தப்பட முடியாது. இவர்கள் முடிந்து விட்டதாக சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்கள் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பே விண்ணப்பித்தவர்கள் அல்லது, இந்த விதிகளில் பின்னர் முடித்து விட்டதற்கான சான்றிதழ் பெற்றவர்களா

(இ) எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட இந்த ஆணை இந்த மேல்முறையீட்டின் வீச்சுக்கு மேற்பட்டதா பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் மீது தரப்பினர்கள் கேட்கப்படாமலேயே, எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை பிறப்பித்தது வெளிதாகி விழலாகும் அவை இயற்கை நீதியின் நெறிமுறைகளுக்கு மீறுகையானது மற்றும் இதன் பகுதியாக அமையக் கூடிய இரு தரப்பினர்களின் வாதங்களையும் கேட்டறிதல் வேண்டும் என்னும் நெறிமுறை களுக்கும் மீறுகையாக உள்ளது?

(ஈ) இட ஒதுக்கீடு செய்யப்பட்டவருக்கு இந்தச் சட்டத்தின் பிரிவு 18இன்படி இழப்பீடு எதுவும் பெற உரிமையுள்ளதா? அதுவும் அவர்கள் விதி 19(2)இன் வகைமுறை விதிகளின்படி செயற் படும்போது

(உ) TNREATயில் விசாரணை அலுவலர், இந்த நீதிமன்றத் தீர்ப்பில் விளைவுகளை கருதுகை செய்ய தவறியுள்ளபோது, சுபாஷிணி துளசி ராணி –எதிர்– எஸ்ஜஆர் மற்றும் ஆர்.ஜி. கட்டுமானங்கள் தனியார் வரம்பிடப்பட்டது 2020 உச்.நீ.வ. வலைதளம், சென்னை2020, 2020 (4) ச.ப. 865 மற்றும் உச்சநீதிமன்ற ஆணை புதிய டெக் பிரமோட்டார் –எதிர்– உத்திரபிரதேச மாநிலம் மற்றும் பிறர் 2021 (18) உச்.நீ.வ. ஏஜ 2021 உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ.1044, சொல்லப்பட்ட அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவ தாக இது உள்ளது மற்றும் இதன் விளைவான தீர்ப்புகள் பிறப்பிக்கப்பட்டிருப்பது நீதிமன்றங் களில்.

3. மேல்முறையீட்டாளர்கள் மேம்பாட்டாளர்கள் மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் முறையீட்டாளர், எதிர்வழக்கீட்டாளர் ஒரு வீட்டுக் கடனைப் பெற்றுள்ளது. ஒரு தனி வீட்டை வாங்குவதற்காக மற்றம் ஒரு வீட்டை மேல்முறையீட்டாளர்களிடம் பதிவு செய்துள்ளார். அவர்கள் ஓர் விற்பனை உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டு ள்ளனர். அது 16.7.2012 தேதியிடப்பட்டது மற்றும் மூவரால் உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டுள்ளது. நிதி நிறுமத்துடன் சேர்த்து எதிர் வழக்கீட்டாளர் மொத்த தொகையாக ரூ.74,49,847 செலுத்தியுள்ளார். மேல்முறையீட்டாளர்களுக்கு பின்னர் நிறுமம் மேலுமான தொகையை அளிக்க மறுத்துள்ளது. கட்டுமானப் பணி நிற்கப்பட்டது. தொடர்ந்து நடைபெறாத காரணத்தினால் 22.1.2024 அன்று முதல் மேல்முறையீட்டாளர் உடன்படிக்கையை ரத்து செய்துள்ளார். செலுத்து தவறுதலைக் காரணமாக்கியுள்ளார் மற்றும் கூறியுள்ளதாவது தொகையை திருப்பியளிக்க காசோலை இணைக்கப்பட்டது தொகை திரும்பிப் பெற அதன் பின்னர், 3.5.2016 அன்று மேல் முறையீட்டாளர்கள் மற்றொரு கடிதத்தை அனுப்பி யுள்ளனர். தடை பற்றிய விடுப்பை தெரிவிக்கவும் மற்றும் 24 மாதங்களுக்குள் சொத்தை ஒப்படைக்க உறுதி கூறியுள்ளார். காலத் தவணையை 6 மாத காலம் நீட்டிக்கவும் கோரியுள்ளனர். எதிர் வழக்கீட்டாளர் தவணைகளை நிதி நிறுவகத்திற்கு திருப்பிச் செலுத்திக் கொண்டு வாடகை வீட்டில் தங்கியுள்ளார் மாத வாடகையாக ரூ.18,000 செலுத்தி இதில் மேல்முறையீட்டாளர்கள் விற்பனை உடன்படிக்கையைப் பதிவு செய்யத் தவறியுள்ளனர். மேல்முறையீட்டாளர்கள் விற்பனை உடன்படிக்கையை பதிவு செய்யத் தவறியும் கட்டிட உடைமையை உடன்படிக்கை வரையுரைகளின் படி ஒப்படைக்கத் தவறியதற்காகவும் எதிர் வழக்கீட்டாளர் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் முறைப் படுத்தும் அதிகார அமைப்பின் முன் (TNRERA) முறையீட்டை முன்னிட்டுள்ளனர். விரிவு C.C.P. எண் 263/2019 தொகையினை வட்டியுடன் இழப்பீட்டுத் தொகை மற்றும் செலவுத் தொகை யுடன் திருப்பி அளிக்க கோரியுள்ளார்.

4. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் முறைப்படுத்துதல் அதிகார அமைப்பு (TNRERA) எதிர்வழக்கீட்டாளர் /முறையீட்டாளர் சார்பாக அதன் ஆணை 23.2.2021 தேதியிடப்பட்டதில் மேல்முறை யீட்டாளர்கள்/மேம்பாட்டாளர்ளை தொகை ரூ.74,49,847யினை 10.05% வட்டியுடன் இழப்பீட்டுத் தொகையாக ரூ.5,00,000

ரூபாயுடன் அதாவது மனஉளைச்சலுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட வசதி குறைவுக்காகவும் மற்றும் சட்டச் செலவாக 20,000 ரூபாயையும் செலுத்த ஆணையிட்டுள்ளது.

5. சொல்லப்பட்ட ஆணையை எதிர்த்து பதிவு செய்யும் அதிகாரரி ரியல் எஸ்டேட் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் (TNRERA) மேல் முறையீட்டு எண் 71/2021இனை முன்னிட்டுள்ளனர்.

6. மேல்முறையீட்டு தீர்ப்பாயம், தரப்பினர் களின் வழக்கினை கருதுகை செய்த பின்னர், கூறியதாவது, வட்டியுடன் செலுத்தப்படாத தொகையைப் பெற்றதன்பேரில், மேல்முறை யீட்டாளர்கள் முடிவுறுத்தும் கூறு பற்றி செயற் படுத்த கருதி, 22.1.2014 தேதியிடப்பட்ட முடிவுறுத்து அறிக்கையை அனுப்புதல் கூடாது. மேலும் கூறியதாவது, மேல்முறையீட்டாளர்கள் மூன்று பேர் கொண்ட உடன்படிக்கையை மட்டுமே ஒட்டிச் செயற்படவில்லை. ஆனால் அவர்கள் ரூ.63,32,370 தொகையை எஞ்சிய தொகையை செலுத்தத் தவறியுள்ளனர். அது எதிர் வழக்கீட்டாளருக்கு 22.1.2014 தேதியிடப் பட்ட அறிக்கைபடி செலுத்தத்தக்கதாகும். மேல் முறையீட்டு தீர்ப்பாயம் மற்றும் கண்டறிந்த தாவது எதிர்வழக்கீட்டாளரின் பணத்திலிருந்து சட்ட விரோதமாக இவர்கள் பணம் பெற்றுள்ளனர் மற்றும் நிதியாளர்களிடமிருந்தும் மற்றும் இதற்கு மாறக எதிர்வழக்கீட்டாளர் கடன் தொகையை வட்டியுடன் நிதியாளருக்கு செலுத்த வேண்டி யுள்ளது. எனவே வட்டியளிப்பது 2017 தமிழ்நாடு ரியல் எஸ்டேட் முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் விதிகளின் விதி 18இன் படி அந்த தொகையைத் திரும்பச் செலுத்துதல் சட்டப்படி அனுமதிக்கத்தக்கது. அவ்வாறே தீர்ப்பாயம் விசாரணை அலுவலரின் ஆணையை உறுதி செய்துள்ளது.

7. சொல்லப்பட்ட தமிழ்நாடு மேல்முறையீட்டு தீர்ப்பாய விதிகளினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை யின்படி மேல்முறையீட்டாளர்கள் இந்த உரிமை யியல் பல்வகை இரண்டாம் மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளனர்.

8. மேல்முறையீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர் களுக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் மேலும் பணிந்தளிப்பதாவது மொத்த தொகை யினையும் விசாரணை அலுவலர் முன்பு முன்னிடுவது என்பது. அதாவது திருப்பிச் செலுத்துவது என்பது செல்லத்தக்கதாகாது மற்றும் சொல்லப்பட்ட வாரானதற்கு ஆதரவாக மேல்நிலைநீதிமன்றத் தீர்ப்பு ஒன்று ஆதாரமாக்கப் பட்டுள்ளது. நியூ டெக் ஊக்குவிப்பவர்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் தனியார் வரம்பிடப்பட்டது –எதிர்– உத்திரபிரதேச மாநிலம் மற்றும் பிறர் 2021 (18) உச்.நீ.வ. அவர் மேலும் பணிந்த ளித்ததாவது காலத்தாழ்வு) தவறுதல் நேர்வில் செலுத்தம் செய்வது/பத்து செய்தல்/வாங்கு பவரால் அது முடிவுறுத்தப்படுதலில் மொத்த கட்டுமான செலவுத் தொகையில் 15 சதவீதம் வாங்குபவருக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதாவது காலத்தாழ்வு செலுத்தம் செய்யத் தவறுதல்/ரத்து செய்தல்/முடிவுறுத்து கூறின் கூறப்பட்டவாறு கட்டுமான உடன்படிக்கைப்படி.

9. மேல்முறையீட்டாளர்கள்/மேம்பாட்டாளர் களுக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர், மேலும் பணிந்தளிப்பதாவது இந்த மேல் முறையீடு நடப்பில் உள்ளபோது, தரப்பினர்கள், ஒரு கூட்டு சமரச குறிப்பாணையினை ஏற்படுத்தி னார். அதாவது பூசல் செய்யப்படாத தொகையான ரூ.63,32,370 ரூபாய் தொடர்பாக. 11,17,477 ரூபாயினை 15 சதவீதம் வட்டியைக் கழித்த பின்னர், அதாவது 74,49,847 மொத்த விற்பனை மறுபயன் இது உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டதன் பேரிலானது. இந்த பூசலிடப் படாததொகையானரூ.63,32,370ரூ.57,05,623 தொகையானது. மேல்முறையீட்டாளர்களால் (TNREAT) வைப்பீடு செய்யப்பட்டது. எதிர் வழக்கீட்டாளருக்கு விடுவிக்கப்பட்டது. ரூ.6,26,747 மேல்முறையீட்டாளருக்கு செலுத்தப்பட்டது. மேற்சொல்லப்பட்ட தொகைகள் வட்டியின்றி அல்லது இழப்பீடாக செலுத்தப்பட்டவை. இப்போது ரூ.17,17,477 தொகை 15 சதவீதம் அதாவது விற்பனை மறுபயனின் இது இழப்பீடு களிலிருந்து கழிக்கப்பட்டது. அதாவது உடன் படிக்கை அளவு செய்யப்பட்டதன்பேரில், இது தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

10. வழக்கறிஞர் மேலும் வாதிடுவதாவது ரூ.63,32,370 தொகை செலுத்தப்பட்டது இணையான குறிப்பாணையின் வரையுரை களின்படி இதில் மேல்முறையீட்டாளரின் உரிமை முடிவடையவில்லை. அதாவது இதன் அடிப்படை அதிகார வரம்பினை எதிர்க்கும் உரிமை மேல் முறையீட்டாளர்கள் மொத்தமாகப் பணிந்த ளிப்பது. இந்த பொருட்பாடானது அதிகாரிகளிடம் மீண்டும் கருதுகை செய்யப்படுவதற்காக அனுப்பப்பட வேண்டும் என்பது. அதுவும் தேவைப்படும் தரப்பினர்களுடன் அதுவும் குறிப்பாக நிதியாளர் இந்த நடவடிக்கைகளில் சேர்க்கப்பட வேண்டியது வழக்கறிஞருக்கு இணங்க நிதியாளரின் உள்ளடக்கம் முக்கிய மானது. அதாவது இந்தப் பூசலைத் தீர்ப்பதற்கு நிதியாளரின் உரித்தங்கள் வட்டிகள் மற்றும் நிதி ஏற்பாடுகள் தொடர்பாக தரப்பினர்களுக்கிடையே இது கோரிக்கைகளையும் எதிர் கோரிக்கைகளை யும் பொருட்டாகப் பாதிக்கும் தரப்பினராக நிதியாளர் இல்லாதிருப்பது. காரணமாக அது நடைமுறை குறைபாட்டை ஏற்படுத்தும். இதனால் மறுபயன் தொடர்பாக, கையில் உள்ள பிரச்சினை யில் முழுமை நிலை அடைவதில் சிக்கல் ஏற்படும். அவர் மேலும் பணிந்தளித்தது, திருப்பி ஒரு போதிய அளவுத் தொகையான ரூ.63,32,370 உடன்படிக்கையின் வரையுரை களின்படி செலுத்தப்பட்டிருந்தபோதிலும், கேள்வி யில் உள்ள சொத்து, விற்கப்படாதுள்ளது மற்றும் மேல்முறையீட்டாளர்கள் தொடர்ந்து நிதி இழப்பை ஏற்க வேண்டியுள்ளது. இவர்கள் திருப்பிச் செலுத்த இணங்கியுள்ள காரணத்தால், இவர்களது தீர்மானிக்கப்படாத நிலை அதுவும் சொத்து தொடர்பாக. இதன் விற்பனையையும் அல்லது சொத்து மாற்றத்திற்கோ தடையாக உள்ளது. இதனால் மேல்முறையீட்டாளர்கள் பராமரிப்புச் செலவுகளை ஏற்க வேண்டியுள்ளது. இதனால் அவர்களது முதலீடுகளை மீளப் பெற முடியாத நிலை மேல்முறையீட்டாளர்களுக்கு இணங்க, முன்னிடப்பட்ட முறையீடு எதிர் வழக்கீட்டாளர்களால் முன்னிடப்பட்டது. அதாவது விசாரணை அலுவலர் முன்பு இது தெளிவான வழக்கு, அதாவது சட்ட நடைமுறை தவறாகப் பயன் படுத்தப்பட்டுள்ள வழக்கு எதிர்வழக்கீட்டாளர்கள், இந்த திட்டத்திலிருந்து மீளப் பெறுவதற்கான ஒரே காரணம், அவர்களது நிதிநிலை அவர்கள் செலுத்த முடியாத காரணம் இதற்கு எதிர் வழக்கீட்டாளர்களின் பங்கில் ஏற்பட்ட குறை பாட்டை காரணமாக்கியுள்ளனர். எனவே, வழக்கறிஞர் இரண்டாவது உரிமை வழக்கின் பல்வகை மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரியுள்ளார்.

11. மாறாக, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பதான பகுதி நிறைவேற்றப்பட்டதற் கான சான்றிதழ் என்னும் கருத்து, இந்தச் சட்டத்தின்படி ஏற்கப்பட்டதல்ல மற்றும் மேல் முறையீட்டாளர்கள் இதனை ஒரு எதிர்ப்பாக கொள்ள முடியாது. விசாரணை செய்யும் அதிகாரிகள் சட்டத்தின் பிரிவுகள் 71, 72இன்படி இதனை விசாரிக்க அதிகாரம் கொண்டவர்கள் அதாவது இழப்பீடு அளிக்கவும் அதன் பேரிலான வட்டி சட்டத்தின் 18ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள வாறு. எனவே தீர்வு 5,00,000 இழப்பீடாக மற்றும் செலவுத் தொகையாக ரூ.20,000 விசாரணை அலுவலர் விதித்திருப்பது அதிகாரி யின் வீச்சுக்குள்ளானதே அவ்வாறு சட்டத்தில் விதிக்கப்பட்டவாறான 11.8.2022 தேதியிடப்பட்ட இணக்கத் தீர்வு குறிப்பாணையின்படி மேல்முறை யீட்டாளர்கள் பூசல் செய்யாத தொகையாக ரூ.63,32,370இனை செலுத்தியுள்ளார் மற்றும் எதிர்வழக்கீட்டாளர் இதனைப் பெற்றுள்ளார்.

12. எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர் மற்றும் பணிந்தளிப்பதாவது எதிர்வழக்கீட்டாளர்கள் பூசலான தொகையான ரூ.11,17,477இனைப் பெற உரிமையுடைய வராவர். வட்டியுடன் இது ஏற்கனவே TNREAT யினால் அளிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் மேலும் வாதிடுவதாவது, மேல்முறையீட்டாளர்கள் வாதமாவது இவர்கள் ரூ.11,17,477இனை கழித்துக் கொள்ள உரிமையுடையவர்கள் என்று அது மொத்த விற்பனை மறுபயனில் 15 சதவீதம் ஆகும். இது அறுதியிடப்பட்ட இழப்பீடு அதாவது உடன்படிக்கை முடிவுறுத்தப்படுவதன்பேரில் செலுத்தப்பட வேண்டிய தொகை உடன்படிக்கை எதிர்வழக்கீட்டாளர்களின் விடுப்பின்பேரில் அறவு செய்யப்படவில்லை அல்லது எதிர்வழக் கீட்டாளரின் காலங்கடந்த காரணத்தால் அளவு

செய்யப்படவில்லை. இதில் நிறுவிக்கப்பட்ட பொருண்மையானது எதிர்வழக்கீட்டாளர் 80% மொத்த செலவுத் தொகையிலானதை ஜுலை 2013 அன்று செலுத்தியுள்ளார். இதில் அப்போது கடனாகவே அமைக்கப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டாளர்களின் வாதமாவது இவர்களது செலுத்தத்தில் மன்னிக்கப்பட முடியாது காலத்தாழ்வு உள்ளது. 24 மாதங் களுக்குள் உடையவை ஒப்படைக்க மேல்முறை யீட்டாளர்கள் தவறியுள்ளார். அதாவது உடன் படிக்கை தேதியிலிருந்து 24 மாதங்களுக்குள் மேல்முறையீட்டாளர்கள் 80% தொகையைப் பெற்றிருந்தும் அவர்கள் வாக்குப்படி செயற்படத் தவறியுள்ளனர். அதிக அளவிலான காலத்தாழ்வு, கட்டமைப்பை முடிப்பதில் ஏற்பட்டுள்ளது. ஜுலை 2017 அன்று தான் முடிவுறுத்த சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்கள் 22.1.2014 அன்றே பொதுவான ரத்து செய்யும் கடிதத்தினை அளித்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ள தாவது பதிவு செய்வதற்கான தொகை கழிக்கப்பட்ட பின்னர் ரத்து செய்யும் கட்டணம் கழிக்கப்பட்டு திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. மாறாக பதிவுத் தொகை திரும்பி செலுத்தப்படவில்லை மற்றும் அதுவே மேல்முறையீட்டாளரால் ஏற்கப் பட்டுள்ளது. எனவே இதில் தெளிவாக அறியப் படுவதாவது மேல்முறையீட்டாளர்களின் உட் கருத்தும் எண்ணமும் வெளிப்படையாகிறது. எனவே, மேல்முறையீட்டாளர்கள் ரத்து செய்வ தற்கான கட்டணமான 11, 17,477 ரூபாயினை கழித்துக் கொள்ள உரிமையுடையவர்கள் அல்ல என்பது மற்றும் இதனை அவர்கள் வட்டியுடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். எனவே, மேல் முறையீட்டை தள்ளுபடி செய்ய வழக்கறிஞர் கோரியுள்ளார்.

13. இரு தரப்பினர்களும் கேட்டறியப்பட்டனர் மற்றும் பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன

14. பதிவேட்டின்பேரில் கிடைக்கத்தக்க பொருட்பாடுகளைக் கூர்ந்தாய்வு செய்ததில் கண்டறியப்பட்டதாவது இந்த மேல்முறையீடு நடப்பில்உள்ளபோது 11.8.2022 தேதியிடப் பட்ட கூட்டு சமரச தீர்வு குறிப்பாணையை ஏற்படுத்தியுள்ளனர். இதன் வரையுரைகள் பின்வருமாறு.

“இணை சமரச தீர்புக் குறிப்பாணை: இதில் தாழ்மையுடன் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் பணிந்தளிக்கப்படுவதாவது பின்வருமாறு.

1. உ.ப.இ.மே. பற்றிய மேல்முறையீடு மேல் முறையீட்டாளர்களால் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தினரின் 28.1.2022 தேதியிடப்பட்ட ஆணைக்கெதிராக இடப்பட்டது. மே.எண் 71/2022 இது 23.2.2021 தேதியிடப் பட்ட ஆணையை எதிர்த்து முன்னிடப் பட்டது இது விசாரணை அலுவலரால் (TNRERA)வில் பிறப்பிக்கப்பட்டது. C.C.P. எண் 263/2021.

2. எதிர்வழக்கீட்டாளர் மேல்முறையீட்டாளர் களுக்கு மொத்த தொகையை ரூ.74,49,847 இனைச் செலுத்தியுள்ளார். எதிர்வழக்கீட்டாளர் களிடமிருந்து அவளது உரிமைகளுக்கு குந்தகம் இன்றி, பூசல் செய்யப்படாத தொகையாக ரூபாய் 63,32,370இனைப் பெற உடன்படிக்கை ஏற்பட்டது.

3. மேல்முறையீட்டாளர்கள் ரூ.57,05,623 தொகையினை TNREAT க்கு செலுத்தியுள்ளனர். இது 2016 சட்டத்தின் RERAஇன் பிரிவு 43(5)இன்படி வைப்பீடு செய்யப்பட்ட சட்டத்திற்கு இணங்கியவாறானது. மேல்முறையீட்டாளர்கள் மேற்சொல்லப்பட்ட வைப்பீட்டுத் தொகையை விடுவிக்க உடன்பட்டுள்ளனர். இதற்காக மறுப்பின்மை அளிக்க வகை செய்துள்ளனர். (ம.இ.சா.) எதிர்வழக்கீட்டாளருக்கு அளிக்க ரூ.57,05,623இனை மூலம் நடவடிக்கை எடுக்க கூறியுள்ளனர். இத்தொகை TNREATயில் வட்டியுடன் வைப்பீடு செய்யப்பட்டது.

4. எஞ்சிய பூசலிடப்படாத தொகையான ரூ.6,26,747 மேல்முறையீட்டாளர்களால் எதிர் வழக்கீட்டாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அது கேட்புக் காசோலை மூலம் 11.8.2022 தேதியிடப்பட்டு கே.சா.எண் 032309 கேட்டாக் மகேந்திரா வங்கி, அண்ணா சாலைக் கிளை எதிர் வழக்கீட்டாளர் சார்பாக அதாவது குறிப்பாணை கையொப்பமிடப்பட்ட தேதியன்று.

5. இந்த பூசல் செய்யப்படாத தொகை செலுத்தப்பட்டதன்பேரில், எதிர்வழக்கீட்டாளர், நி.ம.எண் 36/2021 விசாரணை அலுவலரால்

பிறப்பிக்கப்பட்டது. 12.5.2022 தேதியிட்ட ஆஜண எதிர்வழக்கீட்டாளரால் முன்னிடப்பட்டதன் பேரில் நிறைவேற்றுதல் மனுவை பற்றுகை ஆணை மூலமாக எந்த நடவடிக்கையும் எடுத்தல் ஆகாது.

6. எஞ்சியுள்ள பூசல் செய்யப்படாத தொகையான ரூ.11,17,477 வட்டியுடனும் இழப்பீடுடனும் TNREATயினால் தீர்வு செய்யப்பட்டவாறு இந்த நீதிமன்றத்தின் முன்பு பொருட்பாடு பற்றிய விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

7. இந்த குறிப்பாணை பதிவேட்டின்பேரில் எடுக்கப்பட்டு தக்க ஆணையினை நீதிமன்றம் பிறப்பிக்கலாம். அதாவது நீதியின் நலன்களுக்கு அது தக்கதெனக் கருதலாகிற ஆணைகள்''

15. 14.8.2024 அன்று இந்த பொருட்பாடு கேட்கப்படுவதற்காக வந்தபோது இந்த நீதிமன்றம் பின்வரும் ஆணையைப் பிறப்பித்தது. ''இன்று இந்த பொருட்பாடு கேட்கப்படுவதற்காக எடுத்த போது, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் கூறியதாவது 11.8.2022 தேதியிட்ட இணை சமரச குறிப்பாணையின்படி இது மேல்முறையீட்டாளர் களுக்கும் எதிர்வழக்கீட்டாளர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாடு அதாவது ரூ.57,05,623 சென்னை தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையை விடுவிக்க எதிர்வழக்கீட்டாளருக்கு மறுப்பில்லா சான்றிதழ் அளிப்பது பற்றியது. அவ்வாறே, எதிர் வழக்கீட்டாளர் ரூ.57,05,623 அதனுடன் சேர்ந்துள்ள வட்டியுடன் அதனை பெற உரிமையுடையவர் ஆவார் என்பது.

2. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் கூறியதாவது இவர்கள் ஏற்கனவே மறுப்பில்லா சான்றிதழ் அளித்துள்ளனர். ஆனால் TNREAT இந்தத் தொகையை விடுவிக்கவில்லை என்பது அதாவது இந்த பொருட்பாடு தொடர்பான வசூலிக்கவில்லை என்பது அதாவது இந்த பொருட்பாடு தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதை காரணம் காட்டியுள்ளனர்.

3. இதில் கண்டறியப்பட்டதாவது 11.8.2022 தேதியிடப்பட்ட இணை சமரச குறிப்பாணை மூலமாக தரப்பினர்களிடையே ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்கள் வைப்பீட்டுத் தொகையை எதிர்வழக்கீட்டாளர்களுக்கு விடுவிக்க வகை செய்யும் மறுப்பில்லை சான்றிதழை அளித்துள்ளனர். அதாவது ரூ.57,05,623 விடுவிப்பதற்கு. இந்த குறிப்பிட்ட வழக்கில், எதிர்வழக்கீட்டாளர் இந்த குறிப்பாணைப்படி அவள் அந்தத் தொகைக்கு உரிமையுடையவள் ஆவார்.

4. மேற்சொல்லப்பட்ட கருத்தில் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் சென்னை எதிர்வழக்கீட்டாளரை ரூ.57,05,623 தொகையை மீளப்பெற அனுமதித்துள்ளது. அதற்காக சேர்ந்துள்ள வட்டியுடன் அதற்கான உரிய விண்ணப்பத்தினை தீர்ப்பாயத்திற்கு முன்பு முன்னிடுதல் வேண்டும்.

5. 28.8.2024க்கு பொருட்பாடானது அறுதிக் கேட்புக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

16. மேற்சொல்லப்பட்டவாறு, மேல்முறையீடு நடப்பில் உள்ளதால், தரப்பினர்கள் இணை சமரச குறிப்பாணையை ஏற்படுத்தியுள்ளார். இதன் மூலம் மேல்முறையீட்டாளர்கள், பூசலில் இல்லாத ரூபாய் 63,32,370இனை செலுத்த உடன்பட்டுள்ளனர். அதாவது மொத்தத் தொகையான ரூ.74,49,847க்கு மாற்றாக இதில் ரூ.11,17,477, 15 சதவீதம் வட்டித் தொகை கழிக்கப்பட்டுள்ளது. இது இழப்பீட்டிற்கானது அதாவது உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதற்கான இழப்பீடு இதில் கருதுகை செய்யப்பட வேண்டிய கேள்வி, எஞ்சிய தொகையான ரூ.11,17,477 மேல்முறையீட்டாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டுமா, இல்லையா என்பது.

17. மேற்சொல்லப்பட்ட கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்னர், இந்த உடன்படிக்கை அமைக்கப்பட்ட கூறில் பொருட்டான பகுதியினை பார்ப்போம். அதாவது செலுத்தத் தவறுதல் தொடர்பானவற்றை

''காலத்தாழ்வு/செலுத்தத் தவறுதல்/ரத்து/முடிவுறுத்தல்: இரண்டாம் தரப்பினரால், காலந்தாழ்வு / செலுத்தத் தவறுதல் ஏற்படும் நேர்வில் அதாவது கட்டுமானப் பணிக்கான எஞ்சிய தொகை தொடர்பாக பட்டியலில் உள்ள செலுத்தம்

தொடர்பாக, இதன் மேம்பாட்டாளர் இந்த உடன் படிக்கையினை முடிவுறுத்த உரிமையுடையவர் ஆவார். அதாவது இரண்டாம் தரப்பினருக்கு அறிவிப்பினைச் சார்வு செய்து செலுத்தப்படாத தொகையை பதினைந்து நாட்களின் செலுத்த அதாவது அறிவுப் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்துமாறு மற்றும் இதனைச் செலுத்த இரண்டாம் தரப்பினர் தவறுவாரானால், அதாவது இந்த அறிவிப்பைப் பெற்றதன் பேரில், உடன்படிக்கை ரத்தாகி விடும். அதாவது மேம்பாட்டாளரின் உளத்தேர்வின்படி.

மேற்சொல்லப்பட்டவாறான நேர்வில் அல்லது இரண்டாம் தரப்பினரின்படி மேம்பாட்டாளர் இரண்டாம் தரப்பினரிடமிருந்து மொத்த கட்டுமான செலவுத் தொகையில் 15 சதவீதம் இழப்பீடாகப் பெற உரிமையுடையவர் ஆவார். இது இரண்டாம் தரப்பினரால் செய்யப்படும் செலுத்தங்களுக்கு எதிராக சரி செய்யப்படும். அதாவது முடிவுறுத்தப்படும் வரை மற்றும் எஞ்சிய தொகை செலுத்தப்படும். அதாவது ஏதேனுயிருப்பின் அது உடன்படிக்கை அளவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்படும். இந்த நேர்வில் விற்பனை உடன்படிக்கை தன்னிச்சையாகவே முடிவுறுத்தப் படும். அதுவும் 15 சதவீதம் விற்பனையை கூறப் பட்டவாறு பற்றுகை செய்யப்பட்ட பின்னர் அதாவது இணைப்பு (இ)யின்படி 15 சதவீதத் தொகை.

இந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்படுவதன் பேரில், இரண்டாம் தரப்பினர், எந்த கோரிக்கையையும் இணைப்பு உடன்படிக்கை (ஆ) இணைப்புச் சொத்து மற்றும் மேம்பாட்டாளர் கள் இதனை வகை செய்ய உரிமையுடையவர் இவர்கள் அவர்கள் நலப்பயன் பெறும் வகையில் இரண்டாம் தரப்பினரின் சுட்டுகையின்றி அதனை வகை செய்வர்.

எனினும், இரண்டாம் தரப்பு எதிர்பார்த்த காலத்திற்குள் நிலுவைத் தொகையைச் செலுத்து மானால், அதாவது முடிவுறுத்து பற்றிய அறிக்கை யின் தேதிக்கு மன்னர், இந்த உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமை காலக் கழிவாகும். அத்தகைய தவறுதலுக்காக மட்டுமே மற்றும் இந்த உடன்படிக்கை செய்யத்தக்கது.

எனினும், மேம்பாட்டாளர் அவரது உளத் தேர்வின்படி செலுத்தப்படாத தொகையை பெறுவ தற்கு உடன்படலாம். அதாவது கொடுபட உள்ள தேதியிலிருந்து அதாவது கோரிக்கை தேதியி லிருந்து மொத்த தொகை செலுத்தப்படும் வரை யில் 24 சதவீதம் 1 ஆண்டுக்கு என்ற படிக் கணக்கிட்டு அளிக்கப்படும்போது.

18. மேற்சொல்லப்பட்ட காலந்தாழ்வு/ செலுத்தத் தவறுதல்/ரத்து/முடிவுறுத்துதல் கூறின்படி ஐந்து பகுதிகள் அளிக்கப்பட்டன. முதல் பகுதியில் கூறப்படுவதாவது மேல்முறை யீட்டாளர்களிடமிருந்தான அறிக்கைக்குப் பின்னர், செலுத்தப்பாடாதுள்ள தொகையினைச் செலுத்த எதிர்வழக்கீட்டாளர் தவறுவாரானால், மேல்முறை யீட்டாளர்கள், அந்த உடன்படிக்கையினை அவர்களது உளத்தேர்வின்படி முடிவுறுத்தும் உரிமை பெற்றுள்ளனர். இதன் இரண்டாம் பகுதிப் படி, மேல்முறையீட்டாளர்கள் எதிர்வழக்கீட்டாளர் களிடமிருந்து மொத்த கட்டுமானச் செலவில் 15 சதவீதத்தினைப் பெற உரிமையுடையவர்கள் அதாவது உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் நேர்வில் மூன்றாம் கூறு கூறுவதாவது, முடிவுறுத்தப்படுவதன்பேரில், மேல்முறையீட்டாளர்கள், இந்தச் சொத்தினை வகை செய்ய உரிமையு டையவர்கள் ஆவர் மற்றும் எதிர்வழக்கீட்டாளர்கள் முடிவுறுத்தப்படுவ தன்பேரில், அந்தச் சொத்தின் மீது எந்த உரிமையும் கொண்டிருக்க மாட்டார்கள். நான்காவது கூறு கூறுவதாவது, எதிர்வழக்கீட்டாளர்கள், முடிவு றுத்துவது, காலாவதியாகும். ஐந்தாவது கூறு கூறுவதாகது மேல்முறையீட்டாளர்களின் உளத் தேர்வு பற்றியதாகும். செலுத்தப்படாத தொகையினை பெறுவதற்கானது அதுவும் ஆண்டுக்கு 24 சதவீதம் வட்டியுடன்.

19. பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்வதில், காணப்படுவதாவது முதல் செலுத்த கோரிக்கை மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்டது ரூ.52,59,859 விடுவிப்பதற்காக, எதிர்வழக் கீட்டாளர், ரூ.25,00,000 மட்டுமே செலுத்தி யுள்ளார். எனினும், நினைவூட்டுகள் அனுப்பப் பட்ட பின்னரும், எஞ்சிய தொகை செலுத்தப்பட

வில்லை. மேல்முறையீட்டாளர்கள் உடன்படிக்கையை முடிவுறுத்தும், விருப்பம் இல்லை. இந்த சூழ்நிலையில், இதில் தொடர்புற்ற தாவது, மேற்கண்டதன் சுருக்கம் நடவடிக்கை விவரங்கள் தரப்பினர்களுக்கிடையே என்பது பற்றி எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையில் அளிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 37இன்படி மேல்முறையீட்டாளரின் தட்டச்சுப் பக்கங்களின்படி முதல் செலுத்தத்திற் கான கோரிக்கை (பாம்பிளாக்) பனை வளாகத்தில் அஸ்திவாரம் முடிக்கப்பட்டபோது செய்யப்பட்டது. உங்களை ரூ.52,59, 839 தொகையினை வசூலித்தளிக்க கேட்டுக் கொள்ளப் படுகிறது என்பது வீட்டை வாங்குபவர் 3.12.2012இன்படி ரூ.25,00,000 மட்டுமே செலுத்தியுள்ளார். 25.1.2013 அன்று மேம்பாட்டாளரால் நினைவூட்டு செலுத்தம் கொடுபட உள்ளதாக அனுப்பப்பட்டது. 10.5.2013 அன்று அடுத்த செலுத்த கோரிக்கை மூன்றாம் தள வேலை முடிவுற்றது மற்றும் ரூ.37,96,965இனை வசூலிக்க கோரப்பட்டது. மற்றுமொரு செலுத்தத்திற்கான கோரிக்கை 29.6.2013 அன்று ரூ.25,00,000 விடுவிக்க கோரப்பட்டது.அதாவது மூன்றாம் தளம் முடிவுறுத்தப் பட்டதற்காக 14.7.2013 மற்றுமொரு கோரிக்கைக் கடிதம் 6ஆம் களப் பணி முடிவுற்ற தாக 17,40,344 ரூபாய் கோரப்பட்டது. 6.12.2013 அன்று செலுத்த நினைவூட்டு ரூ.27,21,105 ரூபாய்க்கு அனுப்பப்பட்டது. மேலே சொல்லப்பட்ட செலுத்தம் கோரிக்கை அறிக்கை மட்டுமே. மேல்முறையீட்டாளர்/ மேம்பாட்டாளரால் முன்னிடப்பட்டுள்ளது. ஆனால், முடிவுறுத்த அறிக்கை பக்க எண் 63இல் தட்டச்சுப் பக்கத்தில் உள்ளதில் மேல்முறையீட்டாளரால் கூறப்பட்டதாவது கோரிக்கை அறிக்கை 5 தேதிகளில் அனுப்பப்பட்டதாக மேற்சொல்லப்பட்ட தேதிகளில் என்பது தொடர்பாக கோரிக்கை அறிக்கை 5 தேதிகளில் அனுப்பப்பட்டதாக மேற்சொல்லப்பட்ட தேதிகளில் என்பது தொடர் பாக கோரிக்கை அறிக்கை மேல்முறையீட்டாள ரால் முன்னிடப்பட்டது. மேல்முறையீட்டாளர்/ மேம்பாட்டாளர் தவறுதல் கூறில் குறிப்பிடப் பட்டுள்ள ஏதேனும் ஒரு முறையைத் தெரிவு செய்யலாம். அதாவது கட்டுமான உடன்படிக்கை தொடர்பாக முதல் கேட்பு அறிக்கையிலேயே மேம்பாட்டாளர் ரூ.52,59,889இனை அந்தத் தேதியில் கேட்டுள்ளார். வீட்டை வாங்குபவர் இதுவரை ரூ.25,00,000 மட்டுமே செலுத்தி யுள்ளார்.அத்தகைய சூழ்நிலைகளில் மேம்பாட்டாளர் இந்த முடிவுறுத்துக் கூறினை செயற்படுத்தலாம். ஆனால், இதனை அவர் செய்யவில்லை. மேம்பாட்டாளர் இந்தக் கூறினை தெரிவு செய்துள்ளார் அதாவது உளத்தேர்வின் படியான கூறு அதாவது செலுத்தப்படாத தொகையைப் பெறுதல் வட்டியுடன் ஆண்டுக்கு 24 சதவீதம் வட்டியுடன்''.

20. மேற்சொல்லப்பட்ட பொருண்மைகளின் பின்புலத்தில் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஈரியோ கிரேன் ரியால்டெக் தனியார் வரம்பிடப் பட்டது. –எதிர்– அபிஷேக் கண்ணா 2021 (1) MWN (உரிமையியல்) 277 (உச்.நீ.) 2021 (3) உச்.நீ.வ. 241 "தேர்ந்து கொளல் கோட்பாடு தெளிவாக எடுத்துக் கூறுவதாவது ஒரே உய்திக்கு இரண்டு தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக உள்ள போது, இரண்டு தீர்வுகள் கிடைக்கத்தக்க தரப்பினர் இதில ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும். ஆனால் இதில் இரண்டு தீர்வுகளின் வீச்சும் எல்லையும் வழக்குகளில் அடிப்படையிலேயே மாறுபடுகிறவிடத்து இந்தக் கோட்பாடு பொருந்தாது''

21.தேர்ந்து கொளல் கோட்பாட்டினை ஆதார மாகக் கொண்டு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், கூறியதாவது தவறுகைக் கூறின் ஐந்தாவது கூறினை தெரிவு செய்துள்ள மேல்முறை யீட்டாளர்கள், முடிவுறுத்து கூறினையும் பயன் படுத்தி முடிவுறுத்து அறிக்கையினை அனுப்ப முடியாது. அதாவது 22.1.2014 தேதியிடப்பட்ட முடிவுறுத்து அறிவிக்கையை எனவே சொல்லப் பட்ட அறிக்கையே மேல்நிலைத் தீர்ப்பிற்கு எதிரானது.

22. இதில் மேல்முறையீட்டாளர்கள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு

போதிலும் நியூடெக் பிரமோட்டார்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் தனியார் வரம்பி. –எதிர்– உத்திரபிரதேச மாநிலம் மற்றும் பிறர், 2021 (18) உச்.நீ.வ. 1 என்னும் வழக்கின் தீர்ப்பில், விசாரணை அலுவலர் முன்பு மொத்த தொகை யினைத் திருப்பிச் செலுத்துதல் என்பதே செல்லத் தக்கதாகாது; தரப்பினர்கள் உடன்பாட்டின் வரையுறைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் இது அவர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது. மேலே கூறப்பட்டவாறு மேல்முறையீட்டாளர்கள் ஐந்தாம் கூறினைத் தெரிவு செய்து இவர்களது விருப்பத்தை அதாவது செலுத்தப்படாத தொகையை வட்டி யுடன் பெறுவதாக கூறியுள்ளனர். இவர்கள் முடிவுறுத்து கூறினை செயற்படுத்த உரிமை யற்றவர். அதாவது உடன்படிக்கையினை முடிவுறுத்தவும் மற்றும் விற்பனை மறுபயனின் 15 சதவீதத்தினை முடிவுறுத்ததின்பேரில் கழித்துக் கொள்ளவும். அத்தகைய முடிவுறுத்தயே எங்களது கருத்துப்படி உடன்படிக்கைக்க முரணானது அதாவது தரப்பினர்களிடையே யான உடன்படிக்கை மற்றும் இது தேர்ந்து கொளல் கோட்பாட்டிற்கும் எதிரானது இது மேலே குறிப்பிட்ட தீர்ப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாங்கள் கூறுவது எதிர்வழக்கீட்டாளர் ரூ.11,17,477இனை திரும்பப் பெற உரிமை யுடையவர் இது மொத்த செலுத்தப்பட்ட தொகை யின் 15 சதவீத வட்டியுடனானது அதாவது இழப்பீடு தொடர்பானது. அதாவது இது உடன்படிக்கை முடிவுறுத்தப்படும்போது செலுத்தப் பட வேண்டியது. மேல்முறையீட்டாளர்கள் மேற் சொல்லப்பட தொகையினை எதிர்வழக்கீட்டாளருக்கு 11,17,477 ரூபாயினைச் செலுத்த பணிக்கப் பட்டுள்ளனர். கேட்புக் காசோலை மூலமாக அதாவது இந்தத் தீர்ப்பின்படி பெறப்பட்ட நாளிலிருந்து 8 வாரங்களுக்கும் செலுத்துமாறு பணிக்கப்படுகிறது.

23. மேற்சொல்லப்பட்ட பணிப்புரையுடன் உரிமையியல் பல்வகை இரண்டாம் மேல் முறையீடு வகை செய்யப்படுகிறது. செலவுத் தொகையின்றி பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## காலணி வீசிய விவகாரம், வழக்கறிஞர் மீது வழக்குப் பதிவு செய்ய ஒப்புதல்

ராகேஷ் கிஷோர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி ஒப்புதல் அளித்துள்ளார். உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு 6.10.2025 அன்று வழக்கம்போல் கூடியது. வழக்குகளின் விவரங்களை வழக்கறிஞர்கள் குறிப்பிட்டு வந்தனர். அவற்றை நீதிபதிகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் என்பவர், நீதிபதிகள் அமர்ந்துள்ள மேடையை நெருங்கி தனது காலணியை கழற்றி, தலைமை நீதிபதியை நோக்கி வீச முயன்றார். இதனை கவனித்த காவலாளிகள், உடனடியாக அவரை தடுத்து நிறுத்தி நீதிமன்றத்திலிருந்து வெளியேற்றினர். அப்போது அந்த வழக்கறிஞர், சனாதன தர்மம் இழிவுபடுத்தப் பட்டால் அதனை ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம் என்று கூச்சலிட்டபடி வெளியேறினார். இதனை தொடர்ந்து ராகேஷ் கிஷோரின் வழக்கறிஞர் உரிமம் தற்காலிக அடிப்படையில் ரத்து செய்யப் படுகிறது என பார் கவுன்சில் அறிவித்தது.

இந்த சம்பவம் குறித்து ராகேஷ் அளித்த பேட்டியில், கடந்த செப்டம்பர் 16–ஆம் தேதி தலைமை நீதிபதியின் அமர்வில் கஜுராஹோவின் உள்ள ஜவாரி கோவிலில் உள்ள விஷ்ணுவின் சிலையை மீட்டெடுக்க கோரி பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது நீதிபதி கவாய், சிலையை மீட்டெடுக்க கடவுளிடம் சென்று பிரார்த்தனை செய்யுங்கள் என்று கேலி செய்து மனுவை தள்ளுபடி செய்தார். உச்ச நீதிமன்றத்தில் இந்த உத்தரவு என்னை காயப்படுத்து கிறது. நீங்கள் நிவாரணம் வழங்க விரும்பவில்லை என்றால், குறைந்தபட்சம் கேலி செய்யாதீர்கள்.

அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது அநீதி. இருப்பினும், நான் வன்முறையை எதிர்க்கிறேன். ஆனால், அது அவரது செயலுக்கான எனது எதிர் வினை நான் அதற்காக பயப்படவில்லை. எனக்கு எந்த வருத்தமும் இல்லை. நானாக எதுவும் செய்யவில்லை. கடவுள் என்னை அதனை செய்ய வைத்தார். கடவுள் சொல்லித்தான் செய்தேன். இதற்காக மன்னிப்பு கேட்க போவதில்லை என்றார். இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்தில் இன்று நீதிபதி சூர்ய காந்த் தலைமை யிலான அமர்வில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, தலைமை நீதிபதி காலணி வீசிய விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டும் என பார் கவுன்சில் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான விகாஸ் சிங் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு பதிலளித்த சாலிசிட்டர் ஜெனரல் துஷார் மெஹதா, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீது காலணி வீசிய வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி ஒப்புதல் அளித்துள்ளார் என்று தெரிவித்தார். இதன்படி விரைவில் ராகேஷ் கிஷோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நன்றி: தினத்தந்தி 16.10.2025**

# தலையிடுவதற்கான அதிகார வரம்பு இல்லா நிலையில் இசைவுத் தீர்வு வழக்கில் இந்நீதிமன்றம் தலையிட்டது தவறு

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திரு.அப்துல் குத்தூஸ்**
**அ.ம.எண் 414/2024**
**இ.தீ.மனு எண் 286/2024**
**தீர்ப்பு ஒத்தி வைப்பு: 04-06-2025**
**தீர்ப்பு பகிரப்பட்டது: 09-06-2025**
**(2025(4) CTC 724)**

**திகள். டிஎஸ்ஆர் பிலிம்ஸ் பி லிட், சென்னை ...மனுதாரர்**
**-எதிர்-**
**திகள். நியூ பிரைட் மல்டிபிளக்ஸ், மகாராஷ்டிரா ...எதிர்மனுதாரர்**

**மனுதாரருக்காக – திரு.தனராம் ராமச்சந்திரன், வழக்கறிஞர்**
திருவாளர்கள் டி.ஆர்.லா.சேம்பர்ஸ் நிறுவனத்திலிருந்து.

எதிர்மனுதாரருக்காக – திருமதி எஸ்.பி.ஆர்த்தி – திரு. எம்.எஸ்.நிரஞ்சன், வழக்கறிஞர்கள்

**பொது தீர்ப்பு**

1) அசல் மனு எண் 414/2024 ஆனது, மத்தியஸ்தம் (இசைவுத் தீர்வு) இறுதி முடிவுக்கு வரும்வரை, 23.08.2020 தேதியிட்ட ஒப்பந்தத்தின் படி, எதிர்மனுதாரர் எந்தவொரு டிஜிட்டல் உள்ளடக்கத்தையும் திரையிடுவதைத் தடுக்கக் கோரி, இடைக்காலத் தடை உத்தரவு பெறுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இசைவுத் தீர்வு மனு எண் 286/2024 ஆனது. இந்த நீதிமன்றத்தால் ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.தீ.அ.ம.(வணிக பிரிவு) எண் 537/2024 ஆனது. இந்த நீதிமன்றத்தால் ஒரு மத்தியஸ்தரை நியமிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. த. தனராம் இராமச்சந்திரன் அவர்களையும்; மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் திருமதி. எஸ்.பி. ஆர்த்தி, வழக்கறிஞருக்காக ஆஜரான மதிப்புக்குரிய வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.நிரஞ்சன் அவர்களையும் கேட்டறிந்தோம்.

3. இந்த மனுக்களை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதா என வினவி, எதிர்மனுதாரர் தரப்பில் ஒரு ஆரம்பப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. பின்வரும் காரணங்களுக்காக இந்த மனுக்களைத் தீர்மானிக்கும் பிராந்திய அதிகார வரம்பு இந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது:

(அ) இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம், தரப்பினர்களிடையே உள்ள தாவாவின் பொருளாக உள்ளது. அந்த ஒப்பந்தம் மும்பையில் மட்டுமே போடப்பட்டது. மேலும், ஒப்பந்தம் எழுதப்பட்ட முத்திரைத் தாள் கூட மும்பையில் மட்டுமே வாங்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்குள் எந்த ஒரு காரண காரியத்தின் பகுதியையும் கொண்டிருக்கவில்லை. மேலும், சென்னை அல்லது தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ள எந்தவொரு இடத்திலும் இரு தரப்பினரும் தங்கள் கடமைகளில் எந்தப் பகுதியையும் நிறைவேற்றத் தேவையில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவிக்கிறார்.

(ஆ) எதிர்மனுதாரர் மகாராஷ்டிராவில் உள்ள சங்லி என்ற இடத்தில் மட்டுமே அலுவலகம் கொண்டிருப்பதால், மத்தியஸ்தம் மற்றும் இணக்க சட்டம், 1996 (சுருக்கமாக 'சட்டம்')

இன் பிரிவு 9 மற்றும் 11இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் பம்பாய் உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ) மத்தியஸ்த நிபந்தனையின் முதல் பகுதியில் மும்பை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிந்தைய பகுதியில், தட்டச்சுப் பிழையின் காரணமாக கவனக் குறைவாக சென்னை எனத் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, அதிகார வரம்பு குறித்து குழப்பம் இருக்கும்போதெல்லாம், ஒப்பந்தத்தை வரைந்த கட்சிக்கு எதிராகவே நீதிமன்றம் அந்த நிபந்தனையை விளக்க வேண்டும் என்றும் எதிர் மனுதாரர் தெரிவித்தார். ஒப்பந்தம் மனுதாரரால் தயாரிக்கப்பட்டதால், சட்டம் பிரிவு 9 மற்றும் 11 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்களை விசாரிக்கும் பிராந்திய அதிகார வரம்பு இந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்று முடிவு செய்து, இந்த மத்தியஸ்த நிபந்தனையை நீதிமன்றம் விளக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் வேண்டுகை செய்தார்.

4. மறுபுறம், மனுதாரர் வாதிடும்போது, சட்டம் பிரிவு 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்ததாலும், மேலும் இந்த நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி வழக்கறிஞர் ஆணையர் எதிர்மனுதாரரின் வளாகத்திலிருந்து சரக்கு விவரப்பட்டியலை எடுத்ததாலும், சட்டத்தின் பிரிவு 42-ஐப் பயன்படுத்துவதன் மூலம், இந்த நீதிமன்றத்திற்கு மட்டுமே இந்த மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உள்ளது. ஏனெனில், சட்டப் பிரிவு 42-ன் கீழ், சட்டத்தின் பகுதி-ஐ-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் பிந்தைய மனுக்கள் அனைத்தும், பிரிவு 9-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது ஏற்கனவே அதிகார வரம்பைப் பயன்படுத்திய இந்த நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்பட முடியும் என்றார்.

5. கட்சிகளுக்கிடையே உள்ள தாவாவின் பொருளாக இருக்கும் ஒப்பந்தத்தில் உள்ள மத்தியஸ்த நிபந்தனையை நம்பி, அதன் பிந்தைய பகுதியில் சென்னை நீதிமன்றங் களுக்கு அதிகாரம் உள்ளது என்று வெளிப்படுத்து வதைக் காட்டி, இந்த நீதிமன்றத்திற்கு மட்டுமே இந்த மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உள்ளது என்று மனுதாரர் கோருகிறார். மத்தியஸ்தத்தின் ‘இருக்கை’ மற்றும் ‘விசாரிக்கும் இடம்’ ஆகியவற்றை ஒன்றோடொன்று மாற்றிப் பயன்படுத்த முடியாது என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மத்தியஸ்தத்தின் இருக்கை குறித்த கட்சிகளின் நோக்கத்தை தீர்மானிக்க, ‘மத்தியஸ்தம் நடைபெறும் இடம்’ என்ற வெறும் வெளிப்பாடு மட்டுமே அடிப்படை யாக இருக்க முடியாது என்பதும் நிறுவப்பட்டு உள்ளது என்று மனுதாரர் கூறுகிறார். மத்தியஸ்தத்தின் இருக்கை குறித்த தரப்பினர் களின் நோக்கம் ஒப்பந்தத்தில் உள்ள மற்ற நிபந்தனைகள் மற்றும் தரப்பினர்களின் நடத்தை ஆகியவற்றிலிருந்து தீர்மானிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையேயான மின்னஞ்சல் குறிப்பு, ஒப்பந்தத்திற்கு முந்தையது என்றும், எனவே, இந்த நீதிமன்றத்திற்கு இந்த மனுக்களை விசாரிக்கும் பிராந்திய அதிகார வரம்பு உள்ளதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு அது எந்த தொடர்பும் அற்றது என்றும் மனுதாரர் கூறுகிறார். ஒருமுறை மத்தியஸ்த ஒப்பந்தம் அல்லது மத்தியஸ்த நிபந்தனையைக் கொண்ட ஒரு ஒப்பந்தம் செல்லுபடியாகும் விதத்தில் நிறைவேற்றப் பட்டால், ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மட்டுமே அமல்படுத்தப்பட முடியும் என்று மனுதாரர் கூறுகிறார். எனவே, மனுதாரருக்கும் எதிர்மனு தாரருக்கும் இடையேயான தாவாவின் பொருளாக இருக்கும் ஒப்பந்தத்தின் நிபந்தனை 15-ன்படி, சென்னை நீதிமன்றங்களுக்கு மட்டுமே தனி மற்றும் பிரத்யேக அதிகார வரம்பு வழங்கப் பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

7. இந்த மனுக்களை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு

இல்லை என்று இந்த நீதிமன்றம் கண்டறிந்தால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் செய்த அந்தந்த கோரிக்கைகளின் நியாயப்பாட்டிற்குள் இந்த நீதிமன்றம் செல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு உள்ளது என்று இந்த நீதிமன்றம் கண்டறிந்தால் மட்டுமே, தரப்பினர்களுக்கிடையே உள்ள தாவாவின் பொருளாக இருக்கும் ஒப்பந்தத்திலிருந்து எழும் அந்தந்த கட்சிகளால் செய்யப்பட்ட அந்தந்த கோரிக்கைகளின் தகுதிகள் குறித்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டிய அவசியம் எழுகிறது. எனவே, முதலில், இந்த மனுக்களுக்கு தீர்ப்பளிக்க இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு உள்ளதா இல்லையா என்பதை இந்த நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும்.

8. பின்வருபவை சர்ச்சைக்கு இடமில்லாத வகையிலான இவ்வழக்கின் பொருண்மைகள் ஆகும்:

(அ) தரப்பினர்களுக்கிடையேயான தாவாவின் பொருளாக இருக்கும் 23.08.2020 தேதியிட்ட ஒப்பந்தம், இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) 23.08.2020 தேதியிட்ட ஒப்பந்தம், எதிர் மனுதாரர் மகாராஷ்டிராவில் உள்ள சங்லியில் மட்டுமே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதைக் காட்டுகிறது. மனுதாரரைப் பொறுத்தவரை, மனுதாரரின் நிர்வாக இயக்குனர் டான்ஸ்ரீ ராமசாமி ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டிய இடம் காலியாக விடப்பட்டுள்ளது.

(இ) ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்ட ரூ.100/-க்கான நீதித்துறை அல்லாத முத்திரைத் தாள் 22.07.2020 அன்று மும்பையில் உள்ள ஒரு முத்திரைத் தாள் விற்பனையாளரிடமிருந்து மட்டுமே வாங்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்த மனுக்களுக்கு ஆதரவாக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது ஆவணமாகிய 21.08.2022 தேதியிட்ட பௌதிகச் சரிபார்ப்பு அறிக்கையில், அதன் இருப்பிடம் சங்லி எனக் காட்டுகிறது. சென்னை அல்லது தமிழ்நாட்டில் உள்ள வேறு எந்த இடமும் அதில் குறிப்பிடப்படவில்லை.

(உ) முதல் சட்ட அறிவிப்பை எதிர்மனுதாரர் ஒரு வழக்கறிஞர் மூலம் 17.01.2024 அன்று மகாராஷ்டிராவின் சங்லியிலிருந்து அனுப்பினார். அந்த அறிவிப்பில், அவர்கள் செய்ததாகக் கூறப்படும் ஒப்பந்த மீறல் குறித்து மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர், 14.2.2024 அன்றுதான், மேலே குறிப்பிடப்பட்ட எதிர் மனுதாரரால் அனுப்பப்பட்ட 17.01.2024 தேதியிட்ட சட்ட அறிவிப்பிற்கு மனுதாரர் ஒரு பதில் அனுப்பினார்.

(ஊ) ஒப்பந்தத்தின் பொருள் தொடர்பாக கட்டாய உறுத்துக் கட்டளை மற்றும் பிற நிவாரணங்களைக் கோரி எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக ஒரு வழக்கை மகாராஷ்டிராவின் சங்லியில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தில் மட்டுமே R.C.S. No.78/2024-ல் தாக்கல் செய்தார். அந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர், சட்டம் பிரிவு 21-ன் கீழ் மத்தியஸ்தத்தை செயல்படுத்துவதற்கான அறிவிப்பையும் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு வழங்கியிருந்தார்.

(எ) இந்த மனுக்களில், சங்லியில் மத்தியஸ்தத்தின் இருக்கை உள்ளது என்றும், தமிழ்நாட்டில் எந்த ஒரு காரண காரியத்தின் பகுதியும் எழவில்லை என்றும் எதிர்மனுதாரர் தங்கள் எதிர் மனுவில் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

(ஏ) மனுதாரரால் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட O.A.No. 414/2024 ஆனது. இறுதித் தீர்மானத்திற்காக இந்த நீதிமன்றத்தால் இன்னும் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. உண்மையில், O.A. No. 414/2024-ல் 10.09.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பத்தி எண் 5-ல், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கும்போது, எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க ஆட்சேபனை தெரிவித்தி

ருந்தாலும், நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரிலும் மற்றும் மனுதாரரால் மேற்கொள்ளப் பட வேண்டிய ஆய்வின் மூலம் எழக்கூடிய எதிர்பாராத புகார்களைத் தவிர்ப்பதற்காகவும், இந்த நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையருடன் இணைந்து மனுதாரர் ஆய்வு மேற்கொள்வது பொருத்தமானது என்றும் நீதிமன்றம் பதிவு செய்தது. அந்த சூழ்நிலை களின் கீழ் மட்டுமே, எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்தார்.

9. கட்சிகளுக்கிடையே உள்ள தாவாவின் பொருளாக இருக்கும் ஒப்பந்தத்தில் அடங்கி யுள்ள மத்தியஸ்த நிபந்தனையை இந்த நீதிமன்றம் இப்போது ஆய்வு செய்து, இந்த மனுக்களுக்கு தீர்ப்பளிக்க இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு உள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். கட்சிகளுக் கிடையேயான தாவாவின் பொருளாக இருக்கும் 23.08.2020 தேதியிட்ட ஒப்பந்தத்தில் அடங்கி யுள்ள மத்தியஸ்த நிபந்தனைகள் கீழே மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளது:

‘15. அதிகார வரம்பு மற்றும் தாவா தீர்வு: இந்த ஒப்பந்தம் மும்பையில் உள்ள நீதிமன்றங்களால் நிர்வகிக்கப்படும் மற்றும் இந்திய சட்டங்களால் நிர்வகிக்கப்படும். இந்த ஒப்பந்தம் அல்லது இதில் உள்ள எந்த நிபந்தனை அல்லது விஷயத்தின் கட்டுமானம், பொருள் அல்லது விளைவு அல்லது இதன் கட்சி களின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து எந்த நேரத்திலும் கட்சிகளுக்கிடையில் ஏதேனும் தாவா அல்லது வேறுபாடு எழுந்தால், அது டி.எஸ்.ஆர்.–ஆல் நியமிக்கப்பட்ட ஒரே ஒரு மத்தியஸ்தருக்கு பரிந்து ரைக்கப்படும். மேலும் அவரது முடிவு கட்சி களைக் கட்டுப்படுத்தும் மற்றும் இறுதியானது. மத்தியஸ்த நடவடிக்கைகள், மத்தியஸ்தம் மற்றும் இணக்க சட்டம், 1996 மற்றும்/ அல்லது அந்த நேரத்தில் அமலில் உள்ள அதன் சட்டப்பூர்வ மாற்றங்கள் அல்லது மறு–சட்ட மாக்கம் ஆகியவற்றிற்கு இணங்க இருக்கும். அத்தகைய மத்தியஸ்தத்தின் இடம் மும்பையில் மட்டுமே இருக்கும் மற்றும் சென்னை நீதிமன்றங்களுக்கு மட்டுமே தனி மற்றும் பிரத்யேக அதிகார வரம்பு இருக்கும். மத்தியஸ்த நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் மொழி ஆங்கிலமாக இருக்கும்.’

10. மத்தியஸ்த நிபந்தனையின் தொடக்க வாக்கியம், ஒப்பந்தம் மும்பையில் உள்ள நீதிமன்றங்களால் நிர்வகிக்கப்படும் என்றும் இந்திய சட்டங்களால் நிர்வகிக்கப்படும் என்றும் தெளிவாகக் காட்டுகிறது. மத்தியஸ்த நிபந்தனை யின் பிந்தைய பகுதியில், மத்தியஸ்தத்தின் இடம் மும்பையில் மட்டுமே இருக்கும் என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மத்தியஸ்த நிபந்தனையின் தொடக்க வாக்கியத்திற்கு முரணாக, மத்தியஸ்த நிபந்தனை யின் பிந்தைய பகுதி, சென்னை நீதிமன்றங் களுக்கு மட்டுமே தனி மற்றும் பிரத்யேக அதிகார வரம்பு இருக்கும் என்று வெளிப்படுத்துகிறது. ‘சென்னை நீதிமன்றங்களுக்கு மட்டுமே தனி மற்றும் பிரத்யேக அதிகார வரம்பு இருக்கும்’ என்ற குறிப்பு ஒரு தட்டச்சுப் பிழை என்று எதிர் மனுதாரர் தரப்பில் திட்டவட்டமான நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது. முழு காரண காரியமும் மும்பையில் மட்டுமே எழுந்ததால், மும்பையில் உள்ள நீதிமன்றங்களுக்கு மட்டுமே இந்த மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் உள்ளது என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் திட்டவட்டமான நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

11. இந்த நீதிமன்றத்தால் பத்தி 8(அ) முதல் 8(ஏ) வரை பதிவு செய்யப்பட்ட சர்ச்சைக்கு இடமில்லாத பொருண்மைகளிலிருந்து பார்க்கும் போது, தமிழ்நாட்டு மாநிலத்திற்குள் காரண காரியத்தின் எந்தப் பகுதியும் எழவில்லை என்பது தெளிவாகிறது. எதிர்மனுதாரரின் கற்ற றிந்த வழக்கறிஞரால் நம்பப்பட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் பரத் ஷெர் சிங் கல்சியா –எதிர்– பீகார் மாநிலம் மற்றும் மற்றொருவர் [(2024) 4 SCC 318] என்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பும், ஒரு பத்திரத்தின் முந்தைய மற்றும்

பிந்தைய நிபந்தனைகளுக்கு இடையே முரண்பாடு இருந்தால், பிந்தைய நிபந்தனை முந்தைய நிபந்தனையால் உருவாக்கப்பட்ட கடமையை முழுவதுமாக அழிக்கும்போது, பிந்தைய நிபந்தனை முந்தைய நிபந்தனைக்கு முரண்பட்டதாக நிராகரிக்கப்பட வேண்டும் என்றும், முந்தைய நிபந்தனையே மேலோங்கும் என்றும் தெளிவாகக் கூறுகிறது.

12. இந்த வழக்கில், ஒப்புக்கொண்டபடி, முழு காரண காரியமும் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டுமே நடந்ததால், தமிழ்நாட்டு மாநிலத்திற்குள் காரண காரியத்தின் எந்தப் பகுதியும் எழவில்லை. மனுதாரர் தங்கள் மனுக்களுக்கு ஆதரவாகப் பதிவு செய்துள்ள ஆவணங்களும், முழு காரண காரியமும் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டுமே நடந்தது என்பதை வெளிப்படுத்து கின்றன. இந்த உத்தரவின் பத்தி எண் 8(அ) முதல் 8(ஏ) வரை இந்த நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட சர்ச்சைக்கு இடமில்லாத உண்மை களும், முழு காரண காரியமும் மகாராஷ்டிரா மாநிலத்திற்குள் மட்டுமே எழுந்தன என்பதை நிரூபிக்கின்றன.

13. எதிர்மனுதாரருக்கு மகாராஷ்டிராவின் சங்லியில் மட்டுமே அலுவலகம் உள்ளது என்பதும், தரப்பினர்களுக்கிடையே உள்ள தாவாவின் பொருளாக இருக்கும் ஒப்பந்தம் மும்பையிலிருந்து வாங்கப்பட்ட நீதித்துறை அல்லாத முத்திரைத் தாளில் பதியப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டிய இடம் மனுதாரரைப் பொறுத்தவரை காலியாக விடப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் கையெழுத்திட்ட இடம் மகாராஷ்டிராவின் சங்லியில் மட்டுமே கையெழுத்திட்டதைக் காட்டுகிறது. மத்தியஸ்த நிபந்தனையின் கீழ், மத்தியஸ்தத்தின் இடமும் மும்பையில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது மனுதார ருக்கும் மும்பையில் அலுவலகம் இருந்தது. அவரது வாதங்களின் போது மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் இதனை மறுக்க வில்லை.

14. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், சட்டத்தின் பிரிவு 42-ஐ சார்ந்து நின்று தனது வாதத்தை முன்வைத்தார். அந்த சட்டபிரிவு கீழே மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளது:

பிரிவு 42: அதிகார வரம்பு – இந்த பகுதி அல்லது அந்த நேரத்தில் அமலில் உள்ள வேறு எந்தச் சட்டத்திலும் வேறு எதுவுமிருந்தாலும், ஒரு மத்தியஸ்த ஒப்பந்தம் தொடர்பாக இந்த பகுதியின் கீழ் எந்தவொரு விண்ணப்பமும் ஒரு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டால், அந்த நீதிமன்றம் மட்டுமே மத்தியஸ்த நடவடிக்கை களின் மீதும், அந்த ஒப்பந்தம் மற்றும் மத்தியஸ்த நடவடிக்கைகளிலிருந்து எழும் அனைத்து பிந்தைய விண்ணப்பங்களின் மீதும் அதிகார வரம்பைக் கொண்டிருக்கும். மேலும் அந்த நீதிமன்றத்தில் மட்டுமே அத்தகைய விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். வேறு எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்படக் கூடாது.

15. சட்டத்தின் பிரிவு 42-ஐ நம்பி, மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், C.W.மனு எண் 286/2024-ல் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப் பட்ட விண்ணபத்தில், எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தால் ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க ஒப்புக்கொண்டதால், சட்டத்தின் பகுதி-I-ன் கீழ் எழும் அனைத்து பிந்தைய விண்ணப்பங்களும் இந்த நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று வாதிடுகிறார். ஒப்புக்கொண்டபடி, Arb.Appln. No.286/2024 இந்த நீதிமன்றத்தால் இறுதித் தீர்வு செய்யப்படவில்லை. மேலும் அந்த மனு பிரிவு 11 விண்ணப்பம் உட்பட மற்ற மனுக்களுடன் சேர்த்து இந்த உத்தரவின் மூலம் விசாரிக்கப் பட்டு நிலுவையில் உள்ளது. இந்த மனுக்கள் அனைத்திலும், எதிர்மனுதாரர் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் மத்தியஸ்த நிபந்தனை, மத்தியஸ்தத்தின் இருக்கை மும்பை யில் மட்டுமே என்று நிர்ணயித்துள்ளதாலும், காரண காரியத்தின் எந்தப் பகுதியும் தமிழ்நாட்டு மாநிலத்திற்குள் எழாததாலும், இந்த மனுக்களை

விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு பிராந்திய அதிகார வரம்பு இல்லை என்று அவர்கள் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். O.A.No.414/2024 மற்றும் Arb.An.No.286/ 2024–ல், வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப் பட்ட 10.09.2024 தேதியிட்ட உத்தரவில் கூட, எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க ஆட்சேபனை தெரிவித்திருந்தாலும், நீதிமன்றத்தின் ஆலோசனையின்பேரிலும், மனுதாரரால் மேற் கொள்ளப்பட வேண்டிய ஆய்வின் மூலம் எழக் கூடிய எதிர்பாராத புகார்களைத் தவிர்ப்ப தற்காகவும், இந்த நீதிமன்றத்தால் நியமிக்கப் படும் வழக்கறிஞர் ஆணையரின் மேற்பார்வை யின் கீழ் மனுதாரர் ஆய்வு மேற்கொள்வது பொருத்தமானது என்று மட்டுமே தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

16. அதிகார வரம்பு இல்லாமல் ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லாததாக கருதப்படுகிறது. அதாவது அது கட்டுப்படுத்தாது மற்றும் சட்டபூர்வமான விளைவைக் கொண்டிருக்காது. இந்த கொள்கை பல வழக்குச் சட்டங்கள் மூலம் நிறுவப் பட்டுள்ளது. மேலும் அதிகார வரம்பு இல்லாமல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவும் செல்லாது. வெற்றிடம் மற்றும் சட்டபூர்வமான விளைவைக் கொண்டிருக்காது என்று கருதப்படுகிறது. மேலும் அது சம்பந்தப் பட்ட தரப்பினரைக் கட்டுப்படுத்தாது. உத்தரவின் செல்லாத தன்மையை நிறைவேற்றுதல் அல்லது இணை நடவடிக்கைகளின்போது கூட எந்த நேரத்திலும் எழுப்பலாம். பிராந்திய, பண ரீதியான அல்லது விஷயரீதியான அதிகார வரம்பு போன்ற காரணிகளால் நீதிமன்றம் ஒரு விஷயத்தை விசாரிக்க இயலாமை, அந்த நடவடிக்கைகளைச் செல்லாததாக்குகிறது. தரப்பினர்கள் அந்த உத்தரவுக்கு ஒப்புக் கொண்டாலும், அதிகார வரம்பு இல்லாமை விலக்கப்படவோ அல்லது சரிசெய்யப்படவோ முடியாது.

17. இந்த வழக்கில், O.A.No.414/2024 மற்றும் Arb.Appln.No.286/2024 இந்த நீதிமன்றத்தால் இறுதித் தீர்வு செய்யப்படாததால், இந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதால், சட்டத்தின் பிரிவு 42-I பயன்படுத்துவதன் மூலம், இந்த நீதிமன்றம் மட்டுமே சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து பிந்தைய மனுக்களை யும் தீர்மானிக்க அதிகார வரம்பைக் கொண்டி ருக்கும் என்று மனுதாரர் நிலைப்பாடு எடுக்க முடியாது. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட அனைத்து பதில் மனுக்களிலும், இந்த மனுக்களை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு பிராந்திய அதிகார வரம்பு இல்லை என்று எதிர்மனுதாரர் ஒரு திட்டவட்ட மான மற்றும் நிலையான நிலைப்பாட்டை எடுத்துள்ளபோது, அதிலும் காரண காரியத்தின் எந்தப் பகுதியும் தமிழ்நாட்டு மாநிலத்திற்குள் எழாதபோது மற்றும் மத்தியஸ்த நிபந்தனையின் தொடக்கப் பத்தி மும்பை நீதிமன்றங்களுக்கு மட்டுமே அதிகார வரம்பு இருக்கும் என்று தெளிவு படுத்தும்போது, மத்தியஸ்த நிபந்தனையின் பிந்தைய பகுதியில் காணப்படும் நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த தெளிவின்மையைப் பயன்படுத்த மனுதாரர் முடியாது. இந்த உத்தரவின் பத்தி எண் 8(அ) முதல் 8(ஏ) வரை சர்ச்சைக்கு இடமில்லாத உண்மைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்களால் ஆதரிக்கப் படும் சுற்றியுள்ள சூழ்நிலைகள், கட்சிகளின் நோக்கம் மும்பையில் மட்டுமே மத்தியஸ்த இருக்கையை நிர்ணயிப்பதாகும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எனவே, இந்த மனுக் களைத் தீர்மானிக்க மும்பையில் உள்ள நீதிமன்றங்களுக்கு மட்டுமே பிராந்திய அதிகார வரம்பு உள்ளது, இந்த நீதிமன்றத்திற்கு அல்ல.

18. வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஒரு இறுதி உத்தரவு அல்ல என்பதாலும், இந்த நீதிமன்றம் அதிகார வரம்பு பிரச்சினையை முன்னர் தீர்மானிக்காததாலும், அந்த மனு

இன்னும் நிலுவையில் உள்ளதாலும், இந்த உத்தரவின் மூலம் மட்டுமே அது இறுதியாகத் தீர்வு செய்யப்படுவதாலும், மேலும் இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு இல்லாததாலும், சட்டத்தின் பிரிவு 42-ஐ மனுதாரர் நம்பி இருப்பது நிலைக்கத்தக்கதல்ல.

19. 'கான்ட்ரா ப்ரோஃபெரென்டெம்', அதாவது 'வழங்குபவருக்கு எதிராக' அல்லது 'வரைந்தவருக்கு எதிராக' என்று பொருள்படும், இது ஒரு ஒப்பந்தத்தின் தெளிவற்ற நிபந்தனை களை எவ்வாறு விளக்க வேண்டும் என்று கட்டளையிடும் ஒப்பந்தச் சட்டத்தில் உள்ள ஒரு சட்டக் கோட்பாடாகும். அதாவது ஒரு நிபந்தனை தெளிவற்றதாக இருந்தால், அதை வரைந்த அல்லது அறிமுகப்படுத்திய தரப்பினருக்குக்கு எதிராகவே விளக்கப்பட வேண்டும் என்று பொருள்படும். இந்த விதி பெரும்பாலும் தரப்பினர்களுக்கிடையே பேரம்பேசும் சக்தியில் சமநிலையற்ற தன்மை இருக்கும் சூழ்நிலை களில் பயன்படுத்தப்படுகிறது, மேலும் இது பலவீனமான கட்சியைச் சாத்தியமான சுரண்டலில் இருந்து பாதுகாக்க உதவுகிறது. 'கான்ட்ரா ப்ரோஃபெரென்டெம்' கொள்கையைப் பயன் படுத்துவதன் மூலமும், இந்த மனுக்களைத் தீர்மானிக்க இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு இல்லை என்பது முற்றிலும் தெளிவாகிறது.

20. மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக, இந்த மனுக்களைத் தீர்மானிக்க இந்த நீதிமன்றத்திற்குப் பிராந்திய அதிகார வரம்பு இல்லை, அதன்படி, O.A.No.414/2024, Arb.Appln.No.286/2024 மற்றும் Arb.O.P (Com.Div.) No.537/2024 ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகின்றன. இருப்பினும், எதிர்மனு தாரருக்கு எதிரான தங்கள் குறைகளைத் தீர்க்க மனுதாரர் விரும்பினால் மும்பை நீதிமன்றங்களை அணுக அவருக்கு சுதந்திரம் வழங்கப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுடன் தொடர்புடைய சொத்து விற்பனை தொடர்பாக உச்சநீதிமன்றம் புதிய உத்தரவு

18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுடன் தொடர்புடைய சொத்து விற்பனை தொடர்பாக உச்சநீதிமன்றம் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்து உள்ளது.

கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ருத்ரப்பா என்பவர் கடந்த 1971ஆம் ஆண்டு, 18 வயதுக்கு கீழ் (மைனர்) உள்ள தனது 3 மகன்களின் பெயரில் 2 மனைகளை வாங்கி இருந்தார். பின்னர் மகன்கள் 18 வயதை எட்டுவதற்கு முன்னரே அந்த சொத்துகளை 3-ஆம் நபருக்கு விற்பனை செய்தார். இது தொடர்பாக, மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதியும் பெறவில்லை. ஆனால் மகன்கள் வளர்ந்த பிறகு, அவர்கள் தங்கள் தாயுடன் சேர்ந்து 2 மனைகளையும் மற்றொருவருக்கு விற்பனை செய்தனர். இதனால் இந்த சொத்துகள் தொடர்பாக கர்நாடக நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடந்தது. இதில் கடந்த 2013ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பித்த உயர்நீதிமன்றம் ருத்ரப்பாவின் மகன்கள் தங்கள் தந்தையின் விற்பனையை ரத்து செய்ய நீதிமன்றத்தில் முறைப்படி வழக்கு தாக்கல் செய்யாத தால் ருத்ரப்பா செய்த விற்பனை செல்லும் என அறிவித்தது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இதை நீதிபதிகள் பங்கஜ் மித்தல் மற்றும் பிரசன்னா வரலே அமர்வு விசாரித்தது. வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில் புதிய உத்தரவு ஒன்றை நீதிபதிகள் பிறப்பித்தனர். அதாவது 18 வயதுக்கு உட்பட்டவர்களுடன் தொடர்புடைய சொத்து விற்பனையை ரத்து செய்வதற்கு வழக்கு தொடர வேண்டியது கட்டாயம் இல்லை என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நீதிபதிகள் மேலும் கூறியதாவது.

இந்து சிறுபான்மை மற்றும் பாதுகாவலர் சட்டப் பிரிவு 7 மற்றும் 8இன்படி, ஒரு மைனரின் இயற்கை யான பாதுகாவலரால், மைனரின் அசையாச் சொத்தின் எந்தப் பகுதியையும் அடமானம் வைக்கவோ, விற்கவோ, பரிசளிக்கவோ அல்லது வேறுவிதமாக மாற்றவோ முடியாது.

மேலும் அத்தயை சொத்தின் எந்தப் பகுதியையும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அல்லது நீதிமன்றத்தின் முன் அனுமதியின்றி மைனர், மேஜர் ஆகும் தேதிக்கு அப்பால் ஒரு வருடத்திற்கம் மேலாக நீட்டிக்கவோ குத்தகைக்கு விடவோ சட்டத்தில் எந்த அதிகாரமும் இல்லை.

எனவே மைனர் ஒருவரின் சொத்து மாற்றுத்துக்கு நீதிமன்றம் அனுமதி முக்கியமாகும். அவ்வாறு 18 வயதுக்கு உட்பட்டவருடன் தொடர்புடைய சொத்தை நீதிமன்றம் அனுமதியின்றி விற்பனை செய்தது செல்லாத பரிவர்த்தனை ஆகும். அவரது பாதுகாவலரால் செயல்படுத்தப்பட்ட இந்த செல்லாத பரிவர்த்தனையை அந்த மைனர் 18 வயதை அடைந்தவுடன் ரத்து செய்ய முடியும். இவ்வாறு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறினர்.

நன்றி: தினத்தந்தி 24.10.2025

# காற்றாலைகள் நிறுவலுக்கு ஊராட்சி ஒன்றிய அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்டு தேவையாகும்.

சென்னை உயர்நீதிமன்றம் - மதுரை கிளை
தலைமை நீதிபதி கே.எஸ்.ஶ்ரீராம்
நீதிபதி வி.லக்சுமி நாராயணன்
நீபே (எம்டி) எண் 3789/2013
12.2.2025
2025 (2)சிடிசி 225

சூப்பர்சேல்ஸ் இந்தியா லிட் சா: அதன் நிறுவன செயலர்,
34ஏ, காமராஜர் சாலை, கோயம்புத்தூர் 641 018 ...மனுதாரர்

–எதிர்–

1. தலைவர் தப்புக்குண்டு ஊராட்சி,
தேனி ஊராட்சி ஒன்றியம்,
தேனி மாவட்டம் 625 534.
2. உறுப்பினர் (உருவாக்கம்) மரபுசாரா ஆற்றல் மூலங்கள்,
தமிழ்நாடு மின் வாரியம், 144, அண்ணா சாலை,
சென்னை 600 002
3. தமிழ்நாடு மாநிலம் சார் அதன் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 ...எதிர்மனுதாரர்கள்

**அனிருத் கிருஷ்ணன்,**
மனுதாரரது வழக்குரைஞர்
சர்வமான் அசோசியேட்ஸ் சார்பில்

1வது எதிர்மனுதாரர் சார்பில் எவரும் முன்னிலையாகவில்லை; பி.திலக்குமார், அரசு வழக்குரைஞர் 2–3வது எதிர்மனுதாரர்கள் சார்பாக.

நீபேம–கள் கருத்துரைகளுடன் தீர்வானது– செலவு தொகையில்லை. பம முடிக்கப்பட்டது

**கோருகை:** 1வது எதிர்மனுதாரரது 18.2.2013 தேதிய விவரகுறிப்புடன் தொடர்புற்ற பதிவெண் களை வரவழைத்தலுக்கும் 18.2.2013 தேதிய விவரக்குறிப்பில் அச்சுறுத்தப்பட்டவாறு மனு தாரர் நிறுவனத்துக்கு எதிராக வலுக்கட்டாய நடவடிக்கைகளை எடுக்காதிருக்குமாறு அல்லது துவக்காதிருக்குமாறு 1–2வது எதிர்மனுதாரர் களை பணித்துக் கொண்டு, அதை ரத்தாக்கி பொருத்தமான பணித்தல் இயற்றிடவும் மனு இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 226 கீழ் தாக்கலானது.

**ஆணை**

[நீதிமன்ற ஆணை தலைமை நீதிபதியால் இயற்றப்பட்டது]

பல்வேறு வகை நூல் தயாரிப்பிலும் பல்வேறு தொழில்களுக்கு கியர் தயாரிப்பிலும் காற்றி லிருந்து ஆற்றல் போன்ற நீட்டிக்கத்தக்க மரபுசாரா மூலங்களில் ஆற்றல் உருவாக்கு தலிலும் மனுதார ஈடுபடுகிறார்கள். தொடர்புறு காலக் கட்டத்தில் மின்சார பற்றாக்குறை காரணத்தால் காற்றாலைகல் நிறுவிட மனுதாரர் தீர்மானித்தார். காற்றாலைகள் போன்ற மரபுசாரா ஆதாரங்கள் மூலமாக ஆற்றல் உற்பத்திக்கான பல்வேறு நடவடிக்கைகளுக்கு அனுமதியளித்துக் கொண்டு தமிழ்நாடு அரசும் ஆதரவளித்திருந்தது. தமிழ்நாடில் பல்வேறு கிராமங்களில் 69 காற்றாலைகளை மனுதார்ர நிர்மாணித்திருந்தார். அததகைய ஆலை ஒன்று தேனி மாவட்டம் தப்புக்குண்டு ஊராட்சியின் ஆள்வரைக்குள் உள்ளதாகும்.

2.பதிவுற்ற கிரைய ஆவணத்தின் பின் தொடர்கையாக 2 ஏக்கர் 22 செண்டு பரப்பி

லான நிலத் துண்டை மனுதாரர் வாங்கி யிருந்தார். பின்னர் த.நா.மி.வா. எனவாக குறிப்பிடப்படும் தமிழ்நாடு மின் வாரியத்துக்கு ஒரு 1500 கி.வா. காற்று மின்னியக்கி நிறுவலுக்கான முன்மொழிவை மனுதாரர் சமர்ப்பித்தார். காற்றாலை உற்பத்தி மின்னியக்கி யுடன் காற்று மின் உருவாக்கலை பிரிவு 2 செயற்திட்டமாக த.நா.மி. அனுமதித்தது செயற் திட்டமாக த.நா.மி. ஒப்பேற்பு அடிப்படை யில் 1500 கி.வா. திறன் காற்று மின்னியக்கி சொன்ன நிலத்தில் மனுதாரர் நிறுவினர். உருவான மின்சாரம் த.நா.மி. மின்தொகுப்பு மூலமாக கடத்தப்பட்டு மின்னாற்றல் கொள் முதல் ஒப்பந்தம் கீழ் TANGEDCOக்கு விற்கப் பட்டுள்ளது.

3.திடீரென்று 18.7.2012 அன்று கீழ்வருவன வற்றை கூறிக் கொண்டு அறிவிப்பு மனுதார ருக்கு சார்வு செய்யப்பட்டது.

(ஏ)1994இன் தமிழ்நாடு ஊராட்சி சட்ட (பின்னர் சட்டம் என குறிப்பிடப்படும்) பிரிவு 160 கீழ் சிந்திக்கப்பட்டவாறு தொழிற்சாலை நிர்மானத்துக்கு மனுதாரர் அனுமதி பெற வேண்டியதாகும்.

(பி) காற்றாலை நிறுவலுக்கு 1997இன் தமிழ்நாடு ஊராட்சி கட்டடங்கள் விதிகளுக்கு ஏற்ப கீழ் கட்டட வரைபடத்துக்கு ஒப்பேற்பு பெறப்பட வேண்டியதாகும்

(சி) சட்ட பிரிவு 2(1–ஏ) இன் விதிமுறைகள் படி காற்றாலைகளுக்கு கட்டட வரி செலுத்தப்பட வேண்டியதாகும்.

(டி) காற்றலையை இயக்கலுக்கு தொழில் வரி செலுத்துகை.

4. அறிவிப்பு வரப்பெற்றபோில் அறிவிப்பில் சொல்லப்பட்டவாறு அனுமதி அல்லது சம்மதம் எதனையும் பெறுதல் எவ்வாறு அதற்கு அவசிய மாகவில்லை என்ற காரணத்தை கட்டிக் கொண்டு 4.8.2012 அன்று பதிலை மனுதாரர் சமர்ப்பித்தார். அதிலும் குறிப்பாக சட்டப் பிரிவு 160 எவ்வாறு பொருந்தாது என்பது பற்றி மனுதாரரால் பல்வேறு முகாந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

5.இந்த பதில் உள்ளபோதிலும் பதிலில் வைக்கப்பட்ட வாதங்களை நிராகரித்துக் கொண்டும் 18.2.2013 அன்று விவரக் குறிப்பை 1வது எதிர்மனுதாரர் இயற்றினார். கட்டட வரைபட அனுமதிக்காக விண்ணப்பித்து கட்டட வரி தொழில் வரை பிறவற்றை மனுதாரர செலுத்த தவறினால் உரிய நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்திக் கொண்டும். இந்த விவரகுறிப்பு இந்த நீதிப்பேராணை மனுவில் குறையுறுவாகிறது.

6.விசாரணைக்காக அனுமதித்தல் பற்றி எந்த முறைசார் உத்தரவும் இயற்றப்படவில்லை என எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. எதிருரை தாக்கலிடப்பட்டிருந்தும் விஷயம் பழையதாகவும் உள்ளதால் மனுவை விசாரிக்க நாங்கள் கடைசியில் முடிவெடுத்தோம். ஆகையால் விதி படைத்து அது உடனடியாக திருப்பத்தக்கதாகவும் செய்திடுக.

7. வரலாறு எனவாக 2012 3 MLJ 6இல் அறிவிப்பான எஸ். முப்பிடாத்தி எதிர் தலைமை பொறியாளர் மரபுசாரா ஆற்றல் ஆதாரங்கள், தமிழ்நாடு மின் வாரியம், சென்னை மற்றும் பிறர் வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதியாலான தீர்ப்புரையில் சட்டப் பிரிவு 160 மின்னுற்பத்தி செய்யும் காற்றாலைக்கு பொருந்துகிறது எனவும் எனவே உற்பத்தி செயல்பாடில் ஈடுபடும் தொழிற்சாலையாக அது உள்ளது எனவும் தீர்ப்பிட்டிருந்தார் என்பதை நாங்கள் கவனிப்பது தேவையாகும். இந்த தீர்ப்புரை 17.11.2011 அன்று வழங்கப்பட்டது

8. 19.6.2012 அன்று நீபேம (ஏம்டி) எண் 5000/2012இல் கங்கைகொண்டான் தலைவர், மானூர் ஊராட்சி ஒன்றியம் –எதிர்– தலைமை பொறியாளார் மரபுசாரா ஆற்றல் ஆதாரங்கள், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை மற்றும் பிறர் வழக்கு தீர்ப்புரையில், அது கிராம ஒன்றியத்தால் அனுப்பப்பட்டததால் அறிவிப்பே சட்டத்தில் மோசமானது என தீர்ப்பிட்டார். சட்டப் பிரிவு 160 கீழ் ஊராட்சி ஒன்றிய குழுமம் மட்டுமே தகுதினுறு அதிகாரியாகும் என் அவர் தீர்ப்பிட்டார். உண்மையில், சட்டப் பிரிவு 169 கீழ்

சிந்திப்பாகும் இயந்திர தொகுதியை நிறுவுவதாக காற்றாலை நிர்மானம் கருதப்பட வேண்டிய தாகும் என விஷயத்தில் மனுதாரரின் வாதத்தை நீதிபதி ஏற்றிருந்தார்.

9. எங்கடளிமுள்ள நீதிப்பேராணை மனுவில் ஊராட்சியிலிருந்து து உரிமம் அல்லது கட்டட அனுமதி பெறல் அவசியப்பாடில்லை என் மேலுள்ள கங்கைகொண்டான வழக்கில் தனி நீதிபதி கூறியிருந்தார். அப்படியிருக்கையில் மேலுள்ள முப்பிடாத்தி வழக்கில் காற்றாலை நிறுவலுக்கு உரிமம் முற்றிலும் அவசியமாகும் என தனி நீதிபதி தீர்ப்பிட்டுள்ளார் எனவும் ஆகையால் உள்ளூர் குழுமத்தின் அனுமதியை காற்றாலை நிர்மானம் அவசியமாக்குகிறதா என்ற அமசத்தில் இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளின் முரணாகும் தீர்ப்புரைகள் உள்ள தால் விஷயம் இருநீதியர் அமர்வால் தீர்மானிக்கப்பட்ட ஏற்றதாகிறது என அவர் தீர்ப்பிட்டார். அதற்கிணங்க விஷயம் எங்களிடம் வகிக்கப்படுகிறது.

10. இதற்கிடையில், நீபேமே (ஏம்டி) எண் 5000/2012இல் அறிவிப்பாகாத தீர்ப்புரையை எதிர்த்து உரிமை பட்டய சரத்து 15 கீழ் தாக்கலான மேல்முறையீடு நீபேமே எண் 765/2012இல் சட்டப் பிரிவு 160 கீழ் தொழிற்சாலை கட்டமைப்புக்கு அனுமதி வழங்குதலுக்கு, கிராம பஞ்சாயத்து திறனுறு அதிகாரி அல்ல. ஆனால் ஒன்றிய ஊராட்சி குழுமம் தகுதிறனுறு அதிகாரியாக உள்ளது எனவாக அங்குள்ள தனி நீதிபதியின் கருத்துடன் 7.3.2023 தேதிய தீர்ப்புரை கீழ் மற்றொரு இரு நீதியர் அமர்வு இணங்கியது. ஆகையால் இரு நீதியர் அமர்வு அறிவிப்பை நீக்கறவாக்கியது. எனினும் காற்றாலைகலை எழுப்புதலுக்கு சட்ட பிரிவு 160இன் பொருந்துகை பற்றிய கேள்வியை இரு நீதியர் அமர்வு ஆராய்ந்திருந்த தில்லை.

11.கையிலுள்ள வழக்கு சட்டப் பிரிவு 160 பொருந்தாது எனவும் விளைவாக அதில் சிந்திக்கப் பட்டவாறு தொழிற்சாலை கட்டுமானத்துக்கு அனுமதி தேவையில்லை எனவும் ஆன காரணத்தை மட்டுமே அவர் வலியுறுத்துவார் எனபதை தற்போதைக்கு மனுதாரருக்காக முன்னிலையான வழக்குரைஞர் திரு.அனிருத் கிருஷ்ணன் எடுத்த எடுப்பில் பணிந்திட்டார். சட்டப் பிரிவு 172 கீழ் கிராம பஞ்சாயத்தில் வீட்டு வரி விதிக்க உரிமையை பஞ்சாயத் கொண்டி ருந்தால் கொட்டகையின் பரப்புக்கு மட்டுமே வரி பொருந்தினாலும் கூட வரி பொருந்துவதாகும். அதில் காற்றாலை முறையாக செயலாற்றிக் கொண்டிருக்கிறதா என்பதை கண்காணிக்கும் நபர் அமர்கிறார். நிர்மானிக்கப்பட்ட காற்றாலையை பராமரிக்க் அல்லது இயக்கிட எவரும் நியமன மாகியிருக்கவில்லை எனவும் விலைவாக தொழில்வரி செலுத்தத்தக்கதல்ல எனவும் வழக்குரைஞர் கூறுகிறார்.

12. அதேநேரத்தில் மனித சுவாதினத்திற்கு பொருத்தமாகும் கட்டடத்தில் அது வசிப்பிடமாக அல்லது வேறானதாக இருந்தாலும் கூட செலுத்ததக்கதாகும் வரி வீட்டு பரப்புக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும் காற்றாலைக்கு அல்ல. அதை ஏற்காது காற்றாலை தொழிற் சாலை ஆகும் என அனுமானித்தாலும் கூட காற்றாலை பரப்பு தொழிற்சாலையாக கருதப் படுகிறது ஆயினும் பிரிவு 160 பொருந்ததாது. என் வழக்குரைஞர் மேலும் கூறுகிறார்.

13.மேற்சொன்ன முப்பிட்டத்தி தீர்ப்பில் நம்புகை கொண்டு, காற்றாலை மின்னுற்பத்தி செய்து கடத்துகிறது எனவும் ஆகையால் முப்பிடாத்தி வழக்கு அவ்வாறு சொல்வதால் அது சட்டப் பிரிவு 160இல் உள்ளாகும் எனவும் அரசு வழக்குரைஞர் திரு.பி.திலக்குமார் பணிந்திட்டார்.

14.துவக்கமாக, முப்பிடாத்தி வழக்கு பத்தி 16இல் பதிவானவாறு சட்டப் பிரிவு 160 கீழ் காற்றாலை நிர்மானத்துக்கு கிராம பஞ்சாயத்து அனுமதி தேவையாகும் என்பதை காற்றாலை உரிமையாளரான எதிர்மனுதாரரது வழக்குரைஞர் ஒத்துக் கொண்டார் என நாங்கள் கூறல் தேவை யாகும். ஆகையால் காற்றாலைக்கு பிரிவு 160 பொருந்தியதா எனும் கேள்விக்குள் நீதிமன்றம் செல்லவில்லை.

15. சட்டப் பிரிவு 160 பொருந்தாது என திரு அனிருத் கிரிஷன் கூறுகிறார். நாங்கள் அவருடன் இணங்குகிறோம். பிரிவு 160 கீழ் வருமாறு வாசிப்பாகிறது.

160.தொழிற்சாலைகளை கட்டுதலுக்கும் இயந்திர தொகுதியை நிறுவலுக்கும் அனுமதி: பஞ்சாயத் கிராமங்களில் பஞ்சாயத் ஒன்றிய குழுமத்தின் அனுமதியின்றியும் அத்தகைய அனுமதியில் குறிப்பிடப்படும் நிபந்தனைக்கு இசைவானது தவிர்த்து எவரும்

(ஏ) நீராவி ஆற்றல் நீராற்றல் அல்லது இதர எந்திர ஆற்றல் அல்லது மின்னாற்றல் பயனுற முன்மொழியப்படும் தொழிற்சாலை பணிமனை அல்லது பணியிடம் எதனையும் கட்ட அல்லது நிர்மானிக்கக் கூடாது.

விதிகளால் விலக்கப்படும் இயந்திர தொகுதி அல்லது உற்பத்தி நிறுவனம் அல்லாது, முன் சொன்னவாறு பணியிடங்கள் எதனிலும் ஆற்றலால் இயக்கப்படும் இயந்திர தொகுதி அல்லது உற்பத்தி தொழிற்சாலையை நிறுவக் கூடாது.

16.ஆகையால் சட்டப் பிரிவு 160கீழ் நீராவி ஆற்றல் நீராற்றல் அல்லது இதர எந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றல் பிரயோகிக்கப் பட முன்மொழிவாகும் தொழிற்சாலை பணிமனை அல்லது பணியிடம் எதனையும் நிர்மானிக்க அல்லது ஸ்தாபிக்க அல்லது முன்சொன்ன வாறு மின்னாற்றலால் இயக்கப்படும் இயந்திர தொகுதியை நிறுவலுக்கு கிராமங்களில் பஞ்சாயத்து ஒன்றிய குழுமத்தின் அனுமதி யின்றி எவரும் அனுமதிக்கப்படவில்லை. சரத்து பி கீழ் அது முன்சொன்னவாறு என கூறுகையில் அது சரத்து ஏஇல் உள்ளவாறு நீராவியாற்றல் நீராற்றல் எந்திர ஆற்றல் அல்லது மின்னாற்றல் ஆகிய ஆற்றல்களாகும். ஆகையால் தொழிற்சாலை பணிமனை நபரிடம் எதனையும் நிர்மானிக்க ஒருவர் முன்மொழிந்து நீராவி ஆற்றல் நீராற்றல் அல்லது இதர எந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றல் பிரயோகிக்க முன்மொழியும் போதும் நீராவி ஆற்றல் நீராற்றல் அல்லது இதர எந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றல் எதனாலும் இயக்கப் படும் இயந்திர தகுதி அல்லது உற்பத்தி நிறுவனத்தை நிறுவினால் மட்டுமே பஞ்சாயத் ஒன்றிய குழும அனுமதி தேவையாகிறது என்பதில் இந்த பிரிவு தெளிவாக உள்ளது.

17.ஆகையால் தநாவா–இன் மின்தொகுப்புக்கு கடத்தப்படவிருக்கும் மின்னாற்றலை காற்றாலை தயாரித்தாலும் அது உற்பத்தி யாக்கல் என அழைக்கப்படவியன்றாலும் அது இன்னும் சட்டப் பிரிவு 160இக்கு உட்பட்ட தாகுமா. இல்லை என்பது விடையாகிறது. ஏனெனில் தொழிற்சாலைக்கு அல்லது பணிமனைக்கு அல்லது பணியிடத்துக்கு அது பிரிவு 16 கீழ் பொருந்திடலுக்கு நீராவியாற்றல் நீராற்றல் அல்லது இதர எந்திர ஆற்றல் அல்லது மின்னாற்றல் பிரயோகிக்கப்பட வேண்டியதாகும் காற்றாலை இதை செய்திட வில்லை. இது பொருந்தவில்லை என நாங்கள் கூறலுக்கு முப்பிடாபிட்டதின் வழக்கு பகுதி 18இல் நாங்கள் நம்புகை வைக்கிறோம்.

18. ஆகையால் ஒரு காற்றாலைகளில் தகடுகளின் காற்றிதழ்கள் பிரிவு மூலமாக காற்று கடந்து காற்றதழில் வளியியக்கம் காரணத்தால் உற்பத்தியாகும் எழுச்சி ஒரு முறுக்குவிசை உருவாகி அது அடுத்து மின்னாக்கியில் மின்னாற்றலாக உருமாற்றமாகிறது. எளிய சொற்களில் விசை யாழியின் எந்திர ஆற்றலை காற்றாலை மாற்றி அது அடுத்து மின்சாரமாக மாற்றப்படுகிறது. விசையாழியின் சக்தியை காற்று சக்தியாக, ஆக்கிடலுக்கு அல்லது மின்னாற்றலாக மாற்றிடலுக்கு அது நீராவியை அல்லது நீராற்றலை அல்லது எந்திர கதியை அல்லது மின்சக்தியை பயன்படுத்தவில்லை. மின்னாக்கியில் மின்னாற்றலாக அனுப்பப்படும் முறுக்குவிசையில் கூட இந்த ஆற்றல்களில் எதையும் அது பயன்படுத்தவில்லை.

19. சட்டப் பிரிவு 160இக்கு பொருள்விளக்கும் தருகையில் அந்தப் பிரிவு கீழ் பஞ்சாயத் ஒன்றியத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதற்குக் காரணம், பஞ்சாயத்தின் பேணிப்பில் இருந்த

சொத்துக்கள் மீது மட்டுமே நீராவியாற்றல் நிரராற்றல் எந்திர ஆற்றல் மின்னாசற்றட பயன்பாடு இருக்கவியம் என்பதாகும் என்பதை நாங்கள் சுட்ட வேண்டியுள்ளது. உதாரணம் அளிக்க, தொழிசாலை நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் மின் வடகம்பிகள் பஞ்சாயத் ஆள்வை கொண்டிருக்கும் நிலங்கள் மேலே செல்லும்.

20. பகுதியில் நீராற்றல் பயன்பாடு ஒத்த தாகும். மேலுள்ளது விடுத்து, தொழிற் சாலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை உபத்தி முறைமை பற்றி நீதிபதி அழுத்தம் அளித்தி ருந்தார் என்பதை மேல்சொன்ன முப்பிட்டாத்தி தீர்ப்புரையை வாசித்தல் காட்டும் என்பதை நாங்கள் சுட்ட வேண்டியுள்ளது. சட்டப் பிரிவு 160(ஏ) கீழ் அழுத்தம் பிரயொகி என்பது மீதாகும் என நாங்கள் கருதுகிறோம்.

21.தொழிற்சாலை சட்டத்தின் அர்த்தத்துக்குள் தொழிற்சாலை அதன் உற்பத்தி செயல்முறை யில் பிரிவு 160(ஏ)இல் சொல்லப்படும் வகை களை பிரயோகிக்க தேவையில்லை. விளை பொருளுடன் வரும் நோக்கத்துக்காக பிற வகையான ஆற்றலை பயன்படுத்தும் தொழிற் சாலை எதுவும் அறியப்படவில்லை. உதாரணம் தருவதானால், எண்ணெய்ப் புண்ணாக்கு உருவாக்கலுக்காக மரகுழவியை சுழற்றல் நோக்கத்துக்காக வண்டிமாடுகளை ஒரு சோப்பு தயாரிப்பாளர் பயன்படுத்தியிருந்தார்.

22. பிரிவில் உட்டபட வேண்டிய நீராவி யாற்றலை நீராற்றலை அல்லது இதர எந்திர ஆற்றலை அல்லது மின்னாற்றலை பிரயோகிக்கும் தொழிற்சாலை பணிமனை பணியிடம் பற்றி பிரிவு 160(ஏ) சிந்திக்கிறது. மும்சொன்ன ஆற்றல் மூலங்களை தொழிற் சாலை பணிசுமை அல்லது பணியிடம் பயன்படுத்தல் நேர்வில் அப்போது அது பிரிவு 160 கீழ் அடங்காது விளைவாக பஞ்சாயத் ஒன்றிய குழுமத்திலிருந்து அனுமதி கோரத் தேவையில்லை.

23. முன்சொன்னவாறு நீராவி ஆற்றலால் நீராற்றலால் அல்லது எந்திர ஆற்றலால் அல்லது மின்னாற்றலால் இயக்கப்படும் இயந்திர தொகுதி அல்லது உற்பத்தி தொழிலகம் நிறுவப்படும்போது மட்டுமே அனுமதி அவசிய மாகும் என பிரிவு 160இன் சரத்து பிஆல் தெளிவுறுத்தப்படுகிறது.

24 காற்றாலை எவ்வாறு இயங்குகிறது என்பதை காண்கையில், அது சட்டப் பிரிவு 160 இன் சரத்து பிஇல் சொல்லப்படும் ஆற்றல்கள் எதனாலும் இயக்கப்படுவதாக இயந்திர தொகுதி அல்லது உற்பத்தி நிலையம் அழைக்கப்பட வியலாது மேலன்ன, முப்பிடாத்தி வழக்கில் சொல்லப்பட்டவாறு காற்றாலையின் பகுதிகளை நாங்கள் காணாபோனால் உருவான மின்சாரத்தை மின்தொகுப்புக்கு அனுப்பிட மட்டுமே செயலாற்றும் மற்றும் மின்சார அமைப்பு பயன்படுத்துப் படுகிறது என தெளிவாகும். ஆகையால் காற்று ஸ்கத்தை உருவாக்கும் அலுவலை மட்டும் காற்றாலை செய்கிறது. அது நீராவி ஆற்றாலை நீராற்றலை அல்லது இதர் மெக் ஆற்றலை அல்லது மின் ஆற்றலை பயன்படுத்தவில்லை. ஆகையால் சட்டப் பிரிவு பொருந்துகையாகாது. எனவே முப்பிடாத்தி வழக்கில் தலைமை நீதிபதி யால் வைக்கப்பட்ட கருத்துடன் நாங்கள் இணங்கவில்லை.

25. வீடு வரி மற்றும் தொழில் வரி கோரிக்கை களுக்கு திரும்புகையில் சட்டப் பிரிவு 172ஐ நாங்கள் குறிப்பாடில் கொள்ள வேண்டியதாகும். அது பின்வருமாறு வாசிப்பாகிறது.

வீட்டு வரி: (1) உட்பிரிவு 3இன் வகையங் களுக்கு உட்பட்டு கிராம பஞ்சாயத் பின்பற்றக் கூடியவாறு, இந்த சட்டத்தின் துவக்கலுக்கு உடனடியாக முன்கூட்டியதாக சமபந்தப்பட்ட உள்ளாட்சி பகுதியில் விதிக்கப்பட்ட அத்தகைய வரி விதிப்பான அடிப்படையில் அல்லது அட்டவணை 1இல் குறிப்பிடப்பட்ட விகிதங் களில் பிரிக்கப்பட்ட பீட பரப்பு அடிப்படையில் ஒவ்வொரு கிராமத்தில் அனைத்து வீடுகளுக்கும் வீட்டு வரி விதிக்கப்பட வேண்டும்.

(1) வீட்டு மனையிடம் பொறுத்து அரசுக்கு ஏதும் உரித்தமாக நில தீர்வையின் முன்கூட்டிய

செலுத்துகைக்கு உட்பட்டு வீட்டு வரி வீட்டின் மீதும் அதனில் அல்லது மீது காணப்பட்டு அத்தகைய வரி செலுத்தும் நபருக்கு சொந்த மான அசையாச் சொத்து மீதும் முதலாவது பொறுப்படைவாக இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு அரையாண்டு ஆண்டு வரி விதிக்கப்பட வேண்டுமா என்பதை பஞ்சாயத் கிர்ரமம் அல்லது பஞ்சாயத் கிராமங்களில் எதுவகை பிரிவிலும் தொடர்புற்ற அறிவிக்கை மூலமாக அரசு செய்திடல் வேண்டும். அவ்வாறு செய்திடலில் அது கீழ் வரும் விஷயங்களை கௌத்தில் கொள்ள வேண்டும்.

ஏ.பிரிவு 4 கீழ் உள்ளாட்சி பதிகளை வகை பிரித்தல்

பி. கிராம பஞ்சாயத்தின் ஆண்டு வரவுகள்

சி. பஞ்சாயத் கிராம மக்கள்தொகை மற்றும் அத்தகைய மக்கள்தொகையில் மேலோங்கும் தொழில்

டி. நிர்ணயிக்கப்படக் கூடும் இதர விஷயங்கள்

4. கீழ் வருவனவற்றுக்கு வகைசெய்து கொண்டு அரசு விதிகளை படைக்கலாம்.

ஏ. வீட்டு வரி செலுத்தலுக்கும் உரிமை மாற்றம் பற்றி அறிவிப்புகள் தருதலுக்கும் பொறுப்பாகும் நபர்கள்

பி. வரி குறைப்பு மற்றும் பிற வழங்குகை

சி. சந்தப்பங்களுக்கும்ம் நிபந்தனகளுக்கும் உட்பட்டு அரையாண்டுக்கு அல்லது ஆண்டுக்கு விதிக்கப்பட்ட அல்லது மறு நிர்மானிப்பான அல்லது இடிக்கப்பட்ட அல்லது உட்படுத்தப்பட்ட அல்லது விலக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு வரி முழு பக்ஹுதி அல்லது பகுதி எதனுக்கும் செலுத்தலுக்கும் பொறுப்பேற்ற லுக்குஅதன் சொத்துரிமையர் சார்பாக வீடு சுவாதினத்திலுள்ளவர் வீட்டு வரியை செலுத்தினால் அத்தகைய சுவாதீனம் கொண்டவர் உரிமை யாளரிடமிருந்து வசூலிக்க பாத்தியதை கொண்டி ருத்தல் வேண்டும். அவர் அதை அப்போதைய வாடகையிலிருந்து அல்லது அதன் பின்னர் சொத்துரிமையருக்கு அவராலான உரித்தத்தி லிருந்து பிடித்துக் கொள்ளலாம்.

26. வீடு என்பர் சட்டப் பிரிவு 2(14) கீழ் வரையாகிறது வருமாறு

வீடு என்பது வசிப்பிடமாக அல்லது பிறவாக மனித சுவாதீனங்களுக்கு தகுதியுற்றதாகவும் பொது வழியிலிருந்து தனியான நுழைவை கொண்டிருந்தும் கூட பணிமனை அல்லது சரக்குக்கிடங்கு அல்லது வண்டிக்கொட்டகை அல்லது பேருந்து நிறுத்துமிடமாக அல்லது பேருந்து நிலையமாக பயனாகும் கட்டடம் ஏதும் என அர்த்தமளிக்கிறது.

27. மனித சுவாதீனத்துக்கு உகந்த கட்டடம் வீடா என அர்த்தமாகும். ஆகையால் நிறுவப்பட்ட காற்றாலையை பராமரிக்க அல்லது இயக்க லுக்கு எவரையும் மனுதாரர் பணியமர்த்தி யிருந்ததில்லை எனவும் ஆகையால் அது வீடாக பாவிக்கப்பட முடியாது எனவும் ஆகும் திரு அரிருத் கிருஷ்ணனின் பணிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. வீட்டு வரி நோக்கத்தில் வீடாக இருத்தலுக்கு எவரையும் பணியமர்த்திட அவசியம் எழவில்லை. அது மனித சுவாதீனத்துக்கு உகந்த கட்டடத்தை மட்டுமே அவசியப்படுத்து கிறது. சட்டப் பிரிவு 2(1–ஏ) கீழ் வகை செய்யப் படும் கட்டடம் வீடையும் புறவீடையும் கூடாரத்தை யும் கழிவிடத்தையும் கொட்டகையையும் குடிசையையும் 2.5 மீட்டர் உயரத்துக்கு மிகாது சுவர் விடுத்து) சுவரையும் கல்கட்டடம் செங்கல் சேறு உலோகம் எதுவகை வேறு பொருட்களால் ஆன வேறேது கட்டமைப்பையும் அது உட்படுத்துகிறது. எனவே ஏற்றவாறு காற்றாலை இயக்கத்தை ஒருவர் கண்காணிக்கக் கூடிய சுவாதீனத்துக்கு சிறு பரப்பு நிர்மானிக்கப் பட்டுள்ளதால் வீட்டு வரி செலுத்துவதாகும் என வருவாய் துறையுடன் நாங்கள் இணங்கு கிறோம். பொருத்தமான விதிகள் படி வீட்டு வரி கொட்டகைக்கு மட்டுமே வரம்பிடப்படும் என நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

28. அது தொழில் வரி கோரிக்கை விலக்குகிறது. அந்த கூறுக்குள் நாங்கள் செல்லு

முன் இயற்றப்பட்ட அறிவிப்பு செல்லுபடியாகும் அறிவிப்பாகுமா என்பதை நாங்கள் ஆராய லாம். 18.2.2013 தேதிய குறையுறு விவரக் குறிப்பு கிராம பஞ்சாயத்தால் இயற்றலாகி யிருக்கிறது. பஞ்சாயத்தால் அது இயற்றப் படுகிறது பஞ்சாயத் ஒன்றிய குழுமத்தால் அல்ல என்பதை அரசு வழக்குரைஞர் திரு.பி.திலக் குமார் ஒத்துக் கொள்கிறார். ஆகையால் இந்த நீதிமன்றத்தால் கங்கைகொண்டான் 1 மற்றும் 2இல் தீர்ப்பானவாறு சட்டத்தில் அறிவிப்பு பிழை யானதாகும். விளைவாக அறிவிப்பு ரத்தாகி நீக்கறவாகிறது. அறிவிப்பு ரத்தாகி நீக்கறவாகிற தால் தொழில் வரி பொருந்துகைக்குள் நாங்கள் செல்லவில்லை. நிச்சயமாக, சட்டப் பிரிவு 172 கீழ் வீடு வரி கோரிக்கையாக அறிவிப்பு இயற்றப் படுவதால் அது செல்லுபடியாகும் அறிவிப்பாகும் என் நாங்கள் தெளிவாக்குகிறோம். ஏனெனில் பஞ்சாயத் கிராமத்தில் அனைத்து வீடுகளுக்கும் வீட்டு வரி விதிக்க கிராம பஞ்சாயத்து உரிமை கொண்டுள்ளதாகும்.

29.மேலுள்ள் கண்டறிதல் பரிசீலனையில் செலுத்தத்தக்கதாகும் வீட்டு வரியை கிராம பஞ்சாயத் மறுகணக்கிட்டு சட்டத்துக்கு இசைவாக அறிவிப்பு இயற்றலாம்.

30. கணக்கிடல் பற்றிய எதிர்ப்புகளுக்கு உடபட்டு அத்தகைய புதிய அறிவிப்பு இயற்றப் படுமானால் நான்கு வாரக் காலத்துக்குள் தொகைகள் செலுத்தப்படும் என திரு.அனிருத் கிருஷ்ணன் கூறுகிறார். சொன்ன கூற்று இந்த நீதிமன்றத்தில் பொறுப்பேற்பாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

31.மேலுள்ள தீர்ப்பு விதிமுறைக்கு ஏற்ப இந்த நீதிப்பேராணை மனு தீர்வாக்கப்படுகிறது. செலவுத் தொகை பற்றிய உத்தரவு இராது. விளைவாக தொடர்புறு பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

**மொழியாக்கம்:பா.ஞானசேகரன்**

## நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்ற 8.82 லட்சம் மனுக்கள் நிலுவை: உச்சநீதிமன்றம் அதிருப்தி

நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் 8.82 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் இருப்பதாக உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

புது டெல்லி : உரிமையியல் சச்சரவுகளில் நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றக் கோரி, நாட்டில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் 8.82 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் இருப்பதாக உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

உரிமையியல் வழக்குகளில் தமக்கு சாதகமாக நீதிமன்ற உத்தரவு பெற்றவர்கள், அந்த உத்தரவை நிறைவேற்றக் கோரி தாக்கல் செய்யும் மனுக்கள் மீது, அவை தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து 6 மாதங்களுக்கு முடிவு எடுக்குமாறு, தமது அதிகார வரம்புக்குட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும் என்று அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கு கடந்த மார்ச் 6–ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு இணங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாகலா, பங்கஜ் மித்தல் ஆகியோர் அடங்கிய அமர்வு அண்மையில் ஆராய்ந்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது, உரிமையியல் சச்சரவுகளில் நீதிமன்ற உத்தரவு களை நிறைவேற்றக் கோரி, நாட்டில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் 8.82 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் உள்ளன. இது மிகுந்த ஏமாற்றம் அளிப்பதுடன் அபாயரமாகவும் உள்ளது.

ஓர் உத்தரவை பிறப்பித்த பின்னர், அதை நிறைவேற்ற பல ஆண்டுகளாகும் என்றால், அந்த உத்தரவால் எந்த அர்த்தமும் இருக்காது. அத்துடன் இது நீதி பரிபாலனத்தை கிட்டத்தட்ட ஏளனம் செய்வதற்கு நிகராகும்.

எனவே நிலுவையில் உள்ள அந்த மனுக்கள் மீதான விசாரணையை திறம்படவும், விரைந்தும் நிறைவு செய்ய ஏதேனும் நடைமுறையை உருவாக்கி, மாவட்ட நீதித்துறைக்கு அனைத்து உயர்நீதிமன்றங்களும் வழிகாட்ட வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறோம். மேலும் நிலுவையில் உள்ள அந்த மனுக்களின் நிலவரம் குறித்த முழுமையான விவரங்களை, அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது.

**நன்றி: தினமணி 22.10.2025**

# பணியின்போது ஏற்படும் ஊனமும் பாதுகாப்பும்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை: நீதிபதி ஆர். விஜயகுமார்
நீ.பே.ம. (MD) எண் 26560/2024 மற்றும்
நீ.பே.ப.ம. (MD) எண்கள் 22521, 22523, 22525, 23725/2024
7.1.2025
2025 (4) CTC 512

கணேசன் ...மனுதாரர்

–எதிர்–

கமாண்டன்ட், தமிழ்நாடு சிறப்பு காவல்துறை,
11ஆவது பட்டாலியன், மோட்டாமலை கேம்ப்,
ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் ...எதிர்வழக்கீட்டாளர்

**ஆர்.கருணாநிதி**
மனுதாரரின் வழக்குரைஞர்

**டி. சஷிகுமார்**
எதிர்வழக்கீட்டாளரது வழக்குரைஞர்

நீ.பே.ம. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.ப மனுக்கள் முடிக்கப்பட்டன.

**கோரிக்கை:** இந்திய அரசமைப்பின் 226ஆம் உறுப்பின்படி நீதிப்பேராணை மனு முன்னிடப் பட்டது. அதில் இந்த நீதிமன்றத்தை பதிவேடு களை அனுப்பிடுக என்னும் வலியுறுத்துப் பேராணை பிறப்பிக்க கோரப்பட்டது. எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை தொடர்பான பதிவேடுகளை கோரிப் பெறு எதிர்வழக்கீட்டாளரின் கோப்பில் உள்ள 31.10.2024 தேதியிட்ட ஆணையையும் அழிக்குமாறும், அவை சட்ட விரோதமானவை என்று கூறவும் அதன் விளைவாக எதிர்வழக்கீட்டாளரை மனுதாரரை நாயக் பதவியில் தொடர அனுமதிக்கவும் இது மாற்றுப் பணியாக அளிக்குமாறும் அவளது சம்பள விகிதம் குறையாது பார்த்துக் கொள்ளு மாறும் அவளது பிற நலப் பயன்கள் பாதுகாக்கப்பட்டு சம்பளம் உறுதி செய்யப்பட்டு பணியில் தொடரவும் 2016 ஆட்களின் உரிமைகள் திறன் அற்றவர் சட்டத்தின் 20(4) பிரிவின் வரையுரைகளின்படி பதவியில் தொடர லாம். நீதிமன்றத்தினால் வனையக் கூடியவாறு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்பட ஆணை வேண்டப்பட்டது.

## தீர்ப்புரை

1. தற்போதைய நீதிப்பேராணை மனு ஒரு நாயக்கினால் முன்னிடப்பட்டது. அவர் தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் 11ஆவது படா வியனில் மொட்டமானவை கேம்ப்பில் ராஜ பாளையத்தில் விருதுநகர் மாவட்டத்தில் பணி புரிந்து வருகிறார். 31.10.2024 எதிர் வழக்கீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து அதாவது அவரை மருத்துவ அறிக்கை படி தகுதியற்றவர் என்று விளம்புகை செய்யப் பட்டுள்ளது. எதிர்த்து, அவர் அவரது பணி யிலிருந்து விடுவிக்கப்பட்டது எதிர்க்கப்படுகிறது.

2. பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்ததில் அறியப்படுவது நீதிப்பேராணை மனுதாரர் 1.4.2010 அன்று காவல் துறையில் அதிகாரி யாக 13ஆவது படாவியலில் சென்னை பூந்தமல்லியில் அமர்த்தப்பட்டார். ஏப்ரல் 2011இல் தேர்தல் பணியில் அவர் இருந்த போது, அவர் ஒரு விபத்துக்குள்ளானார். அதில் அவர், தலையிலும் கண்களிலும் காயம் ஏற்பட்டது. வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்ற எண் 1961, 2011 இது பி–1 திருவள்ளுவர் டவுன் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

3. நீதிப்பேராணை மனுதாரர், அரசு மருத்துவமனை திருவள்ளூரில் முதலுதவி பெற்றார். பின்னர் சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு மேலுமான சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இவருக்கு அதிக ரத்த இழப்பு

ஏற்பட்டு பின்னர் நுரையீரலுக்கு போதிய ரத்தம் செல்ல ஏற்பாடாகி சிகிச்சை முடிக்கப்பட்டது. நீதிப்பேராணை மனுதாரர் 11.5.2011 அன்று மனுதாரர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப் பட்டார். விபத்துக்குப் பின்னர், நீதிப்பேராணை மனுதாரர், கண்பார்வை சரியற்றுப் போனது. அவர் காவல் அலுவலராக முறையான பணியை செய்ய இயலாதவரானார். இவருக்கு எளிதான வேலை அளிக்கப்பட்டது. அதாவது அவரது உடல்நிலை கருதி நீதிப்பேராணை மனுதாரர் இவ்வாறான எளிய பணியையே 10 ஆண்டு களாக செய்து வந்தார். அவர் நாயக்க 18.3.2014 அன்று பதவி உயர்வு பெற்றார்.

4. மனுதாரரை மருத்துவ வாரியத்திற்கு சுட்டு அனுப்பினார். அது விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு இணைக்கப்பட்டது மற்றும் அதில் மனுதாரருக்கு 100 சதவீதம் பார்வை பிரச்சினை உள்ளதாக கூறப்பட்டது. மனுதாரரை மற்றொரு மருத்துவ வாரியத்திற்கு 2.5.2024இல் சுட்டி அனுப்பப்பட்டது. இதில் சான்றளிக்கப் பட்டதாவது நீதிப்பேராணை மனுதாரருக்க முழுவதுமான பார்வை குறைபாடு உள்ளதாக கூறப்பட்டது. சொல்லப்பட்ட சான்றிதழை ஒட்டி எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட இந்த ஆணை 31.10.2024 தகுதியற்றவர் என்று விளம்பப் பட்டது; மற்றும் அவர் அவரது பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார். மேலும் நீதிப்பேராணை மனுதாரர் அவர் வசித்த தங்குமிடமான அரசு ஊழியர் தங்குமிடத்தை காலி செய்யவும் சாவிகளை அளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார். சொல்லப்பட்ட ஆணை எதிர்க்கப்பட்டது மற்றும் இந்த நீதிப்பேராணை மனு முன்னிடப்பட்டது.

5. நீதிப்பேராணை மனுதாரருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞருக்கு இணைங்க, நீதிப் பேராணை மனுதாரர் கண்களில் கடும் காயம் ஏற்பட்டுள்ளது. அதாவது தேர்தல் பணியின் போது அதுவன்றி, நீதிப்பேராணை மனுதாரர் 2016 உடல் ஊனமுற்றவர்களின் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 20(4)இன்படி நலப்பயன் களைப் பெற உரிமையுடையவர் ஆவார். அதாவது பணியில் உள்ளபோது, நீதிப் பேராணை மனுதாரருக்கு ஏதேனும் உடல் ஊனம் ஏற்பட்டிருந்தால் அவரைப் பணி யிலிருந்து நீக்க முடியாது மற்றும் அவருக்கு மாறுப் பணியளித்து, சம்பளப் பாதுகாப்பும் அளிக்க வேண்டும். அதாவது அவர் ஓய்வு பெறும் வயதடையும் வரையில்.

6. மாறாக, கூடுதல் அரசு வழக்குரைஞர் எதிர் வழக்கீட்டாளருக்காக முன்னிலையாகிறவர்கள் இந்த எதிர்வாதத்தை ஆதாரமாகக் கொண்டு அதாவது 2016 உடல் ஊனமுற்றவர்கள் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 20(4)இன்படியான நலப் பயன்களைப் பெற உரிமையுடையவராகார் என்பது அதாவது அவர் சீருடைப் பணியாளர் உறுப்பின் என் பதவியில் என்றும், அவருக்கு மாற்று பணி எதற்கும் வகை செய்ய முடியாது. காவல் துறை நீங்கலாக என்பது, அவருக் கிணங்க, நீதிப்பேராணை மனுதாரர், காவல் பணியில் அமர்த்தப்பட்டவர். எனவே, அவருக்கு மாற்று இலேசான பணி எதுவும் வழங்கப்பட முடியாது என்பது.

7. எதிர்வழக்கீட்டாளருக்காக, முன்னிலை யாகிற கூடுதல் அரசு வழக்குரைஞர் மேலும் வாதிட்டதாவது நீதிப்பேராணை மனுதாரர் 100 பார்வை இழப்பை இரண்டு வகை செய்ய துறையினரால் இயலாத நிலை உள்ளது. எனவே, கோரப்பட்டதாவது எதிர்வழக்கீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை செயற்படுத்த கோரப்பட்டது.

8. நான் இருதரப்பு பணிந்தனுப்புதல்களை யும் கவனமாக கருதுகை செய்துள்ளேன் மற்றும் பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்து உள்ளேன்.

9. நீதிப்பேராணை மனுதாரர் எனது இரு கண்களிலும் பார்வை இழந்துள்ளார். அதாவது பணியில் இருந்தபோது என்பதில் எந்தப் பூசலும் இல்லை.

10. 2016 ஊனமுற்றவர்கள் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 20 பின்வருமாறு.

“20 பணியமர்த்தப்படுதலில் வேறுபாடுகள் இல்லாநிலை; (1) எந்த அரசுப் பணியிலும், ஊனமுற்றவருக்கு எதிராக பணியமர்த்துதல் தொடர்பாக. எந்த பொருட்பாட்டிலும் வேறுபாடு செய்தல் ஆகாது.

**வரம்புரையாக**: உரிய அரசானது, அந்த நிறுவனத்தின் மேற்கொள்ளப்படும் பணியின் தன்மை தொடர்பாக, அறிவிக்கை வாயிலாகவும், ஏதேனுமிருப்பின் அத்தகைய வரையுறை களுக்கு உட்பட்டும் இந்தப் பிரிவின் வகை முறைகள் நிறுவனம் எதற்கும் விலக்களிக்கும்.

(2) ஒவ்வொரு அரசு நிறுவனமும், நியாய மான வசதியை செய்தல் வேண்டும் மற்றும் உரிய தடையற்ற நியாயமான வசதியை செய்தல் வேண்டும் மற்றும் உரிய தடையற்ற நியாய மான சூழ்நிலையை ஊனமுற்ற பணியாளர் களுக்கு அளித்தல் வேண்டும்.

(3) ஊனத்தைக் காரணமாகக் காட்டி எவருக்கும் பதவி உயர்வு அளிக்காதிருத்தல் ஆகாது.

(4) எந்த அரசு நிறுவனமும், ஒருவர் அல்லது ஒருத்திக்கு பணியின்போது உடல் ஊனமுறும்போது, அவர்/அவளை பதவிபடி நிலையில் இருந்து இறக்குதல் கூடாது.

வரம்புரையாக: ஒருவருக்கு உடல் ஊனம் ஏற்பட்ட காரணத்தால், அந்தப் பணியில் அவர் பணியாற்ற தகுதியற்றவராக, ஆக்கப்படும் போது அவரை அதே சம்பளவிகிதம் உடைய வேறு பதவிக்கு மாற்றுதல் வேண்டும்.

அவருக்கு பணி நலப் பயன்களை அளித்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக பணியாளரை வேறு பதவி எதிலும் அமர்த்தி சரி செய்ய முடியாதபோது, அவரை ஒரு வைத்திருக்கலாம். அதாவது ஒரு தகுதி வாய்ந்த பதவி கிடைக்கத் தக்கதாகும் வகையில் அல்லது அவர் ஓய்வூதிய வயதை எட்டும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை

(1) உரிய அரசானது, கொள்கைகளை வனையலாம். அதாவது ஊனமுற்ற பணியாளர் களை இடமாற்றம் செய்யவும் பணியமர்த்தவும்

11. 2016 ஊனமுற்றவர்கள் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 20(1)இன் வரம்புரை உரிய அரசாங்கத்திற்கு அறிவிக்கை மூலமாக சொல்லப் பட்ட சட்டத்தின் 20ஆம் பிரிவின் வரம்புரைகள் பொருந்துவதிலிருந்து விலக்களிக்கும் அதிகாரம் உள்ளது. எனினும் அத்தகைய அறிவிக்கை இந்த நீதிமன்றத்தின் முன்னிலைப்பட வேண்டும். அதில் காவல்துறையை இந்த 20ஆம் பிரிவின் செயற்பாட்டிற்கு விலக்களிக்க. எனவே, இதில் சீருடைப் பணியாளர்களுக்கு இந்தப் பிரிவு பொருந்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

12. 2016 உடல் ஊனமுற்றவர்களின் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 20(4)இன்படி, அரசு நிறுவனம், ஒரு பணியாளரின் பணியை விட்டு விட முடியாது. அதாவது பணியின்போது, உடல் ஊனம் ஏற்பட்டவரை, தற்போதைய வழக்கில், ஏற்கப்பட்டதாவது, நீதிப்பேராணை மனுதாரர் உடல் ஊனத்தை பணியின்போது பெற்றுள்ளார். இதில் நீதிப்பேராணை மனுதாரர் மருத்துவப்படி தகுதியற்றவராகக் கண்டறியப் பட்டபோதிலும் 2016 சட்டத்தின் பிரிவு 20(4)இன் கருத்தில் அவருக்கு வேறு மாற்றுப் பணி சம்பளம் பாதுகாப்புடன் அளிக்கப்பட வேண்டியது.

13.சொல்லப்பட்ட சூழ்நிலைகள் கருத்தில் இந்த எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை தற்போதைய நீதிப்பேராணை மனுவில் தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் எதிர்வழக்கீட்டாளர் 2016 சட்டத்தின் பிரிவு 20(4) வகைமுறை களுக்கு இணங்கி செயற்பட பணிக்கப்படுகிறது மற்றும் நீதிப்பேராணை மனுதாரரை பணியில் மீண்டும் அமர்த்த கோரப்படுகிறது. தொடர்ந்து சம்பள பாதுகாப்புடன் பணியில் தொடரவும் வேறு எளிய பணி மாற்றாக அளிக்கவும் பணிக்கப் படுகிறது. தொடர்ந்து சம்பள பாதுகாப்புடன் பணியில் தொடரவும் வேறு எளிய பணி மாற்றாக பிறப்பிக்க அதாவது இந்த ஆணைப்படி பெற்ற திலிருந்து.

14. மேற்சொல்லப்பட்ட கண்டறிதல்களுடன் இந்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்படு கிறது. செலவுத் தொகையின்றி. இதன் விளைவாக பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# சுதந்திரமா அல்லது படிநிலை அதிகாரமா: உயர்நீதிமன்றங்களில் நேரடியாக தாக்கலாகும் முன் பிணை மனுக்கள் மீதான விவாதம்

**- எம்.ஏ.ரஷீத்**

உயர்நீதிமன்றத்தை நேரடியாக அணுகி தாக்கல் செய்யப்படும் முன் பிணை மனுக்களை விசாரித்ததற்காக கேரள உயர்நீதிமன்றத்தை உச்ச நீதிமன்றம் அண்மையில் விமர்சித்துள்ளது. முதலில் அமர்வு நீதிமன்றத்தை அணுகாமல் நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுகுவது குறித்து உச்ச நீதிமன்றம் தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் (BNSS) பிரிவு 482-ன் கீழ் (முன்னர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438) முன் கைது பிணைக்கான (முன்கூட்டியே கோரும் பிணை) கோரிக்கையை விசாரிக்கும் சமகால அதிகார வரம்பு அமர்வு நீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் வழங்கப்பட்டிருந்தாலும், நீதிமன்றங்களின் படிநிலை அதிகாரம் வேண்டுவது யாதெனில், அத்தகைய நிவாரணத்தை நாடும் எந்தவொரு நபரும் சம்பந்தப்பட்ட அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பை தவிர்த்துவிட்டு நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுக ஊக்குவிக்கப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ கூடாது என்பதாகும்.

பெரும்பாலான மாநிலங்களில், எதிர்பார்க்கப்படும் கைது நடவடிக்கைக்கு எதிராக முன் பிணை நிவாரணத்தைப் பெற முதலில் அமர்வு நீதிமன்றத்தை அணுக வேண்டும் மற்றும் அத்தகைய நிவாரணம் மறுக்கப்பட்டால் மட்டுமே, மனுதாரர் உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்ற தொடர்ச்சியான நடைமுறை உள்ளது என்றும் இந்த அமர்வு கூறியது. இது நியாயமான விதிவிலக்குகளுக்கு உட்பட்டது, மேலும் உயர்நீதிமன்றம், குறிப்பிட்ட காரணங்களுக்காக, சிறப்பு/அசாதாரண சூழ்நிலைகளில் நேரடியாக முன் கைது பிணைக்கான மனுவை விசாரிக்கலாம்.

இந்த வழக்கில் கேரள உயர் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு உச்ச நீதிமன்ற அமர்வு நோட்டீஸ் அனுப்பியுள்ளதுடன், மூத்த வழக்கறிஞர் சித்தார்த் லூத்ராவை நீதிமன்றத்திற்கு உதவுபவராக நியமித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, குருபக்ஷ் சிங் சிப்பியா மற்றும் சிலர் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு (1980 2 SCC 565) என்ற வழக்கில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438(1) ஆனது இந்திய அரசியலமைப்பின் சரத்து 21-ன் பின்னணியில் விளக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது. ஒரு நபரின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட நடைமுறையானது, அரசியலமைப்பின் சரத்து 21-ன் சவாலை எதிர்கொள்ள நியாயமானதாகவும், சரியானதாகவும், மற்றும் உரிய காரணத்துடன் இருக்க வேண்டும்.

குரு பக்ஷ் சிங் சிப்பியா [மேற்கூறிய] வழக்கில், சட்டமன்றத்தால் கருதப்படாத கட்டுப்பாடுகளை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438-ன் நோக்கம் மற்றும் வரம்பெல்லை என்ற பெயரில் நீதிமன்றங்கள் விதிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சட்டத்தின் விதியை, அதை விளக்குவதாகக் கூறி நீதிமன்றம் மீண்டும் எழுத முடியாது என்றும் தெரிவித்தது.

''திரு. தார்குண்டே அவர்களின் சமர்ப்பிப்பில் ஒரு பெரிய அளவு பொருள் இருப்பதை நாங்கள் காண்கிறோம். அதாவது, பிணை மறுப்பு என்பது தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிப்பதற்குச் சமம் என்பதால், பிரிவு 438-ன் நோக்கத்தில் குறிப்பாக, அத்தகைய கட்டுப்பாடுகள் எதுவும் அந்தப் பிரிவின் விதிகளில் சட்டமன்றத்தால் விதிக்கப்படாத போது, தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு

எதிராக நீதிமன்றம் செயலாற்ற வேண்டும். பிரிவு 438 என்பது ஒரு நடைமுறை விதியாகும். இது தனிநபரின் தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புடையது. பிணைக் கோரும் தேதியில் அவர் எந்தக் குற்றத்திற்காக பிணை கோருகிறாரோ, அதில் அவர் தண்டிக்கப்படாததால், அவருக்கு நிரபராதி என்ற அனுமானத்தின் பலனைப் பெற உரிமை உண்டு. பிரிவு 438–ல் காணப்படாத கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை அதிக அளவில் சேர்ப்பதென்பது, அத்தகைய விதிகளின் அரசியலமைப்புச் சட்டத்தின் செல்லுபடித்தன்மையை பாதிக்கக்கூடியதாக மாற்றிவிடும். ஏனெனில், தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமையானது நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்க முடியாது. பிரிவு 438–ல் அடங்கியுள்ள பயன் தரும் விதியைக் காப்பாற்ற வேண்டும். புறக்கணிக்கக் கூடாது. மேனகா காந்தி வழக்கின் [மேனகா காந்தி –எ– இந்திய அரசு, (1978 1 SCC 248] முடிவுக்குப் பிறகு, அரசியலமைப்பின் சரத்து 21–ன் சவாலை எதிர்கொள்ள, ஒரு நபரின் சுதந்திரத்தைப் பறிப்பதற்காகச் சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையானது நியாயமானதாகவும், சரியானதாகவும் மற்றும் உரிய காரணங்களுடன் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் நீடிக்க முடியாது. சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட வடிவத்தில் உள்ள பிரிவு 438, அது நியாயமற்ற அல்லது நேர்மையற்ற நடைமுறையை பரிந்துரைக்கிறது என்ற அடிப்படையில் எந்த விதிவிலக்கிற்கும் ஆட்படவில்லை. அதில் இல்லாத வார்த்தைகளைப் படிப்பதன் மூலம் அதை அரசியலமைப்புச் சவாலுக்கு உட்படுத்துவதைத் நாம் எந்த வகையிலும் தவிர்க்க வேண்டும். [பத்தி–26]

சித்தாராம் சட்லிங்கப்பா மஹேத்ரே –எதிர்– மகாராஷ்டிரா மாநிலம் (2011 (1) SCC 694) என்ற வழக்கில், நீதிபதிகள் தல்வீர் பண்டாரி மற்றும் கே.எஸ். பணிக்கர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் கீழ் முன்கூட்டிய பிணை கோருவதற்கான விதியின் மீதான கட்டுப்பாடு, அரசியலமைப்பின் சரத்து 21–ன் கீழ் வழங்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவரின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது என்று குறிப்பிட்டது.

**உச்ச நீதிமன்ற வழக்குகள்:**

2017 ஆம் ஆண்டில், நீதிபதிகள் ஜே. செல்லமேஸ்வர் மற்றும் அமிதவ ராய் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு எதிராக கௌஹாத்தி உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் சிறப்பு அனுமதி வழங்கியது. அந்த அமர்வு நீதிமன்றத் தீர்ப்பில், பொதுவாக ஒரு நபர்/குற்றம் சாட்டப்பட்டவர் முதலில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் கீழ் ஒரு முன்கூட்டிய பிணை மனுவையோ அல்லது பிரிவு 439–ன் கீழ் ஒரு சாதாரண பிணை மனுவையோ அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும், அதன் பிறகு அவர் உயர்நீதிமன்றத்தை அணுகலாம் என்று கூறப்பட்டது. இருப்பினும், இது மீற முடியாத விதி அல்ல. அசாதாரண சூழ்நிலைகளில் ஒரு நபர்/குற்றம் சாட்டப்பட்டவர் நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுகலாம். உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்ற தீர்ப்பின் செயல்பாட்டிற்கு தடையாணையையும் விதித்தது. இந்த வழக்கு நீதிபதி மனோஜ் மிஸ்ரா தலைமையிலான அமர்வின் முன் நிலுவையில் உள்ளது.

2021 ஆம் ஆண்டில், நீதிபதிகள் வினீத் சரண் மற்றும் பி.ஆர். கவாய் ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு, கானுமூரி ரகுராம கிருஷ்ணம் ராஜு –எதிர்– ஆந்திரப் பிரதேசம் மாநிலம் என்ற வழக்கில் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

''குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 439–ன் கீழ் அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒரே வகையில் உள்ளது. மேல்முறையீட்டாளர் அமர்வு நீதிமன்றத்தை அணுகாமல் உயர் நீதிமன்றத்தை அணுகியதால் மட்டும், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின்

பிணை மனுவை பரிசீலித்திருக்கக் கூடாது என்று அர்த்தமாகாது. இத்தகைய நிலையில், எங்கள் கருத்துப்படி, உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் பிணை மனுவை தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து, அதற்கான முடிவை எடுத்திருக்க வேண்டும்.''

சமீபத்தில் [ஆகஸ்ட் 2025–ல்], நீதிபதிகள் சஞ்சய் குமார் மற்றும் என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு இரு நீதிபதிகள் அமர்வு, அலகாபாத் உயர் நீதிமன்றத்தை விமர்சித்தது. பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023–ன் பிரிவு 482–ன் கீழ் முன்கூட்டிய பிணை வழங்குவது குறித்து, அமர்வு நீதிமன்றத்துடன் சேர்ந்து அது சமகால அதிகார வரம்பைப் பயன்படுத்துகிறது என்ற உண்மையை உயர் நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்று அந்த அமர்வு குறிப்பிட்டது.

''கானுமூரி ரகுராம கிருஷ்ணம் ராஜு –எதிர்– ஆந்திரப் பிரதேச மாநிலம் மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால் –எதிர்– அமலாக்கத் துறை இயக்குனர் ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றத்தின் முடிவுகள் இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியதுடன், உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு முன், ஒரு குற்றம் சாட்டப்பட்டவர், விதிக்கிணங்க என முதலில் அமர்வு நீதிமன்றத்தை அணுக வேண்டிய அவசியமில்லை என்றும் அறிவித்தது.''

இவ்வாறு தீர்ப்பளித்தபோது, அங்கித் பாரதி –எதிர்– உத்தரப் பிரதேசம் மாநில அரசு மற்றும் மற்றொருவர் வழக்கில் அளிக்கப்பட்ட ஐந்து நீதிபதிகள் அமர்வின் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பில் நேரடியாக உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை நாடுவதற்கு சிறப்புச் சூழ்நிலைகள் ஒரு குறிப்பிட்ட வழக்கில் உள்ளனவா என்பதை மதிப்பிடுவது சம்பந்தப்பட்ட நீதிபதியைப் பொறுத்தது என்று கூறியதை  இந்த அமர்வு குறிப்பிட்டு காண்பித்தது. அந்த வழக்கில் உள்ள உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை மனதில் கொண்டு முடிவெடுக்கப்பட வேண்டும். இருப்பினும், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு கோரப்படுவதற்கு முன், சிறப்புச் சூழ்நிலைகள் அவசியமாக இருக்க வேண்டும் மற்றும் அவை நிறுவப்பட வேண்டும் என்றும் தெரிவித்தது.

சுந்தீப் குமார் பஃப்னா –எதிர்– மகாராஷ்டிரா மாநில அரசு (AIR 2014 SC 1745) என்ற வழக்கில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 439–ன் கீழ் அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகிய இரண்டுமே சமகால அதிகாரங்களைக் கொண்டுள்ளதால், முதலில் கீழ் மன்றத்தை அணுகி முடிவைப் பெற வேண்டிய சட்டப்பூர்வ தேவை இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**உயர் நீதிமன்றங்களின் முரண்பட்ட கருத்துகள்:**

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு, அங்கித் பாரதி –எதிர்– உத்தரப் பிரதேசம் மாநிலம் மற்றும் மற்றொருவர் வழக்கில் பின்வருமாறு தீர்ப்பளித்தது: உயர் நீதிமன்றத்தால் நேரடியாக முன்கூட்டிய பிணை மனுவை விசாரிப்பதற்கு ஒரு அவசியத் தேவையாகக் கருதப்படும் சிறப்புச் சூழ்நிலைகள் நிலவுகின்றனவா என்பதை, மனுவை விசாரிக்கும் நீதிபதியின் கருத்திற்கு விட வேண்டும், மேலும் அந்த குறிப்பிட்ட வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஒரு முடிவை அவர் எடுக்க வேண்டும். இருப்பினும், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு கோரப்படுவதற்கு முன், சிறப்புச் சூழ்நிலைகள் கண்டிப்பாக இருக்க வேண்டும் மற்றும் அவ்வாறு நிறுவப்பட வேண்டும்.

இதேபோன்ற கருத்துகள் கர்நாடகா, பஞ்சாப் – ஹரியானா மற்றும் பாட்னா உயர் நீதிமன்றங்கள் உட்பட பல உயர் நீதிமன்றங்களால் தெரிவிக்கப்பட்டன.

டெல்லி உயர் நீதிமன்றம் பங்கஜ் பன்சல் –எதிர்– மாநில அரசு (2023 LiveLaw (Del) 508) என்ற வழக்கில் ஒரு தாராளமயமான கருத்தை எடுத்து பின்வருமாறு தீர்ப்பளித்தது:

‘‘குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438(1)-Iப் படித்துப் பார்க்கும்போது, முன்கூட்டிய பிணை மனுவை விசாரிப்பதில் இரு நீதிமன்றங்களுக்கும் சமகால அதிகார வரம்பை அந்த விதி வழங்குகிறது என்பது தெளிவாகிறது. பிணைக்காக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் கீழ் இந்த நீதிமன்றத்தை நேரடியாக அணுகுவதற்கு எந்தத் தடையும் இல்லை. விண்ணப்பதாரர் உயர் நீதிமன்றத்தையோ அல்லது அமர்வு நீதிமன்றத்தையோ அணுகுவது அவரது தனிப்பட்ட விருப்பம். விண்ணப்பதாரர் முதலில் இந்த நீதிமன்றத்தை அணுகுவதற்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. இரு நீதிமன்றங்களுக்கும் சமகால அதிகார வரம்பு இருப்பதால், விண்ணப்பதாரர் எந்த நீதிமன்றத்தை அணுக விரும்புகிறார் என்பதைப் பொறுத்தது, மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் விதியை குறுகிய முறையில் விளக்குவதன் மூலம் அதைக் கட்டுப்படுத்த முடியாது. பிரிவு 438 என்பது ஒரு நடைமுறை விதியாகும். இது தனிநபரின் தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புடையது. பிணை கோரும் தேதியில் அவர் எந்தக் குற்றத்திற்காக பிணை கோருகிறாரோ, அதில் அவர் தண்டிக்கப்படாததால், அவருக்கு நிரபராதி என்ற அனுமானத்தின் பலனைப் பெற உரிமை உண்டு. பிரிவு 438–ல் காணப்படாத கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை அதிக தாராளமாக இணைப்பது அதன் விதியை அரசியலமைப்புச் சட்டத்தின் செல்லுபடித்தன்மையை பாதிக்கக்கூடியதாக மாற்றும், ஏனெனில் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமையானது நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்க முடியாது. பிரிவு 438–ல் அடங்கியுள்ள பயன் தரும் விதியைக் காப்பாற்ற வேண்டும், புறக்கணிக்கக் கூடாது. முன்கூட்டிய பிணை வழங்கும் அதிகாரம் அசாதாரணமானது மற்றும் விதிவிலக்கான வழக்குகளில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்னர் இருந்த சூழலில் இந்த கருத்துகள் கூறப்பட்டுள்ளன. எனவே, விண்ணப்பதாரர் முதலில் அமர்வு நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும், பிரிவு 438–ன் கீழ் பிணை மனுவை விசாரிக்கும் அதிகார வரம்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது என்பதே இந்தக் நீதிமன்றத்தின் கருத்தாகும்.’’

ஹிமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு மோகன் லால் மற்றும் பிறர் –எதிர்– பிரேம் சந்த் மற்றும் பிறர் (AIR 1980 HP 36) என்ற வழக்கில், விண்ணப்பதாரர் உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு முன் அமர்வு நீதிபதியிடம் விண்ணப்பிக்க கட்டாயப்படுத்த முடியாது என்று தீர்ப்பளித்தது.

முபாரிக் மற்றும் மற்றொருவர் –எதிர்– உத்தரகாண்ட் மாநில அரசு மற்றும் பிறர் (2018) வழக்கில், உத்தரகாண்ட் உயர் நீதிமன்றம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் கீழ் உயர் நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றம் இரண்டும் சமகால அதிகார வரம்பைக் கொண்டுள்ளன என்று தீர்ப்பளித்தது. நீதிமன்றத்தைத் தேர்வு செய்வது குற்றம் சாட்டப்பட்டவரின் விருப்பம், மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438–ன் விதியை குறுகிய முறையில் விளக்குவதன் மூலம் அதைக் கட்டுப்படுத்த முடியாது.

வருண் சந்திர தாக்கூர் –எதிர்– மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் பிறர் [2018 (12)SCC 119] என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் உத்தரகாண்ட் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது. அதில், உயர் நீதிமன்றமும் அமர்வு நீதிமன்றமும் சமகால அதிகார வரம்பைக் கொண்டுள்ளபோது, முன்கூட்டிய பிணைக்காகப் பிரதிவாதி நேரடியாக உயர் நீதிமன்றத்தை அணுகிய செயலைக் குறை கூற முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒய். சந்திரசேகர ராவ் மற்றும் பிறர் –எதிர்– ஒய்.வி. கமலா குமாரி மற்றும் பிறர் என்ற வழக்கில், ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு, முன்கூட்டிய பிணை வழங்க உயர் நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றம் ஆகிய இரண்டிற்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்

பிரிவு 438 அதிகாரத்தை அளிக்கிறது என்று தீர்ப்பளித்தது. முதற்கட்டமாக உயர்நீதிமன்றத்தை அணுகும் உரிமையை மறுப்பது, அரசியலமைப்பின் சரத்து 21-ஐ (Article 21) மீறுவதற்குச் சமமாகும். மேலும், இரு நீதியர் அமர்வு, முதற்கட்டமாக அமர்வு நீதிமன்றத்தில் பிரிவு 438-ன் கீழ் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்வது கட்டாயமில்லை என்றும் தீர்ப்பளித்தது. இரு நீதியர் அமர்வு பின்வருமாறு கூறியது:

'24. இந்தியாவின் அரசியலமைப்பின் சரத்து 21-ன் கீழ் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான பாதுகாப்பு ஒரு உத்தரவாதமான அடிப்படை உரிமையாகும். சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி தவிர, எந்தவொரு நபரும் அவரது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிக்கப்படக்கூடாது என்று அது கட்டளையிடுகிறது. சரத்து 21-ன் பாதுகாப்பு குடை தனிப்பட்ட சுதந்திரத்தின் பல அம்சங்களைப் புரிந்துகொள்கிறது. குரு பக்ஷ் சிங் வழக்கில் (மேற்கூறியது) உச்ச நீதிமன்றம் அங்கீகரித்தபடி, பிணை மறுப்பு தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிப்பதற்குச் சமமாகும் (பத்தி 27, பக்கம் 1646). பிரிவு 438-ல் இணைக்கப்பட்டுள்ள நடைமுறையானது, முன்கூட்டிய பிணை வழங்க உயர் நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றம் ஆகிய இரண்டிற்கும் தெளிவான மொழியில் அதிகாரத்தை அளிக்கும் போது, முதற்கட்டமாக உயர் நீதிமன்றத்தை அணுகும் உரிமையை மறுப்பது, இந்தியாவின் அரசியலமைப்பின் சரத்து 21-ன் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமையை வெளிப்படையாக மீறுவதற்குச் சமமாகும்.'

காலித் ஹுசைன் மற்றும் பிறர் -எதிர்- ஜம்மு, காஷ்மீர் யூனியன் பிரதேச அரசு என்ற வழக்கில், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி பின்வரும் கருத்தைக் கொண்டிருந்தார்:

'இந்தப் பிரச்சினையில் நீதித்துறை கருத்துகளில் மாறுபாடு இருக்கிறது. மேலும் கௌஹாத்தி உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் -எதிர்- அசாம் மாநிலம் மற்றும் பிறர் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஏற்கனவே இப்பிரச்சனையைக் கவனித்துக் கொண்டிருப்பதால், அதிகாரப்பூர்வமான அறிவிப்பிற்காக ஒரு பெரிய அமர்வுக்கு நான் பரிந்துரைப்பது தற்போது பொருத்தமானதாக இருக்காது.'

**கேரள உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு:**

உஸ்மான் -எதிர்- காவல்துறை சார்பு ஆய்வாளர் (2003 (2) KLT 594) என்ற வழக்கில், கேரள உயர் நீதிமன்றத்தின் தனி நீதிபதி அமர்வு, 'சுகாதாரமான நடைமுறைச் சுய-கட்டுப்பாட்டு விதியைப் பின்பற்றி, ஒரு உயர் நீதிமன்றம் சாதாரணமாக (மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் தவிர) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 438 மற்றும் 439-ன் கீழ் உள்ள தனது அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடாது. ஒரே மாதிரியான நிவாரணத்திற்காக சமகால அதிகார வரம்பைக் கொண்ட அமர்வு நீதிமன்றம் அணுகப்படுவதற்கு முன்போ அல்லது இல்லாமலோ இதனைப் பயன்படுத்தக்கூடாது' என்று தீர்ப்பளித்தது. அந்த தனி நீதிபதி பின்வரும் வழிகாட்டுதல்களை (மற்றவற்றுடன்) வெளியிட்டார்:

- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438 மற்றும் பிரிவு 439-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள், அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின் நகலுடன் (அல்லது கீழே உள்ள உட்பிரிவு (ii)-ல் குறிப்பிடப்பட்டுள்ள மெமோ/மனுவுடன்) இருக்கும்போது மட்டுமே இந்தக் நீதிமன்றத்தின் பதிவு அலுவலகத்தால் இனி வழக்கு எண்ணிடப்படும்.

- உத்தரவின் நகல் இணைக்கப்படவில்லை என்றால், அத்தகைய விண்ணப்பங்கள், நகல் ஏன் சமர்ப்பிக்கப்படவில்லை அல்லது அமர்வு நீதிமன்றம் ஏன் முன்னர் அணுகப்படவில்லை என்பதை

விளக்கும் ஒரு மனு/மெமோவுடன் இணைக்கப்பட வேண்டும். அத்தகைய மெமோ/மனுவில் நீதிமன்றம் தனது விருப்பத்தின் பேரில் உத்தரவு பிறப்பித்து, அத்தகைய மனுவை ஏற்க/எண்ணிட உத்தரவிட்ட பின்னரே அது பதிவு அலுவலகத்தால் எண்ணிடப்படும்.

பின்னர், நீதிபதிகள் ஜே.எல். குப்தா மற்றும் ஏ.கே. பஷீர் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு, பாலன் –எதிர்– கேரள மாநிலம் என்ற வழக்கில் மேற்கண்ட வழிகாட்டுதல்களின் செல்லுபடித்தன்மையை பரிசீலித்து, தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை ரத்து செய்தது. 'இந்த விதி [பிரிவு 438] தேர்வை கட்டுப்படுத்தவில்லை. ஒரு நபர்/குற்றம் சாட்டப்பட்டவருக்கு உயர் நீதிமன்றத்தையோ அல்லது அமர்வு நீதிமன்றத்தையோ அணுகும் உரிமையை அது வழங்குகிறது' என்று இரு நீதியர் அமர்வு தீர்ப்பளித்தது. அந்த அமர்வு மேலும் கூறியது:

''அவரது உரிமை மதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அது அடக்கப்படவோ, அடைக்கப்படவோ அல்லது கட்டுப்படுத்தப்படவோ கூடாது. அவர் அணுக விரும்பும் மன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அவருக்கு வழங்கப்பட வேண்டும். சட்டம் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்காததால், ஒரு தடையை விதிக்க எங்களுக்கு எந்தக் காரணமும் தெரியவில்லை.'

'உயர் நீதிமன்றங்களில் வழக்குகளின் சுமை அதிகமாக இருப்பது உண்மையே. நிலுவைகள் அதிகமாக உள்ளன. நிலுவை வழக்குகள் அதிகரித்து வருகின்றன. இருப்பினும், கீழ்நிலை நீதிமன்றங்களிலும் நிலைமை மிகவும் ஊக்கமளிப்பதாக இல்லை. விசாரணைகள் தொடங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே மக்கள் காவலில் உள்ளனர். இந்த சூழ்நிலையில் மற்றும் அனைத்து உண்மைகளையும் ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டு, சட்டத்தின் தெளிவான மொழியின் அடிப்படையில், உஸ்மான் வழக்கில் (மேற்கூறியது) விதிக்கப்பட்டுள்ள கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க எந்த உத்தரவாதமும் இல்லை என்று நாங்கள் நினைக்கிறோம்.

இவ்வாறு, சட்டம் விண்ணப்பதாரருக்கு ஒரு தேர்வை வழங்கியுள்ளது என்பதில் ஆச்சரியமில்லை. சட்ட விதிகளை தெளிவாக வாசித்து புரிந்து கொள்வதன் மூலம், கைது செய்யப்படுவார் என்று அஞ்சும் நபருக்கோ அல்லது உண்மையில் கைது செய்யப்பட்டவருக்கோ தனக்கான நீதிமன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது என்பது தெளிவாகிறது. இந்த உரிமை எந்த சுய–கட்டுப்பாட்டாலும் குறைக்கப்படக்கூடாது. உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய கட்டுப்பாடுகள், நன்மையை விட அதிக தீங்கு விளைவிக்கலாம் மற்றும் அந்த விதி அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கத்தை தோற்கடிக்கலாம்,' என்றும் அது மேலும் தெரிவித்தது.

இருநீதியர் அமர்வு தீர்ப்பை முடிக்கும்போது, பிரிவு 438 மற்றும் பிரிவு 439–ன் விதிகள் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட விளக்கத்திற்குள் இருக்க வேண்டும் என்று கூறவில்லை. குடிமகனுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வழக்கையும் அதன் தகுதியின் அடிப்படையில் ஆராய வேண்டும். பிணை வழங்குவதற்கான காரணங்கள் இல்லை என்று கண்டறியப்பட்டால், நிவாரணத்தை மறுக்க நீதிமன்றத்திற்கு முழு அதிகாரம் உள்ளது. அதேபோல், ஒரு வழக்கு நிரூபிக்கப்பட்டால், குடிமகனின் சுதந்திரம் குறைக்க அனுமதிக்கப்படக்கூடாது.

சமீபத்திய வேணு கோபாலகிருஷ்ணன் மற்றும் பிறர் –எதிர்– கேரள மாநிலம் மற்றும் மற்றொருவர் (2025 LiveLaw (Ker) 559) என்ற வழக்கில், கேரள உயர் நீதிமன்றத்தின் ஒரு தனி நீதிபதி பின்வரும் சொற்களில் உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை எதிரொலித்துள்ளார்:

'...உச்ச நீதிமன்றத்தின் குரு பக்ஷ் சிங் சிப்பியா (மேற்கூறியது) மற்றும் கானுமூரி ரகுராம கிருஷ்ணம் ராஜு (மேற்கூறியது) வழக்குகளின் கட்டாய முன்னுதாரணங்கள் மற்றும் இந்தக்

நீதிமன்றத்தின் பாலன் (மேற்கூறியது) வழக்கில் உள்ள முன்னுதாரணத்தின் வெளிச்சத்தில், முன்கூட்டியே கோரும் பிணைக்கான மனு உயர் நீதிமன்றத்தில் பராமரிக்கத்தக்கது மற்றும் மனுதாரர் அதற்கான மன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அவருக்கு உள்ளது. உச்ச நீதிமன்றத்தால் இதற்கு மாறான முன்னுதாரணம் அமைக்கப்படும் வரை, இந்த நீதிமன்றம் மேற்கண்ட சட்டக் கோட்பாடுகளைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளது.'

**முடிவுரை:**

நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்கள் மாறுபட்ட கருத்துக்களை வழங்கியுள்ளன: சில, அத்தகைய மனுக்களை விசாரிப்பதற்கு முன் ''சிறப்புச் சூழ்நிலைகள்'' என்பதன் மீது வலியுறுத்து கின்றன. மற்றவை சமகால அதிகார வரம்பின் வெளிச்சத்தில் விண்ணப்பதாரரின் தடையற்ற மன்றத் தேர்வை நிலைநிறுத்துகின்றன. கேரள உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறை, அதன் இருநீதியர் அமர்வு பாலன் –எதிர்– கேரள மாநிலம் [மேற்கூறியது] தீர்ப்பில் வேரூன்றி உள்ளது. இது முன்னுதாரணங்கள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அரசியலமைப்புச் சட்டத்தின் ஆணைக்கு இணங்குகிறது.

இந்தச் சூழலில், இந்த பிரச்சினையில் உள்ள முரண்பட்ட கருத்துக்களைத் தீர்க்க, உச்ச நீதிமன்றத்தின் ஒரு பெரிய அமர்வின் அதிகாரப்பூர்வ அறிவிப்பிற்கான அவசியம் எழுகிறது. (இவை தனிப்பட்ட கருத்துகள்.)

**(நன்றி: லைவ்லா.இன் இணையதளம். கட்டுரையாளர் வழக்கறிஞர், இணையதளத்தின் இயக்குனரில் ஒருவர்)**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

---

## அரசியலமைப்பின் பாதுகாவலனாக சென்னை உயர்நீதிமன்றம் திகழ்கிறது உச்சநீதிமன்ற நீதிபதி சூர்யகாந்த் பேச்சு

சென்னை: ''நீதித்துறையின் உள்கட்டமைப்பு, கட்டட கலையை மட்டுமல்லாது நீதியையும் சார்ந்தது'' என உச்சநீதிமன்ற நீதிபதி சூர்யகாந்த் தெரிவித்தார்.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 134 ஆண்டுகள் பழமையான சட்டக் கல்லூரி கட்டடம், கூடுதல் நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்து பேசியதாவது:

''வழி நடத்தும் சட்டக் கல்லூரியின் பாரம்பரிய கட்டடம், சென்னை உயர்நீதிமன்றத்தின் இணை வளாகமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த புராதன கட்டடம், நீதித்துறை, பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகும் மாணவர்களை கற்றலில் ஊக்குவித்த இந்த கூட்டம், இனி நீதிபதிகள், வழக்குரைஞர்களை வழி நடத்தும். சென்னை உயர்நீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலனாக திகழ்கிறது. நீதித்துறையின் உள் கட்டமைப்பு என்பது, கம்பீரமான கட்டடக் கலை சார்ந்தது மட்டுமல்ல, அது நீதியையும் சார்ந்தது.

ஏனெனில், சாமானிய மக்களுக்கு, வேகமாக, நியாயமான நீதி கிடைக்க நீதிபதிகள், வழக்குரைஞர்கள், ஊழியர்களுக்கு உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் உகந்த சூழல் அமைய வேண்டும். அப்போதுதான், அவர்கள் பொறுமை, கருணை, தெளிவு கொண்டிருக்க முடியும். நீதித்துறைகளுக்கான கட்டமைப்பு பொது மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கும்'' இவ்வாறு அவர் பேசினார்.

மத்திய இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்லால் பேசுகையில், ''நீதித்துறையை வலிமைப்படுத்த மாநில அரசுகள் மற்றும் உயர்நீதிமன்றங்கள் வாயிலாக, மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குடிமக்களுக்கு நியாயமான நீதி கிடைக்க, பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்'' என்றார். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்ஸ்ரீ.வஸ்தவா பேசும்போது, அம்பேத்கர் சட்ட கல்லூரியில் சட்டம் படித்த பலர். இதே இடத்தில், நீதிபதிகளாகவும், வழக்குரைஞர்களாகவும் பணியாற்ற உள்ளனர். இந்த கூடுதல் நீதிமன்றங்கள், பொது மக்களுக்கு நீதியை விரைவாக வழங்க வழிவகை செய்யும் என நம்புகிறேன்.

தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி பேசுகையில் ''பொது மக்களுக்கு நியாயமான நீதி கிடைத்திட, தேவையான நீதித் துறை கட்டமைப்புகளை உருவாக்கிட தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.''

உச்சநீதிமன்ற நீதிபதி சுந்தரேஷ், வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக பங்கேற்றார். விழாவில், உச்சநீதிமன்ற நீதிபதி மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார், ரமேஷ், மத்தியஅரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சுந்தரேசன், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் ராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நன்றி: தினமணி 27.10.2025**

# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 31/2008)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu State Commission for Women Act, 2008 (Tamil Nadu Act No.31 of 2008)

**(as on 31st October, 2023)**

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2008ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்தில் மகளிருக்காக ஓர் ஆணையத்தை அமைத்துருவாக்குவதற்கும் அது தொடர்பான அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்திய குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

## அத்தியாயம் - I

## முன்னுரை

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** :

(1) இந்தச் சட்டம் 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிப்பிடக்கூடிய அத்தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

(a) “ஆணையம்” என்பது, பிரிவு 3இன்படி, அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் எனப் பொருள்படும்.

(b) “அரசு” என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(c) “உறுப்பினர்” என்பது, ஆணையத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படுவதோடு, தலைவரையும், உறுப்பினர் செயலாளரையும் உள்ளடக்கும்.

(d) “நபர்” என்பது, நிறுவகம், நிறுமம், கழகம் ஒன்றையோ அல்லது பொதுத் துறை நிறுவனம், நபர்களின் சங்கம் எதனையுமோ அல்லது அரசு மற்றும் அரசிடமிருந்து உதவி பெறுகின்ற முகவாண்மைகள் உள்ளடங்கலான அதன் முகவாண்மைகள் எனப் பொருள்படும்.

(e) “வகுத்துரைக்கப்பட்டது” என்பது விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(f) “மகளிர்” என்பது, எந்த வயதிலும் உள்ள ஒரு பெண்ணைக் குறிக்கும்.

## அத்தியாயம் - II

## தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

**3.ஆணையத்தை அமைத்துருவாக்குதல்:** (1) அரசு, அறிவிக்கை வாயிலாகத் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் என்றழைக்கப்படும் ஓர் அமைப்பை, இந்தச் சட்டத்தின்படி, அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்கும், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது, பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்.

(a) "பெண்களின் வளர்ச்சி நோக்கிற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அரசால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய சிறந்த பெண்மணி ஒருவரே தலைவர் ஆவார்.

(b) "மகளிரின் வளர்ச்சிக்கு சேவை செய்த அல்லது சட்டம் மற்றும் சட்டமியற்றுதலைப் பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் கொண்ட மகளிரின் மேம்பாட்டிற்கு அல்லது மகளிருக்கான தன்னார்வ நிறுவனம் தொடர்பான விவரங்களின் நிருவாகத்தைப் பற்றிப் போதிய அறிவும் அனுபவமும் கொண்டிருக்கிற அல்லது மகளிரின் பொருளாதார மேம்பாடு, சுகாதாரம் அல்லது கல்வித் துறையில் போதிய அனுபவமும் திறனும் நம்பகத்தன்மையும் கொண்ட நபர்களுக்கிடையே இருந்து அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்.

**முதலாம் வரம்புரை** : ஆனால், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் மூன்றிற்குக் குறையாதவர்கள் மகளிராக இருத்தல் வேண்டும்.

**இரண்டாம் வரம்புரை**: மேலும் பட்டியல் சாதியினரைச் சேர்ந்த நபர்களுக்கு இடையே இருந்து ஓர் உறுப்பினரும், பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்த உறுப்பினரும் இடம் பெறுதல் வேண்டும்.

(c) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இடையே இருந்து அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்.

**வரம்புரை**: ஆனால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் ஓர் உறுப்பினராய் இருப்பவர் தாம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராய்ப் பதவி வகிப்பது அற்றுப் போகிற அத்தேதியிலிருந்து ஆணையத்தின் உறுப்பினராய் இருப்பதும் அற்றுப் போதல் வேண்டும்.

(d) சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவி வழி உறுப்பினர் ஆவார்.

(e) அரசு இணைச் செயலாளர் பதவி படிநிலைக்குக் குறையாத பதவியில் உள்ள இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலர் ஒருவர், அரசால் உறுப்பினர் செயலாளராக அமர்த்தப்படுதல் வேண்டும்.

**4. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலமும் பணி நிபந்தனைகளும்** : (1) இதன் பொருட்டு அரசால் குறித்துரைக்கப்படும் மூன்றாண்டிற்கு மிகாத அத்தகைய கால அளவிற்கு தலைவரும், உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி வகித்தல் வேண்டும்.

(2) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும் மற்றும் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(3) தலைவரோ அல்லது உறுப்பினர் ஒருவரோ, எந்நேரத்திலும் அரசுக்கு முகவரியிடப்பட்டு எழுத்து வடிவிலான கடிதம் மூலமாகத் தலைவர் பதவியிலிருந்தோ அல்லது நிகழ்விற்கேற்ப உறுப்பினர் பதவியிலிருந்தோ விலகிக் கொள்ளலாம்.

(4) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், அரசு

(a) அவர், தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராக இருக்கிறவரானால்

(b) அவர், அரசின் கருத்தில் ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயல் ஒன்றிற்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பாரானால்,

(c) அவர், மனச் சீர்கேடுற்றவராகி, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்பப்பட்டு இருப்பாரானால்,

(d) அவர், செயல்பட மறுப்பாரானால் அல்லது செயல்படத் திறனற்றுப் போவாரானால்

(e) அவர், ஆணையத்தின் அனுமதி இல்லாமல், தொடர்ந்தாற்போல் அதன் மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாரானால், அல்லது

(f) அரசின் கருத்தில் அவர் பொதுமக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் பதவியில் தம்மை அந்நபர் தொடர்ந்திருக்குமாறு செய்யும் பொருட்டுத் தம் தலைவர் அல்லது நிகழ்விற்கேற்பத் தம் உறுப்பினர் பதவி நிலையைத் தவறாகப் பயன்படுத்துவாரானால்

அவரைத் தலைவர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல் வேண்டும்.

**வரம்புரை** : ஆனால், இந்த உட்பிரிவின்படி, அந்தப் பொருள் குறித்து நபர் எவருக்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்படும் வரையில் அந்நபர் எவரும் பதவியிலிருந்து நீக்கப்படுதல் கூடாது.

(5) அரசால், உட்பிரிவு (3) அல்லது (4)இன்படியோ அல்லது பிறவாறோ, ஏற்பட்ட காலியிடம் ஒன்று புதிதாகப் பெயர் குறித்து நியமிப்பதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரின் காலியிடத்தில், அவர் வகித்துவிட்டு எஞ்சிய கால அளவிற்கு, அந்தக் காலியிடம் ஏற்படாததைப் போன்றே பதவி வகித்து வருதல் வேண்டும்.

**வரம்புரை**: ஆனால், அந்தத் தலைவர் நீங்கலாகப் பிற உறுப்பினர் ஒருவரின் காலியிடம் அந்த உறுப்பினரின் பதவிக் காலம் எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ, அந்தத் தேதிக்கு அடுத்து முந்தைய ஆறு மாதங்களுக்குள் ஏற்படுமானால், அத்தகைய காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘உறுப்பினர்’’ என்பது. ‘‘உறுப்பினர் செயலாளரை’’ மற்றும் ‘‘ஒரு பதவி வழி உறுப்பினரை’’ உள்ளடக்காது.

**5. காலியிடங்கள் முதலானவை, ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லத்தகாதது ஆக்காது :** ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பொருட்பாட்டின் தகுதிப்பாடுகளைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது தலைவராக அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரைப் பெயர் குறித்து நியமிப்பதில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது ஒரு கூட்டத்தை நடத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு உள்ளடங்கலாக, ஆணையத்தின் நடைமுறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே, ஆட்சேபிக்கப்படுதலோ அல்லது செல்லத்தகாதோ ஆக்காது.

**6. ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர்களும்**: (1) இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக் கூடிய அத்தகைய அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆணையத்தில் வகை செய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும் படித் தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படுமாறு இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களும் பணியாளர்களும் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருதல் வேண்டும்.

## அத்தியாயம் - III

**7. ஆணையத்தின் பணிகள்:** (1) 1990ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் (மையச் சட்டம் 20/1990) பிரிவு 10இன்படி மகளிர் தேசிய ஆணையத்தின் பணிகளின் செயல்பாட்டிற்கு உட்பட்டு, அல்லது ஆணையமானது பின்வரும் பணிகளில் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏனும் ஒன்றையோ நிறைவேற்றலாம். அதாவது

(a) மகளிரின் பாதுகாப்புத் தொடர்பாக. இந்திய அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் வேண்டும்.

(b) ஆணையம், ஆண்டுதோறும் மற்றும் பொருத்தமெனக் கருதுகிற பிற நேரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்பாட்டின் மீதான அறிக்கைகளை அரசிற்கு அளித்தல் வேண்டும்.

(c) மகளிரின் நிலைகளை மேம்படுத்துவதற்கு, அப்பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு திறம்பட செயல்படுத்துவதற்காக அறிக்கைகளில் பரிந்துரைகளை செய்தல் வேண்டும்.

(d) மகளிரின் பாதிக்கிற வகையில் உள்ள தற்போது இருந்து வரும் சட்டங்களின் வகைமுறைகளை, அவ்வப்போது மறு ஆய்வு செய்து, அத்தகைய சட்டங்களில் காணப்படும் விடுபாடுகள், குறைபாடுகள் அல்லது குற்றங்குறைகளைக் களைவதற்குத் தீர்வு காணும் சட்ட நடவடிக்கைகளுக்கு வகை செய்யும் பொருட்டு, அவற்றுக்கான திருத்தங்களுக்குப் பரிந்துரைத்தல் வேண்டும்.

(e) இந்திய அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் வகைமுறைகளை மகளிர் தொடர்பான வழக்குகளைச் சம்மந்தப்பட்ட அதிகார அமைப்புகளிடம் முறையிடுதல் வேண்டும்.

(f) மகளிர் உரிமைப் பாதுகாப்பிற்கும், சமத்துவம் மற்றும் மேம்பாட்டு நோக்கினை அடைவதற்கும் வகை செய்கிற சட்டங்கள் எவற்றையும் செயற்படுத்தாமை.

(i) மகளிர் துயர் தணிக்கவும் நல்வாழ்விற்கு உறுதியளித்தும் பெண்களுக்கு தீர்வழிக்கான வகை செய்யும் நோக்குடைய கொள்கை முடிவுகள், வழிகாட்டு நெறிகள் அல்லது அறிவுறுத்தல்களை நிறைவேற்றாமை ஆகியவை தொடர்பான முறையீடுகளை கவனித்து அந்த விவரங்களில் தாமே அறிவிப்பை எடுத்துக் கொண்டு விவரங்களிலிருந்து எமும் சிக்கல்களை சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.

(g) மகளிருக்கு எதிராக வேற்றுமை பாராட்டுதல் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளிலிருந்து எழுகின்ற குறித்த சில சிக்கல்கள் அல்லது சூழ்நிலைகளைச் சிறப்பாக ஆய்வு நடத்தி அல்லது புலனாய்வுகளை மேற்கொண்டு, அவற்றை அகற்றுவதற்கான உத்திகளைப் பரிந்துரைக்கும் பொருட்டுத் தடைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.

(h) அனைத்துப் பிரிவுகளிலும் மகளிருக்குரிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வழிகளுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு, மேம்பாடு மற்றும் கல்விசார் ஆய்வினை மேற்கொண்டு அவர்களின் மேம்பாட்டினைத் தடுப்பதற்குப் பொறுப்புடைய காரணங்களை, அதாவது இல்லப் பராமரிப்பு மற்றும் அடிப்படைப் பணி சேவைகளின் குறைவு, மட்டுமீறிய பணியைக் குறைப்பதற்கான மற்றும் தொழில்சார் சுகாதார இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கான ஆதார பணிச் சேவைகள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான தொழில்நுட்பங்கள் போதிய அளவு இல்லாமை ஆகியனவற்றை அடையாளம் காணுதல் வேண்டும்.

(i) மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டச் செயல்பாட்டில் பங்கேற்று ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(j) மகளிரின் மேம்பாட்டு வளர்ச்சியினை மதிப்பிடுதல் வேண்டும்.

(k) மகளிர் கைதிகளாகவோ அல்லது பிறவாறோ வைத்து வரப்படும் சிறைச்சாலை, காவல் இல்லம், பெண்களின் நிலையம் அல்லது பாதுகாப்பில் வைக்கப்படும் பிற இடம் ஒன்றை ஆய்வு செய்தல் அல்லது ஆய்வு செய்யப்படுமாறு செய்து, தீர்வு காணும் நடவடிக்கையாகத் தொடர்புடைய அதிகார அமைப்புகளிடம் தேவைப்படும் இடத்திற்கு அந்தப் பொருட்பாட்டினை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(l) மகளிர் தொடர்பான சிக்கல்களை உள்ளிட்ட வழக்கினை நடத்துதலும் நிதி வழங்குதலும் வேண்டும்.

(m) மகளிரைச் சார்ந்த விவரம் எதன்பேரிலும் குறிப்பாக அவ்வப்போது மகளிர் சந்தித்து வரும் இடர்ப்பாடுகளைப் பற்றியும் அரசிற்கு அறிக்கைகளை அளித்தல் வேண்டும்.

(n) அரசால் அதற்குக் குறிப்பிடக் கூடிய வேறு ஏதேனும் விவரம்.

(2) ஆணையம், உட்பிரிவு (1)இல் (a) அல்லது (f) எனும்கூறின் (i) ஆம் உட்கூறில் குறிப்பிடப்பட்ட விவரம் எதையும் புலனாய்வு செய்கையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) படி, ஓர் உரிமை வழக்கை விசாரணை செய்கின்ற ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் குறிப்பாகப் பின்வரும் விவரங்களைப் பொறுத்த அதிகாரங்களையும் கொண்டிருக்கும் அதாவது

(a) நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரின் வருகையை வலியுறுத்தி, உறுதிமொழியின்பேரில் அவரை விசாரித்தல்

(b) ஆவணம் எதையும் கண்டறிந்து தாக்கல் செய்யக் கோருதல்.

(c) ஆணை உறுதி ஆவணங்களின் பேரில் சான்று பெறுதல்

(d) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவுரு அல்லது அதன்படி (நகல்) எதனையும் கோரிப் பெறுதல்.

(e) சாட்சிகள் மற்றும் ஆவணங்களை விசாரிப்பதற்கு ஆணையங்களை ஏற்படுத்துதல் மற்றும்

(f) வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்

(3) ஆணையம், விவரம் எதையும் புலனாய்வு செய்த பின்னர், முதல் நோக்கில் பார்க்கும்போது வழக்கு இருப்பதாக மனநிறைவு பெறுமானால், காவல்தறை உள்ளிட்ட தொடர்புடைய அதிகார அமைப்பிற்கு அந்த விவரத்தைக் குறித்தனுப்பலாம் மற்றுங்ம அத்தகைய அதிகார அமைப்பிற்கு அந்த விவரத்தைக் குறித்தனுப்பலாம் மற்றும் அத்தகைய அதிகார அமைப்பானது சட்டப்படி உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணையம், உட்பிரிவு (1)இன்படியான பரிந்துரைகளைச் செய்யும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னர், அரசால், உருவாக்கப்பட்ட குழு அல்லது வேறு ஏதேனும் குழுமம் அல்லது நிறுவனத்தால் செய்யப்பட்ட ஆலோசனை அல்லது பரிந்துரை எதையும் கருத்திற்கொள்ளலாம் அல்லது பின்பற்றலாம்.

(5) அரசு, உட்பிரிவு (1)இன் கூறு ()இல் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் அனைத்தையும், மாநில அரசு தொடர்பான பரிந்துரைகளின் பேரில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கை மற்றும் அத்தகைய பரிந்துரைகளில் எவையேனும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பின், அவற்றிற்கான காரணங்களை விளக்குகின்றன குறிப்புடன் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

**8. ஆணையத்தின் குழுக்கள்:** (1) ஆணையம், அவ்வப்போது அதனால் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடிய தனிவகையான சிக்கல்களைக் கவனிக்கத் தேவையான அத்தகைய குழுக்களை நியமிக்கலாம்.

(2) ஆணையம், அது பொருத்தமெனக் கருதக் கூடிய அதன் உறுப்பினர்களாக இல்லாத அத்தகைய எண்ணிக்கையுள்ள நபர்களை உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட குழு எதனின் உறுப்பினர்களாக இசைந்து தெரிவு செய்து கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் மற்றும் அவ்வாறு இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள், குழுவின் கூட்டங்களுக்கு வருகை தரும்

உரிமையுடன், கூட்ட நடவடிக்கைகளில் பங்கு பெறும் உரிமையைக் கொண்டிருப்பார்கள். ஆனால், வாக்களிக்கும் உரிமை கொண்டிருக்க மாட்டார்கள்.

(3) அவ்வாறு இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள், அக்குழுவின் கூட்டங்களுக்கு வருகை தந்தற்காக வகுத்துரைக்கப்படும் அத்தகைய படித்தொகைகளுக்கு உரிமைத் தகுதியுடையவர் ஆவார்கள்.

**9. நடைமுறைகள் ஆணையத்தால் முறைப்படுத்துதல் :** (1) ஆணையமோ அல்லது அதன் ஒரு குழுவோ தேவைப்படும் போதெல்லாம் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும் மற்றும் தலைவர் பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) ஆணையம், அதன் சொந்த நடைமுறையையும் அதன் குழுவின் நடைமுறையையும் முறைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் அதன் உறுப்பினர் செயலாளரால் அல்லது இதன் பொருட்டு உறுப்பினர் செயலாளரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் அதிகாரபூர்வமானதாக்கப்படுதல் வேண்டும்.

**10. புலனாய்வு நடத்துவதற்காக ஒருசில அலுவலர்கள் மற்றும் புலனாய்வு முகவாண்மைகளின் சேவையினைப் பயன்படுத்துவதற்கு ஆணையத்திற்கு உள்ள அதிகாரம்:** (1) ஆணையம், இந்தச் சட்டத்தின்படி புலனாய்வினை நடத்தும் நோக்கத்திற்காக.

(a) மாநில அரசின் அலுவலர் எவரின் அல்லது புலனாய்வு முகவாண்மை எதனின்; அல்லது

(b) பிற நபர் எவரின் சேவையையும் பயன்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர் அல்லது முகவாண்மை அல்லது நபர் எவரும், ஆணையத்தால் பணிக்கப்பட்டவாறு அந்த விவரத்தைப் புலனாய்வு செய்து, ஆணையத்திற்கு அதன்மீது ஓர் அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## நிதி கணக்குகள் மற்றும் தணிக்கை

**11. அரசு வழங்கும் மாநிலங்கள்:** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசு பொருத்தமெனக் கருதுகிற பணத்தொகையை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய தொகைகளைச் செலவு செய்யலாம்.

(3) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித் தொகைகள், பிரிவு 6இல் குறிப்பிடப்பட்ட உறுப்பினர் செயலாளர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட நிருவாகச் செலவினங்கள் மற்றும் பிரிவு 8இன் உட்பிரிவு (3)இல் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கான படித்தொகைகள் ஆகியவை, உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

**12. ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை:** (1) ஆணையத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படும் முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையம், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அரசு, இதன்பொருட்டு நியமிக்கும் தணிக்கையாளரால், ஆணையத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்

(3) தணிக்கை நோக்கங்களுக்காக, உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், வகுத்துரைக்கப்படக் கூடிய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைப்பதற்கும் அத்தகைய அறிக்கையை ஆணையத்தின் அடுத்தக் கூட்டத்தில் அதன் பரிசீலனைக்காக, ஆணையத்தின் முன் வைப்பதற்கும் ஆவன செய்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படக் கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனே களைவதற்கு உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன் மீது வழங்கும் குறிப்புகளுடன், வகுத்துரைக்கப்படக் கூடிய காலத்திற்குள் அரசிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) அரசு, தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்பட்டிருக்குமேயாயின், எழுத்து வடிவிலான ஆண மூலமாக, அதில் குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அவ்வாணையில் குறித்துரைக்கப்படக் கூடிய நடவடிக்கையை எடுக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம் மற்றும் அதன்பேரில் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**13. ஆண்டறிக்கை:** ஆணையம், நிதியாண்டு ஒவ்வொன்றிற்கும் அதன் தணிக்கை அறிக்கையில் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு, அதன் முந்தைய நிதியாண்டு நடவடிக்கைகள் முழுவதையும் விவரமாகக் கொடுத்து, அத்தகைய முறையிலும் நேரத்திலும் தயாரித்து, அரசிற்கு அதன்படி (நகல்) ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

**14. ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்:** ஆண்டறிக்கையில் கண்ட பரிந்துரைகளில் அரசு தொடர்பானவற்றின் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற குறிப்புடனும் மற்றும் அந்தத் தணிக்கை அறிக்கையையும் சேர்த்து அவை பெறப்பட்டவுடன் எவ்வளவு விரைவில் கூடுமோ, அவ்வளவு விரைவில் அந்த அறிக்கைகள் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் -V

## பல்வகை

**15. ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்:** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனின்படி அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனின்படி, செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் இந்திய தண்டனைச் சட்டத்தொகுப்பின் மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**16. ஆணையத்திடம் நபர்களால் அளிக்கப்படும் வாக்குமூலங்கள்:** ஆணையத்திடம் அல்லது பிரிவு 10இன் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட ஓர் அலுவலர் அல்லது முகவாண்மை அல்லது நபர்

முன்பு சான்றளிக்கும்போது ஒரு நபரால் அளிக்கப்பட்ட வாக்குமூலம் எதுவும், அத்தகைய வாக்குமூலத்தின் மூலம் பொய்யான தகவல் கொடுக்கப்பட்டதற்கான குற்ற வழக்குத் தொடர்தல் நீங்கலான உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும், உள்ளாக்கப்படுதலோ அல்லது அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுதலோ கூடாது.

**வரம்புரை**: அந்த வாக்குமூலமானது

(a) ஆணையத்தால் அல்லது அத்தகைய அலுவலரால் அல்லது முகவாண்மையால் அல்லது அத்தகைய நபரால் பதிலளிக்குமாறு கோரப்பட்டதற்கு மறுமொழியாகச் செய்யப்பட்டது; அல்லது கோரப்பட்டதற்கு மறுமொழியாகச் செய்யப்பட்டது அல்லது

(b) புலனாய்வின்படியான விவரத்திற்கு உட்பட்டுத் தொடர்புடையது.

**17. பிற சட்டங்களின் பொருந்துகை தடை செய்யப்படுதல் கூடாது:** பிறவாறு வகை செய்யப்பட்டவை தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனைக் குறைவுப்படுத்துவதாக இருத்தல் கூடாது.

**18. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்புரையின்படி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்புரையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**19. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், இந்த இடர்ப்பாட்டைநீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகின்றன வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுக் கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**20. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்:** அனைத்தையுமோ அல்லது அவற்றில் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன் சென்ற அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் விவரங்கள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம். அதாவது

(a) தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பிரிவு 4இன் உட்பிரிவு (2)இன்படி தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் மற்றும் பிரிவு 6இன் உட்பிரிவு (2)இன்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளங்களும், படித் தொகைகளும்

(b) பிரிவு 8இன் உட்பிரிவு (3)இன்படி இசைந்து தெரிவு செய்யப்பட்ட நபர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படித் தொகைகள்.

(c) பிரிவு 12இன் உட்பிரிவு (1)இன்படி கணக்குகள் எந்தப் படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டு கணக்குகளின் விவர அறிக்கை எந்தப் படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்

(d) பிரிவு 13இன்படி ஆண்டறிக்கை எம்முறையில் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்

(e) இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப்படும் பிற விவரம் எதுவும்

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி அவை வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் பிரிவு 19இன்படி செய்யப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரையில் சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் எதையும் அச்சட்டமன்றப் பேரவை மாற்றியமைக்குமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படவோ பிறப்பிக்கப்படவோ கூடாது அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல் வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்பச் செயல் வடிம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல் வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதோன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

---

## நவம்பர் 23ஆம் தேதியுடன் கவாய் ஓய்வு
## உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதி சூர்ய காந்த்

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியாற்றி வரும் கவாய். நவம்பர் 23ஆம் தேதியுடன் ஓய்வு பெறுகிறார். எனவே புதிய தலைமை நீதிபதியை நியமிக்கும் பணிகளை மத்திய அரசு தொடங்கி விட்டது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருப்பவர். தனக்குப்பின் அந்த பதவியில் அமர வேண்டிய மூத்த நீதிபதியின் பெயரை மத்திய அரசுக்கு பரிந்துரைப்பார். அவர் பதவு ஓய்வு பெறும் ஒரு மாதத்துக்கு முன்பு இந்த பெயரை கேட்டு மத்திய அரசு கடிதம் அனுப்பும்.

அந்த வகையில் தற்போதைய தலைமை நீதிபதி கவாயிடம், புதிய தலைமை நீதிபதியின் பெயரை பரிந்து ரைக்கக் கேட்டு மத்திய அரசு கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் கவாய்க்கு அடுத்த இடத்தில் மூத்த நீதிபதியாக சூர்யகாந்த் உள்ளார். எனவே, அவரது பெயரை கவாய் பரிந்துரைப்பார் என தெரிகிறது. தலைமை நீதிபதி கவாயிடம் இருந்து இந்த பரிந்துரை கடிதம் கிடைத்தவுடன், புதிய தலைமை நீதிபதி நியமனத்துக்கான நடவடிக்கைகளை அரசு முடுக்கி விடும். இது தொடர்பாக ஜனாதிபதிக்கு மத்திய அரசு பரிந்துரைக்கும் அதை ஏற்று ஜனாதிபதி, புதிய தலைமை நீதிபதியை நியமிப்பார்.

புதிய தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் நியமிக்கப் பட்டால் அடுத்த மாதம் 24ஆம் தேதி அவர் பதவி யேற்பார். நாட்டின் ஆண்டு பிப்ரவரி 9ஆம் தேதி வரை பதவி வகிப்பார் என உச்சநீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

**நன்றி: தினத்தந்தி 24.10.2025**

# 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 44/1998)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu State Commission for Women Act, 1998 (Tamil Nadu Act No.44 of 1998)

(as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 1998ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இடம் எதிலும் [1][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடை செய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்திய குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, தொடக்கமும் :**

(1) இந்தச் சட்டம் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு [2][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடை செய்கின்ற சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, 1998ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 30ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

[3][(a) "துன்பம் விளைவித்தல்" என்பது, பழிதூற்றுவது ஊறு செய்வது, தொந்தரவு செய்வது, தாக்குவர அல்லது வலிமையைப் பயன்படுத்துவது உள்ளிட்ட, அச்சுறுத்தலை, அச்சத்தை, அவமானத்தை அல்லது தடுமாற்றத்தை விளைவிக்கிற அல்லது பெரும்பாலும் விளைவிக்கக் கூடிய ஓர் ஆடவரின் பண்பற்ற நடத்தை அல்லது செயல் எதுவும் எனப் பொருள்படும்.]

(b) "பொது வாகனம்" என்பது, 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) பிரிவு 2இன் கூறு (35)இல் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருக்கும்.

(c) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் பொருள்வரையறை செய்யப்படாத சொற்களும் சொற்றொடர்களும் 1860ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் (மையச் சட்டம் XLV/1860) அவற்றுக்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருக்கும்.

---

1. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 3ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

3. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 4ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**3. [1]["பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடை செய்தல்"** எந்த இடத்திலும் பெண்ணிற்குத் துன்பம் விளைவிப்பது தடை செய்யப்படுகிறது.

**4. [2][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலுக்கான] தண்டனை**: கல்வி நிலையம், கோயில் அல்லது பிற வழிபாட்டு இடம், பேருந்து நிற்கும், இடம் சாலை, இருப்பூர்தி (இரயில்) நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, திருவிழா நடக்குமிடம், பொது வாகனம் அல்லது கலம், பிற இடம் எதிலும் அல்லது அதன் வளாகத்திற்குட்பட்ட இடத்தில் பெண்ணிற்குத் துன்பம் விளைவிக்கிற, அதில் பங்கேற்கிற அல்லது அதற்கு உடந்தையாயிருக்கிற எவர் ஒருவரும் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவிற்குச் சிறைத் தண்டனையும் மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத் தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**4-A. [7][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால்] ஏற்படும் மரணம்**: (1) ஒரு பெண்ணின் மரணம் உடற்காயத்தினால் விளைவிக்கப்பட்டிருந்து அல்லது இயல்பான சூழ்நிலைகளின்படி இல்லாமல் ஏற்பட்டிருந்து, அவளது மரணத்திற்கு உடனடி முன்பாக, துன்பம் விளைவிக்கும் செயலுக்கு அவள் ஆட்பட்டாள் என்றோ அல்லது இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவுகள் 294, 354 அல்லது 509இன்படி குற்றச் செயல் ஒன்று அவளுக்குச் செய்யப்பட்டது என்றோ, காட்டப்படும் நிலையில், அத்தகைய மரணமானது பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்பட்ட மரணம் என அழைக்கப்படும்.

(2) பிரிவு 4இல் என்ன அடங்கியிருந்தபோதிலும், துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்தை எவர் ஒருவரும் ஒரு பெண்ணிற்கு விளைவித்திருந்து, எந்தச் செயலால் அந்த மரணம் விளைவிக்கப்படுகிறதோ, அந்தச் செயலானது,

(i) மரணத்தை விளைவிக்கின்ற அல்லது மரணத்தை பெரும்பாலும் விளைவிக்கக் கூடிய உடற்காயத்தை உண்டாக்க வேண்டும் என்ற உட்கருத்துடன் செய்யப்படுமானால், ஆயுட்காலம் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகளில் ஏதாவது ஒன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(ii) மரணத்தை விளைவிக்கும் அல்லது மரணத்தைப் பெரும்பாலும் விளைவிக்கக் கூடிய உடற்காயத்தை உண்டாக்க வேண்டும் என்ற உட்கருத்து எதுவுமின்றி, ஆனால் அது மரணத்தை பெரும்பாலும் விளைவிக்கும் என அறிந்தே செய்யப்படுமானால், பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகளில் ஏதாவது ஒன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்குக் குறையாத பணத் தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(iii) கண்மூடித்தனமானதாகவோ கவனக் குறைவானதாகவோ இருக்குமானால், பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகளில் ஏதாவது ஒன்றும் மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

---

1. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 5ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 6ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

3. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 7ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**4-B. பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் தற்கொலை:** (1) பெண் எவரும் தற்கொலை செய்து கொண்டிருந்து, அவளது மரணத்திற்கு உடனடி முன்பாக, ஏதேனும் ஒரு நபரால், துன்பம் விளைவிக்கும் செயலுக்கு அவள் ஆட்படப்பட்டாள் என்றோ அல்லது இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவுகள் 294, 354 அல்லது 509இன்படி குற்றச் செயல் ஒன்று அவளுக்குச் செய்யப்பட்டது என்றோ காட்டப்படுமானால், அத்தகைய தற்கொலையானது, பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்பட்ட தற்கொலை என அழைக்கப்படும் என்பதோடு, அத்தகைய நபர் அந்தத் தற்கொலைக்கு உடந்தையாக இருந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) பிரிவு 4இல் என்ன அடங்கி இருந்தபோதிலும், பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் ஒரு பெண்ணின் தற்கொலைக்கு உடந்தையாயிருக்கிற எவர் ஒருவரும், பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகளில் ஏதாவது ஒன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத் தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**4-C. பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்திற்கு மற்றும் தற்கொலைக்கு உடந்தையாய் இருத்தல் குறித்த அனுமானம்:** நபர் எவரும் ஒரு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்த லால் அவளின் தற்கொலைக்கு உடந்தையாக இருந்தாரா என்ற கேள்வி எழும்போது, நீதிமன்றம் அவளது மரணத்திற்கு முன்பாக துன்பம் விளைவிக்கும் செயலுக்கு அந்தப் பெண் ஆட்பட்டிருந்து அல்லது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவுகள் 294, 354 மற்றும் 509இன்படி குற்றச் செயல் ஒன்று அவளுக்குச் செய்யப்பட்டிருந்து, அந்த நபராலோ அல்லது அவரது தூண்டுதலின்பேரிலோ, அந்தத் துன்பம் விளைவித்தல் அல்லது மேற்சொன்ன குற்றச் செயல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடற்காயம் விளைவிக்கப்பட்டது என்றும், அது அந்தப் பெண்ணின் மரணத்தையோ அல்லது தற்கொலையையோ விளைவித்துள்ளது என்றும் காட்டப்படும்போது, அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி, அத்தகைய நபர் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றோ அல்லது நிகழ்விற்கேற்ப துன்பம் விளைவித்தலால் ஏற்படும் தற்கொலைக்கு உடந்தையாய் இருந்துள்ளார் என்றோ அனுமானித்தல் வேண்டும்.

**5. வளாகத்தின் நிருவாகிக்கு உள்ள பொறுப்பு:** (1) கல்வி நிலையம், கோயில் அல்லது பிற வழிப்பாட்டிடம், திரையரங்கு அல்லது பிற வளாகம் எதனையும் பொறுப்பில் கொண்டிருக்கிற நபர் எவரும்

(a) அந்த வளாகத்திற்குள்ளாக [1]**[பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்]** தடுக்க தான் தக்கது எனக் கருதும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(b) பாதிக்கப்பட்ட நபர் ஒருவரால் செய்யப்பட்ட முறையீடு ஒன்றின்பேரில், [1]**[பெண்ணிற்குத் துன்பம் விளைவிப்பது]** குறித்து காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற நபர் எவரும் இரண்டாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

**6. பொது வாகனப் பணியாளர்களின் கடமை:** [2][(1) பொது வாகனம் ஒன்றில் அலலது கலம் ஒன்றில் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடுக்கும் பொருட்டு, அந்த வாகனத்தின் அல்லது கலத்தின் பணியாளர்கள் தாங்கள் பொருத்தம் என நினைக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுத்தல்

---

1. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 8ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 9ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

வேண்டும். பொது வாகனத்தில் பெண்ணிற்கு துன்பம் விளைவிக்கப்படும்போது, அத்தகைய வாகனத்தின் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட நபரின் முறையீடு ஒன்றின்பேரில், வாகனத்தை மிக அருகிலுள்ள காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று, காவல் துறையினரிடம் தகவல் கொடுத்தல் வேண்டும்.]

(2) உட்பிரிவு (1)இன்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற பணியாளர் எவரும், ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

**7. உடந்தையாக இருந்ததாகக் கருதப்படுதல் :** [1][(1) பிரிவு 4, பிரிவு 4-A அல்லது 4-Bஇன்படி தண்டனை அளிக்கப்படுவதற்குரிய குற்றச் செயலுக்கு வாகனம் அல்லது கலம் எதுவும் பயன்படுத்தப்பட்டுள்ளபோது, அத்தகைய வாகனத்தின் அல்லது கலத்தின் ஓட்டுநர், அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி பிரிவு 4, பிரிவு 4-A அல்லது 4-Bஇன்படியான குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய கால அளவிற்குச் சிறைத் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத் தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.]

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் அல்லது கலம்) நமக்குத் தெரியாமல் பெண்ணுக்குத் துன்பம் விளைவுத்தலில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அத்தகைய வாகனத்தின் அல்லது கலத்தின் உரிமையாளர், நிரூபித்தாலன்றி, அந்த வாகனம் அல்லது கலம் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

[2]**[7-A. இழப்பீடு வழங்குவதற்கான ஆணை**: நீதிமன்றம், பிரிவி 4-A அல்லது 4-Bஇன்படி தண்டனைத் தீர்ப்பு அளிக்கும்போது, எந்தச் செயலுக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபருக்கு தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் செயலின் காரணமாக, இழப்பு அல்லது கேடு அல்லது இயலாமை அல்லது மனத்துயர் எதனையும் அடைந்த நபருக்கு அல்லது அவருடைய சட்டமுறை வாரிசுதாரருக்கு அந்த ஆணையில் குறிப்பிடப்படக் கூடிய தொகையை இழப்பீடு. என்கிற வகையில் கொடுக்குமாறு அந்தக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கு ஆணையிடலாம்.]

**8. பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுதல் கூடாது**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்குப் பாதகமாக இருத்தல் கூடாது.

**9.விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) மாநில அரசானது. இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்டதற்குப் பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது

---

1. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 10ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டத்தின் (39/2002) பிரிவு 11ஆல் புகுத்தப்பட்டது.

அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அதனையடுத்து வரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தயை விதி எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால் அல்லது அந்த விதியானது செய்யப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால் அந்த விதியானது அதன் பின்னர், அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கே வராது அல்லது நீக்கம் செய்தது எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**10. நீக்கமும் காப்பும்:** (1) 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் அவசரச் சட்டமானது தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1998 இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்படுகிறபோதிலும், அந்த அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கருதப்படுதல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் 'டயாலிசிஸ்' பணியாளர்களை நிரந்தரம் செய்வது குறித்து பரிசீலிக்க வேண்டும்

### தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனை களில் தற்காலிகமாக பணியாற்றும் 'டயாலிசிஸ்' பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய கோரும் கோரிக்கையை 4 வாரத்துக்குள் பரிசீலிக்கும்படி அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், தென்காசியைச் சேர்ந்த எஸ். காளிமுத்து எண்ணூரைச் சேர்ந்த டி.கார்த்திகைதேவி உள்பட 126 பேர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது. தமிழ்நாட்டில் உள்ள 26 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவகல்லூரி மருத்துவ மனைகளில் 'டயாலிசிஸ்' பணியாளர்களாக 2021–ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டோம். எங்களுக்கு மாதம் ரூ.20 ஆயிரம் தொகுப்பூதியம் வழங்கப்பட்டது. 3 ஆண்டு களாக எந்த ஒரு இடை நிறுத்தமும் இல்லாமல் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.

தமிழ்நாட்டில் பொதுமக்கள் மத்தியில் சிறுநீரக பாதிப்பு தற்போது அதிகரித்து வருவதால், அதிக பணம் கொடுத்து தனியார் மருத்துவமனைகளில் 'டயாலிசிஸ்' செய்ய முடியாத ஏழைகள் அரசு மருத்துவமனை களுக்குத்தான் வருகின்றனர். அதனால் எங்களது பணி மிகவும் அவசியமாகும். இதனால், இரவுபகலுமாக நாங்கள் வேலை செய்கிறோம். இதனால், 'டயாலிசிஸ்' எந்திரங்களை அனுபவம் வாய்ந்த எங்களை போன்ற ஊழியர்களால்தான் இயக்க முடியும். எனவே, உங்களை பணி நிரந்தரம் செய்யும்படி கடந்த 2024–ஆம் ஆண்டு ஜுலை 24ஆம் தேதி அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பினோம்.

இதுவரை எந்த பதிலும் இல்லை. மேலும், தற்காலிக ஊழியர்களாக நாங்கள் நியமிக்கப்பட்டாலும், முறையான வழியில்தான் நியமன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. சட்டவிரோதமாக நாங்கள் நியமிக்கப் படவில்லை. அதனால், வேறு புதிய ஊழியர்களை அரசு நியமித்தால், அது எங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, எங்களை பணி நிரந்தரம் செய்யாமல், புதிய 'டயாலிசிஸ்' பணியாளர்களை நியமிக்க தடை விதிக்க வேண்டும். எங்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

இந்த மனுவை நீதிபதி ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா விசாரித்தார். மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் அமுதகணேஷ், கோபிநாத், சி.ஆனந்தராஜ் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். இதையடுத்து பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்று மனுதாரர்கள் கொடுத்த கோரிக்கை மனுக்களை தமிழ்நாடு சுகாதாரத் துறை செயலாளர், மருத்துவ கல்வி இயக்குனர் உள்ளிட்டோர் பரிசீலித்து 4 வாரத்துக்குள் தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**நன்றி: தினத்தந்தி 24.10.2025**

## 12 ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு-2025,வாஷிங்டன் டி.சி, அமெரிக்கா
## 12 ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**2025, அக்டோபர் 3 முதல் 5 வரை**

இம்மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தமிழர் பிரதிநிதிகள், தமிழர் ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி, கல்வி, தொழில், குடியேற்றம் மற்றும் உலகளாவிய அரசியல்–பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டுள்ளது:

### தீர்மானங்கள்

1. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளான தமிழ்நாட்டில் 1 டிரில்லியன் யூஎஸ் டாலர் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்த மாநாடு அனைத்து வகையிலும் உறுதுணையாக அமைய வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

2. உலகம் முழுவதும் 100 நகரங்களில் உலக தமிழர் சமூக பொருளாதார மையம் (International Tamils Social Economic Centre (ITC) உருவாக்க தமிழக அரசின் ஒத்துழைப்பையும் நிதியுதவியையும் வழங்க வேண்டும் என இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது. இதன் முதல் மையமாக நியூயார்க்கிலும் மற்றும் வாஷிங்டன் நகரிலும் தமிழ் மையத்தை உருவாக்குவதற்கு முயற்சி எடுப்பது என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது. தமிழ் மையம் தங்கும் விடுதி, உணவு விடுதி, நூலகம், கலைக் கூடம், கூட்ட அரங்கம், உள் விளையாட்டு அரங்கம் என அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருக்க வேண்டும். இதற்கான முயற்சியை இந்த மாநாட்டின் ஏற்பாட்டுக் குழு தலைவர் டாக்டர் ராஜன் நடராசன் மற்றும் இணைத் தலைவர் திரு.நெப்போலியன் ஆகியோர்கள் எடுக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொண்டிருக்கிறது.

3. பன்னாட்டு மொழியாகவும் உலக மொழியாகவும் வணிக மொழியாகவும் தமிழை உயர்த்திடவும், ஐ.நா. அலுவல் மொழியாகவும் தமிழை சேர்த்திடவும் தமிழ்நாடு அரசு, இந்திய அரசு உரிய முயற்சியினை எடுத்திட இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. சர்வதேச அளவில் புதிய தொழில்நுட்ப துறைகளில் (Artificial Tamils Economic Biotechnology, Renewable Energy, Space Tech முதலியவை) தமிழர் முதலீடு மற்றும் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

5. உலகத் தமிழர் விமான இணைப்பு முன்னேற்றக் குழு அமைத்து, தமிழக நகரங்களுக்கும் உலக முக்கிய நகரங்களுக்கும் நேரடி விமான சேவைகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதனை சென்னை வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து இக்குழு பணியாற்ற வேண்டும் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம் பெற வேண்டும்.

6. வெளிநாட்டு விசா மற்றும் குடியேற்ற சீர்திருத்தங்கள் குறித்து அரசுகளுடன் கலந்துரையாடும் நோக்கில் பன்னாட்டு தமிழர் பாதுகாப்பு மற்றும் வேலைக்குழு குழு உருவாக்கப்பட வேண்டும். இதனை அயலகத் தமிழர்நல வாரியம் மேற்கொள்ள வேண்டும்.

7. உலகத் தமிழர் கல்வி – ஆராய்ச்சி வழிகாட்டு மையம் நிறுவி, பொருளாதாரம், அறிவியல், தொழில், பண்பாடு உள்ளிட்ட துறைகளில் பன்னாட்டு அளவில் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இதனை தமிழ்நாடு அரசின் அயலக நலத்துறை மேற்கொள்ள வேண்டும்.

8. தமிழர் ஸ்டார்ட்–அப் எகோசிஸ்டம் உருவாக்கி, இளம் தமிழர்களின் தொழில்முனைவு முயற்சிகள் உலகத் தமிழர் முதலீட்டு நிதியால் ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்த பணியினை தமிழ்நாடு அரசின் தொழில் துறை மேற்கொள்ள வேண்டும் இதற்கு அயலக தமிழர் நல வாரியம் உதவ வேண்டும்.

9. உலகத் தமிழர் பொருளாதார வலையமைப்பு (Global Tamil Economic Network) நிறுவி, உலகம் முழுவதும் உள்ள தமிழர் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், நிபுணர்கள் ஒருங்கிணைக்கப் படவேண்டும். இதனை தமிழ்நாடு அரசு உலகப் பொருளாதாத நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

10. உலகத் தமிழர் வணிக சங்க கூட்டமைப்பு (Federation of Tamil Chambers of Commerce) உருவாக்கப்பட்டு, பன்னாட்டு அளவில் தமிழர் வணிக சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதனை பன்னாட்டு நிலையில் உள்ள வணிகச் சங்கங்கள் முன்னெடுக்க வேண்டும். இதனை தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை ஒருங்கிணைக்க வேண்டும்.

11. தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் உலகத் தமிழர் பொருளாதார கழகம் அனைத்து நாடுகளிலும் தமிழர் பொருளாதார மாநாடுகள் (ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா) ஆண்டுதோறும் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்.

12. தமிழர் சுற்றுலா மேம்பாட்டு திட்டம் உருவாக்கி, பாரம்பரிய மற்றும் பண்பாட்டு இடங்கள் உலகத் தமிழர்களால் அறியப்பட வேண்டியது உறுதி செய்யப்பட வேண்டும்.

13. உலகத் தமிழர் வணிக தகவல் தளம் (Global Tamil Business Portal) உருவாக்கப்பட்டு, தொழில், முதலீட்டு வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

14. சமூக நலத்திட்ட நிதியம் உருவாக்கப்பட்டு, கல்வி உதவி, மருத்துவ உதவி, அவசர நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

15. தமிழர் உரிமைகள் பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டு, வெளிநாடுகளில் வாழும் தமிழர் அரசியல், சமூக, குடியேற்ற உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

16. உலகத் தமிழர் மீடியா நெட்வொர்க் நிறுவி, தொழில், பொருளாதாரம், கல்வி சார்ந்த தகவல்கள் உலகத் தமிழர்களுக்குப் பரவச் செய்யப்பட வேண்டும்.

17. தமிழர் பொருளாதார கலைச்சொல் அகராதி தொகுக்கப்பட்டு, பொருளாதார அறிவு தமிழில் பரவ வழி செய்ய வேண்டும்.

18. அடுத்த தலைமுறை தமிழர் தலைமைத்துவத் திட்டம் உருவாக்கப்பட்டு, அரசியல், பொருளாதாரம், சமூக நலத் துறைகளில் தமிழ் இளைஞர்கள் உலகளவில் தலைமை ஏற்க வழிகாட்டப்பட வேண்டும்.

19. சென்னையில் பன்னாட்டுத் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (International Tamil Entrepreneur Development Centre) நிறுவப்பட்டு, உலகத் தமிழர்களின் முதலீடு, தொழில் பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதற்கு உரிய இடம் சென்னையில் ஒதுக்கப்பட்டு அயலகத் தமிழர் தங்கும் விடுதி, மாநாட்டுக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம், கணினி மையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அயலகத் தமிழர்களின் பங்களிப்புடம் தமிழ்நாடு அரசு உருவாகக வேண்டும்

20. வெளிநாட்டுத் தமிழர் பயணிகள் வசதிகள் – தமிழகம் வரும்போது தங்கும் வசதி, மக்கள் சந்திப்பு மையங்கள், கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறும் வசதிகள் மாநில அரசுடன் இணைந்து ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் அயலகத் தமிழ்துறை மேற்கொள்ள வேண்டும்.

21. பன்னாட்டுக் கல்வி, வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி வாய்ப்பு வழிகாட்டும் அமைப்பு (Global Tamil Guidance Forum) உருவாக்கப்பட்டு, உலகம் முழுவதும் செல்ல தமிழ் மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு தன்னார்வ அடிப்படையிலும் அரசின் ஆதரவுடனும் வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும்.

22. உலகத் தமிழர் பொருளாதார கழகத்தின் கிளை அமெரிக்காவில் தொடங்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத்**
தலைவர், உலக தமிழர் பொருளாதார கழகம்
சென்னை வளர்ச்சிக்கழகம், சென்னை



THINK AHEAD. STAY AHEAD.
Bharath
UNIVERSITY
30 YEARS OF EXCELLENCE
RATING AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[Full time and Part time]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme | Scheduled Caste / Scheduled Tribe candidate | Parent being an Ex-servicemen | Physically Handicapped candidate | First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of November 2025**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly November 2025 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**




அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மேரிலேண்ட் மாநில துணை ஆளுநர் மாண்புமிகு திருமதி அருணா மில்லர் அவர்கள் மாநாட்டினை பாராட்டி மாநாட்டுத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். உடன் டாக்டர் ராஜன் நடராஜன், திரு.நெப்போலியன், திரு.ராஜாராம் சீனிவாசன், திரு.செல்வாஜெயராமன், திரு.எலிசா புலிவர்த்தி மற்றும் மாநில உயர் அலுவலர்கள்.



அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டு மலரை டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், டாக்டர் ராஜன் நடராஜன், திரு. நெப்போலியன், திரு. ராஜாராம் சீனிவாசன், திரு. செல்வா ஜெயராமன், திரு. எலிசா புலிவர்த்தி ஆகியோர் வெளியிட்டார்கள்.




சென்னையில் நடைபெற்ற விழாவில் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற 12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டு தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையினை விஐடி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஜி.விஸ்வநாதன் அவர்கள் வெளியிட்டார். முதல் நகலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.கே.எஸ். இளங்கோவன் பெற்றுக் கொண்டார். உடன் உலகத் தமிழர் பொருளாதார கழக தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், மாநாட்டு அமைப்பாளர் திரு.இராஜாராம் சீனிவாசன், முன்னாள் இந்திய தூதர் திரு.வி.மகாலிங்கம், ஜெம் நிறுவனத் தலைவர் திரு.ஆர்.வீரமணி.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**